
www.tamilarangam.net



இதழ் 105
செப்டம்பர் 12 - செப்டம்பர்25, 1996
விலை 7.00

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே- பாரதி


o முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள்! — புலிகள்

o ரெலோவின் இனவாதம்!

o உள்நாட்டுப் போரின் அரசியற் கோட்பாடுகள்

o புலித்தடை தீர்வல்ல

o முஸ்லிம்களின் அரசியல் இயக்கம்!





வவுனியா: பிணங்களின் காடோ?

90களில் ஈழத்து தமிழ் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டதா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்கிந்த நாட்டிலே" பாரதி

ஆசிரியர்குழு
சிவகுருநாதன்
சேரன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
ச.பாலகிருஷ்ணன்

வடிவமைப்பு
ஏ.எம்.ரஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 175/=
வெளிநாடு 30 U.S.$
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெருக்கே எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229

## கட்டாய இராணுவ சேவை இராணுவ அதிகாரிகள் பேச்சு!

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்,யுவதிகளைக் கட்டாய யுத்தப்பணிக்குச் சேர்த்துக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாகத் தேவையான ஆரம்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வெளிநாடுகளுடன் இப்போதே பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படைக்குத் தமது சுய விருப்பத்தின் பேரில் சேர்வது மிகவும் குறைவடைந்திருப்பதால் சட்டபூர்வ மட்டத்தில் இளைஞர், யுவதிகளைச் சேர்த்துக் கொள்வது கட்டாயமாக்கப்பட வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு பழக்கமற்ற இச்செயற்பாடு பற்றி ஆலோசனை பெறுவது, ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் உத்தரவொன்றின் மீது தற்போது நடைபெற்று வருகிறது.

அதன்படி நிரந்தர இராணுவம் உள்ள வெளிநாடுகளில், இளைஞர், யுவதிகள் கட்டாய சேவைக்குச் சேர்த்துக் கொள்வது பற்றி வெளிநாட்டிலிருந்து ஆலோசனை பெறுவதில் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் உயர் அதிகாரியொருவர் இலங்கையிலுள்ள சுவிஸ் ஸ்தானிகராலயத்துடன் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

நிரந்தர இராணுவத்தைக் கொண்ட சுவிஸ் இராணுவ சேவை தொடர்பாகவும், நித்திய ஒழுங்குமுறைகள் பற்றியும் இராணுவம் பூரணமாக ஆய்வு செய்துள்ளது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களைச்சேர்த்துக் வைத்துக் கொள்வது, அவ் வயதினர் திருமணமானதன் பின்பு இராணுவ சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய கால எல்லை பற்றியும் இராணுவ உயரதிகாரிகள் சுவிஸ் தூதராலயத்துடன்கலந்துரையாடியுள்ளனர்.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளை சேர்த்துக் கொள்ள அரசு அவசர தீர்மானமெடுத்ததற்கான காரணம் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியோர் பதினையாயிரம் பேர் திரும்பவும் இராணுவத்தில் வந்து சேராததாலாகும்.

இராணுவத்தை விட்டுச் சென்றவர்கள் இருபதினாயிரமாவதுடன், அரசினால் வழங்கப்பட்ட மன்னிப்புக் காலத்தினுள் திரும்ப வந்தவர்கள் நான்காயிரம் பேர் மட்டுமே எனத் தெரிய வருகிறது.

மன்னிப்புக் காலத்தினுள் இராணுவத்திடம் சரணடையாதவர்களைக் கைது செய்யவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐநூறைத் தாண்டவில்லையெனத்தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

*லக்பிம -19960901*

## தேவையானால் பத்திரிகைத் தடை!

அரசாங்கம் இப்போது எல்லா விடயங்களையும் விட முக்கியமானதாகக் கருதுவது யுத்தத்தில் வெற்றி பெறுவது பற்றியாதலால் அதற்கு பத்திரிகைப் பிரச்சாரங்களினால் பாதிப்பு ஏற்படுமானால் அவ்வாறான பத்திரிகைகளை நிறுத்துவதைக் கூடச் செய்ய வேண்டுமெனப் பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், விவசாயக் காணி, வன வளத்துறை அமைச்சருமான தி.மு. ஜயரத்ன தெரிவித்தார்.

பொ.ஐ.மு. அரசாங்கத்தின் இரு வருடப் பூர்த்தி தொடர்பாக ''லக்பிம'' பத்திரிகையுடன் நடைபெற்ற நேர்காணலொன்றிலேயே இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

யுத்தமானது குறிப்பிட்டளவு சர்வாதிகார நிலைமையொன்றை ஏற்படுத்தும், அவ்வாறான யுத்தச் சூழ்நிலையொன்றிலே செய்திகள் வெளியிடுவதிலும், சிவில் சுதந்திரத்திலும் சிற் சில எல்லைகள் போடப்படுவதால் பூரண ஜனநாயகமொன்று நிலவ முடியாதென அவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றம், வேலை வாய்ப்புக் குறைவு போன்ற தற்காலிக கஷ்டங்கள் இருந்தாலும், யுத்தத்தை வெல்வது வெகுசனங்களின் தேவையாகியுள்ளதாகவும், அவர்களுக்குத் தேவையானது யுத்தத்தில் வெற்றி பெறுவதே அன்றி அதற்குத் தடங்கல் ஏற்படும் விதத்தில் பத்திரிகைகளில் யுத்தச் செய்திகள் பிரசுரமாவதைப்பார்ப்பது அல்ல எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

*லக்பிம - 19960901*

## தொண்டர் படை கைவிடப்பட்டது!

இளைஞர்கள் பத்தாயிரம் பேரைக் கொண்ட ''சமுர்த்தித் தொண்டர் படையொன்றைக்'' கட்டியெழுப்பி வடபகுதியில் தொண்டர் படைக்கு அனுப்ப இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சு எடுத்த முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஆட்பலத்தை ஒன்று திரட்டும் நோக்கத்துடனேயே இச்சமுர்த்தித் தொண்டர் படையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் செய்யப்பட்டன.

''சமுர்த்தித் தொண்டர் படைக்கு'' இளைஞர்கள் பத்தாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அரசுக்குத் தேவையான் ஆட்களை ஒன்று திரட்டிக்கொள்ள முடியாது போய்விட்டது.

*யுக்திய- 19960908*

## வீரமும் தீரமும்!

கடற்படைக்குப் புதிய படையினரைச் சேர்த்துக்கொள்ள வெளியிடப்பட்ட பிரச்சார அறிவித்தலில் குறிபபிடப்பட்ட ''துட்டகைமுனு சந்ததியின் வீர(தீர)ப் புதல்வர்களே'' என்ற பிரச்சாரச் சுலோகத்துக்கு எதிராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், துறைமுகங்கள், கப்பல் புனர்நிர்மாண அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப்பும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவுக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அவ்வறிவித்தல் வெளியிடப்படுவதை உடனடியாக இடைநிறுத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

''துட்டகைமுனு சந்ததியின் வீர(தீர)ப் புதல்வர்களே'' என்ற பிரச்சாரச்சுலோகம் மாற்றம் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக ''அச்சமற்ற சந்ததியின் வீர(தீர)ப் புதல்வர்களே'' என மாற்றப்பட்டுள்ளது.

*யுக்திய - 19960908*

## தீர்வுத் திட்டம்:கருத்துக் கணிப்பு!

சர்வதேசக்குழுவொன்றை வரவழைத்து அரசின் அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக இலங்கையில் கருத்துக் கணிப்பொன்றை நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

இத்தீர்வுத்திட்டம் தொடர்பாக உத்தியோகப்பற்றற்ற மட்டத்தில் மக்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்த அரசு முன்பு தீர்மானித்திருந்தாலும் இப்போது அதனைக் கைவிட்டுள்ளதாக அறியக் கிடைக்கிறது.

இவ்வாறான மக்கள் கருத்துக் கணிப்பொன்றில் தோல்வியடைந்தால் அரசு நிலை குலைந்து போக இடமிருப்பதால் சர்வதேசமட்டக் குழுவொன்றினூடாகப் பூரண கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதென்பது அரசின் கருத்தாகும்.

*(லங்காதீப - 19960908)*

# யாழ்ப்பாணச் செய்திகள்

### குப்பை கூட்டவும் லஞ்சம்!

யாழ்ப்பாணத்தில் கொள்ளை லாபம், லஞ்ச ஊழல் மீண்டும் தலை தூக்கியுள்ளது. இராணுவத்தினர் தமக்குத் தேவையான வீதிகளில் (சென்றிகள் உள்ள வீதிகள்) மின் விநியோகம் செய்திருந்தனர். மீண்டும் குடியமர்ந்துள்ள மக்கள் தமது வீடுகளுக்கு இதன் மூலம் இலவசமாக மின்சாரம் பெற்று வந்தனர்.

ஆனால், மின் கம்பிகளை வீட்டுக்கு இணைத்த மின்சார சபை ஊழியர்கள்500 ரூபா முதல் 1000 ரூபா வரை கேட்டு பெறுகின்றனர். தற்போது மின்இணைப்பு வேலைகள்பரவலாக நடைபெறுகின்றன. ஆனால் மின்சார சபை ஊழியர்களுக்கு கொடுக்கவேண்டியதை கொடுக்க வேண்டும். இல்லையேல் மின்இணைப்பு கிடையாது.

யாழ் போதனா வைத்தியசாலைக்குள் கண்டபடி எவரும் செல்ல முடியாது. நோயாளி ஒருவரைப் பார்க்க இருவருக்கே அனுமதி. ஆனால், காவலாளிக்கு ஏதும்கொடுத்தால் எவரும்போகலாம்.

வலிகாமத்துக்கு மக்கள் மீளக்குடியேற வந்தும் சில இடங்களுக்கு போகமுடியவில்லை. அவர்கள் தமது பிள்ளைகளை முக்கிய பாடசாலைகளில் சேர்க்க வேண்டிய நிலை. இதற்கும் லஞ்சம் கொடுத்தாலே அனுமதி கிடைக்கிறது.

மாட்டிறைச்சிக்கடைகள் சின்னக் கடையில் இராணுவ முகாமுக்கு அருகில் இருந்ததால்மூடப்பட்டுள்ளன. அதனால் வீடுகளிலும் தெருவோரங்களிலும் மாட்டிறைச்சி விற்கப்படுகிறது. ஆரம்பத்தில் கிலோ60 ரூபாவாக விற்ற மாட்டிறைச்சி இப்போது 90 ரூபா, 100ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

இனி பிறப்புச்சான்றிதழ் பெறுவதற்கு 100 ரூபா, 150ரூபா கொடுத்தால் விண்ணப்பித்து அன்று மாலையே கிடைக்கும் தற்போது யாழ்ப்பாணத்தில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க பிறப்புச் சான்றிதழ் தேவை. ஆனால், பிறப்புச் சான்றிதழ் மரண சான்றிதழ், திருமணப் பதிவுச்சான்றிதழ் பெற எவரும் தலையிடக்கூடாது. கைக்கூலி வாங்கக் கூடாது என யாழ் அரச அதிபர் சுற்று நிரூபம் மூலம் அறிவித்துள்ளார். அப்படியிருந்தும் பகிரங்கமாக லஞ்சம் வாங்கப்படுகிறது. அத்துடன் செயலகத்தில் விற்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

குப்பை கூழங்களை அகற்றும் பணி மாநகர சபை ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகிறது. வீடுகளில் உள்ள குப்பைகளை அகற்ற 50 ரூபா கேட்கின்றனர். இப்படியாக எதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது.

### புலி யுகத்தை விட புதுயுகம் மோசம்!

முன்னர் புலிகள் இருந்தபோது கிளாலியில்படகில் ஏற்றி இறக்கி பின்னர் லொறியில்ஏற்றி இங்கு இறக்க கூலி என்று கூறி கொழும்பு விலையை விட மூன்று மடங்காக விலைகொடுத்து மக்கள் பொருட்களை வாங்கினர்.

ஆனால், இன்று கப்பலில் பொருட்கள் வருகிறது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திடம் 15 ரூபாவுக்கு வாங்கிய நூடில்ஸ் பைக்கற்றை 30 ரூபாவுக்கு வியாபாரிகள் விற்கின்றனர். புலிகள் இருந்த போது நூடில்ஸ் பைக்கற் 25 ரூபா இனி சீனியின் விலை 40 ரூபா. ரொபி கொழும்பு விலை 1ரூபா. இங்கு 2 ரூபா. தீப்பெட்டி முன்னர் 2 ரூபா 50சதம். தற்போது 5ரூபா 6ரூபா லெமன்பவ் 40ரூபா; 45ரூபா இவ்வாறாக பொருட்கள் மூன்று மடங்கு விலையில் விற்கப்படுகின்றன.

உணவுக்கடைகளிலும் முன்னர் விறகு, எரிபொருள், தேங்காய் எண்ணெய் விலை போன்றவற்றால் வடை, தோசை, இடியப்பம் போன்ற பண்டங்கள் அதிகரித்து விற்கப்பட்டன. ஆனால், தேங்காய் எண்ணெய் 58ரூபாவுக்கு விற்றும் வடை முன்னர் போல் 6 ரூபா. கடலை உழுந்து மலிவாக விற்கப்பட்டும் வடை இந்த விலை.

விலை அதிகரிப்பை குறைக்க அரசாங்க அதிபர் எஸ் பத்மநாதன் மாநாடு நடத்தினார். வர்த்தகர்கள் வந்தனர். கப்பலில் கொண்டு ஏற்று இறக்கு கூலி அதிகம். அதனால் குறைத்து விற்க முடியாது என வியாபாரிகள் கூறிவிட்டனர். இனி வியாபாரிகள் சனி, ஞாயிறு, போயா மற்றும் விடுமுறை தினங்களிலும் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்கின்றனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளோ, தொழில் திணைக்கள அதிகாரிகளோ எதுவித நடவடிக்கைகளும் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

வர்த்தக திணைக்களம் தற்போதைய அரசாங்க அதிபரால் முன்னர் திட்டப் பணிப்பாளராக இருந்த போது ஏற்படுத்தப்பட்டது. இன்றும் அவரின் கண்காணிப்பின் கீழ் அது இயங்குகிறது. வர்த்தக திணைக்களத்தின் கிளைகளிலும் பொருட்கள் நாலுக்கு ஒரு விலை அதிகரித்து விற்கப்படுகிறது.

### இராணுவ காவல் நிலைக்கருகில் கசிப்பு!

சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அரசு கூறுகிறது. மதுவரித் திணைக்களம் சில சட்டவிரோதகள் விற்பனை செய்வோரை மட்டும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தது. நீதிவான் 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். ஆனால், மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் சில கசிப்பு விற்பனையாளர்களை பிடிக்க முயவில்லை. காரணம் சில கசிப்பு விற்பனை இராணுவ சென்ரிகளுக்கு அருகில் நடைபெறுகின்றன.

பஸ்ரியன் சந்தியில் ஒரு கசிப்பு விற்பனை நிலையம், சதொசவுக்கும், சென் சாள்ஸ் மகா வித்தியாலயம் அருகிலும் ஒரு கசிப்பு விற்பனை நிலையம். சிவில் உடையில் வருவோர் மற்றும் பலர் இவற்றில் வந்து கசிப்பு அருந்துவதை யாவரும் காணலாம்.

### வீடுகள் வீடியோ திரையரங்குகள்

வீடியோ திரைப்படம் கட்டுப்பாடு இன்றி காண்பிக்கப்படுகிறது. வீடுகள் திரையரங்குகளாக மாறுகின்றன. ஆட்கள் இல்லாத வீடுகளை எடுத்து சிலர் இதனை ஒரு தொழிலாக நடாத்துகின்றனர்.

யாருமே தட்டிக்கேட்க முடியாத படியால் இவை எல்லாமே நடக்கிறது. இனி விபச்சராம் ஒன்றுதான் பாக்கியாக உள்ளது.

*கரவையூரான்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை: மனித உரிமையில் முன்னேற்றமில்லை!

**—சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் இளைஞரான கணபதிப்பிள்ளை சதீஸ்குமார் சவுதி அரேபியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பி வந்திருந்தபோது கொழும்பிலுள்ள அவரின் வீட்டில் வைத்து இராணுவத்தால் 1996ஆம் ஆண்டு மார்ச்மாதம் 07ந்திகதி கைது செய்யப்பட்டதன் பின்பு 'காணாமற் போய் உள்ளார்'. அதிர்ஷ்டவசமாக, சதீஸ்குமார் இரு வாரங்களுக்குப் பின் மார்ச் 23ஆந் திகதி விடுவிக்கப்பட்டார். 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இவ்வாறு கைது செய்யப்பட்ட ஆகக் குறைந்தது 60பேர்காணாமற் போயுள்ளனர்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1994ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பதவிக்கு வந்தது முதல் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனது கடப்பாடு பற்றித் திரும்பத் திரும்பக் கூறிவந்தது. சித்திரவதைகளையும், ''காணாமற்போவதையும்'' தடுக்கும் முறைமைகள் பலவற்றையும் அறிமுகப்படுத்தியது. எவ்வாறெனினும் கடும் மனித உரிமை வன்முறைகள் தொடர்வதையே சர்வதேச மன்னிப்புச் சபைத்தூதுக்குழு கண்டறிந்து கொண்டது. 1995ஆம் ஆண்டு ஏப்ரலில் பாதுகாப்புப் படையினருக்கும், பிரதான ஆயுதமேந்திய தமிழ் எதிர்க்குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குமிடையே மீள ஆரம்பிக்கப்பட்ட சண்டையின் பேரின் கீழேயே அவற்றுள் அநேகமானவை நிகழ்ந்துள்ளன.

பரந்தளவிலான மொத்த, முறைப்படுத்தப்பட்ட வன்முறைகளுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடங்களை விடக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவு முன்னேற்றமெதனையும் காண முடியவில்லை. மனித உரிமைகளுக்கான கடப்பாடாக அரசாங்கத்தால் கூறப்பட்டவை நடைமுறைப் படுத்தப்படவில்லையென சர்வதேச மன்னிப்புச்சபை கருதுகிறது.

மனித உரிமைகள் குழு, ஐக்கிய நாடுகள் செயற் குழு உட்பட தேசிய சர்வதேசிய மனித உரிமைகள் அமைப்புக்கள் மனித உரிமைகளைப் பேணுவதற்கான ஆதரவு திரட்டிய போதும், காணாமல் போதலுக்கெதிராக இது தொடர்பாக அரசாங்கம்பல சட்டத் திருத்தங்களைச் செய்ய மறுப்பதானது சர்வதேச அளவுகோல்களை விடமிகக் குறைந்த மட்டத்திலேயே அது உள்ளது என்பதனைக் குறிக்கிறது. அத்துடன் சித்திரவதைகள், தடுப்புக் காவலில் கொலை செய்யப்படல், காணாமற்போதல், சட்டவிரோத மரண தண்டனைகள் ஆகியவற்றுக்கு வசதியமைத்துக்கொடுத்துள்ளது.

1996 ஜூன் மாதம் வடகிழக்குக்கு வெளியே ''காணாமற்போதல்'' பற்றியும் மனித உரிமைகள் வன்முறைகள் தொடர்பாகவும் விசாரணை நடத்தவென நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் மூன்றில் இரண்டிடம், அவைகளுக்கு முன்னால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் அரைவாசிக்கு மேல் விசாரணை செய்யப்படாமல் இருக்கும் போதே விசாரணையை அம் மாத இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைக்குப் பலத்த எதிர்ப்பு இருந்ததனால் 1996 செப்டம்பர் இறுதிவரை மேலும் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமை வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்களிப்பதானது மிகுந்த விசனத்திற்குரியதாகியுள்ளது. காணாமற்போதல், சட்டவிரோத மரண தண்டனைகள் தொடர்பாக குற்றவாளிகளாகக் காணப்பட்ட பாதுகாப்புப் படையினருக்கு எதிரான சில வழக்குகள் மந்தமாவே உள்ளன. கடந்த 13 வருடங்களுக்கு மேல் கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன பல பத்தாயிரக்கணக்கானோரின் உறவினர்கள் இன்னும் நீதி கிடைக்கும் என நம்பிக் காத்துள்ளனர்.

1995 ஏப்ரல் முதல் பாதுகாப்புப் படையினர் ஆயிரக்கணக்கான மக்களை சட்ட விதிகளுக்கு முரணாகத் தடுத்து வைத்ததுடன், சித்திரவதைகளுக்கும், 12 ற்குக் குறையாதவர்களின் காணாமற் போதலுக்கும், சட்டவிரோத மரண தண்டனைகளுக்கும் பொறுப்பாக இருந்துள்ளனர். பல காணாமற்போதல் சம்பவங்களுக்கும், சட்டவிரோத மரண தண்டனைகளுக்கும் பொறுப்பானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தமிழ் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களாவர், குறிப்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOTE), தமிழீழ விடுதலை இயக்க (TELO) உறுப்பினர்களாவர். இவர்கள் முழுமையாகத் தண்டனைகளிலிருந்து விலக்கீட்டுரிமை பெற்றவர்களாகச்சில பகுதிகளில் இயங்க அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தடுப்புக் கைதிகளின் நலன்களைப் பாதுகாக்க 1995 நடுப்பகுதியில் அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்ட சில பாதுகாப்புக்கள்; குறிப்பாக ஜூலை மாதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் முழுமையாகப் கடைப்பிடிக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் கடும் மனித உரிமை மீறல்கள் பற்றிய சான்றுகளையும் சர்வதேச மன்னிப்புச் சபைத் தூதுக்குழு கண்டுள்ளது. அவையாவன; வேண்டுமென்றே அப்பாவிச் சிங்கள மக்களைக் கொலைசெய்தல், ''துரோகிகள்'' எனக் கருதப்படும் தமிழ் மக்களின் மீதான மரண தண்டனை, கைதிகளைச் சித்திரவதை செய்வதும், கீழ்த்தரமாக நடத்துதலும், சிலவேளைகளில் சிறுவர்களை வற்புறுத்தி இராணுவக் குழுவில் சேருமாறு கட்டாயப் படுத்துவதுமாகும். பணயக் கைதிகளாகப் பலரைக் கடத்தி வைத்திருக்கும் சம்பவங்கள் பற்றிய சான்றுகளும் சர்வதேச மன்னிப்புச் சபையினால் பதியப்பட்டுள்ளன.

இலங்கையில் மனித உரிமைகள் மிகுந்த இக்கட்டான நிலையில் உள்ளன. அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனது கடப்பாடு குறித்து திரும்பத்திரும்ப வெளிப்படுத்தியுள்ளது. எனினும் அது அடுத்த வருடத்திலும் அதற்குப் பின்னும் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்போகிறது என்பதிலேயே இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது தீர்மானிக்கப்படும். கடந்த கால மனித உரிமைகள், வன்முறைகள் பற்றி பொது மக்கள் ஏற்றுக் கொள்ளும் நடைமுறையை அரசாங்கம் முன்னெடுப்பதும் அவற்றுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்துக்கு முன் கொண்டு வருவதும் அது குறிப்பிட்ட கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கான முக்கியமானதொரு சோதனையாக அமையப் போகிறது.

விடுதலைப் புலிகள் அப்பாவிப் பொது மக்களை வேண்டுமென்றே கொலை செய்வதை நிறுத்துமாறும், அதன் உறுப்பினர்களதும் ஏனைய மனித உரிமை மீறல்களையும் உடனடியாக நிறுத்தத்துக்குக் கொண்டு வருமாறும் எப்போதும் மனித உரிமைகளுக்கு ஒரு தெளிவான கடப்பாட்டை பிரகடனப்படுத்துமாறும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுகிக்கறது.

*(சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையிலிருந்து)*

*தமிழில்: சி.செ.ராஜா*

## வவுனியா:பிணங்களின் காடோ!?

வவுனியா சிதம்பர அகதி முகாமில் இரவு பகல் கண் துஞ்சாது அகதிகளுக்கு சேவையாற்றி வந்த ஸ்ரீதரன் கழுத்து வெட்டப்பட்டு வீதியொன்றில் பிணமாய்க் கிடந்தான். ஸ்ரீதரனின் படுகொலைக்குப் பின் வவுனியா குடிமக்களின் அச்சம் ஆயுதபாணிகள் தொடர்பாய் அதிகரித்தவண்ணமிருக்கின்றன.

பொழுது சாய்ந்து பொழுது புலப்படும் அநேக சமயங்களில் வவுனியா நகரில் அல்லது வவுனியாவைச் சுற்றிய ஏதாவதொரு கிராமமொன்றில் இனந்தெரியாத சடலங்கள் வீதிகளிலும், குழிகளிலும் சாக்கடைகளிலும் கிடக்கின்றன.

வவுனியா பத்திரிகையாளர் மாணிக்கவாசகர் அண்மையில் ஆயுதபாணிகளால் படுகொலை செய்யப்பட துரத்தப்பட்டு தெய்வாதீனமாக உயிர் தப்பினார். இவ் அச்சங்களின் மத்தியில் செப். 5ம் திகதி வவுனியா நகரசபைக்கு அருகாமையில் 30 வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனின் சடலம் முகம் முற்றாக சிதைக்கப்பட்டு கிடந்தது. யாரிடம் சொல்லி அழுவது இத்துயரை, இக்கொடுரத்தை என அச்சம் கொண்டு கலங்கி நிற்கின்றனர் வவுனியா வாசிகள்.

இச்சடலம் தொடர்பான செய்தி வவுனியா எங்கும் பரவத் தொடங்கியவுடன் இச்சடலம் தொடர்பான விபரங்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அண்மையில் திருமலையில் ரெலோ காரியாலயத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் திருமலை ரெலோ பொறுப்பாளர் பாஸ்கரன் கொல்லப்பட்டார். இக்கொலை ரெலோவினுள் நடந்த உட்கட்சி மோதலின் விளைவே என்றும், அதன் பின் திருமலையில் உள்ள ரெலோவைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் பாஸ்கரனின் சொலை தொடர்பாக விசாரணைக்கென வவுனியாவுக்கு பலாத்காரமாக அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரெலோவைச் சேர்ந்த உறுப்பினர்களான செல்வம், ரகு, பீற்றர், செந்தோழன் என்பவர்களில் ஒருவர்தான் வவுனியா நகரசபைக்கருகில் பிணமாய் கிடப்பவர் என்ற செய்தி வெளிவந்திருக்கிறது. இயக்கங்களின் உட்கட்சி கொலைகளை அரங்கேற்றும் பலிபீடமாக வவுனியா நகர் மாறிவிட்டதா என மக்கள் அஞ்சுகின்றனர். புளொட் அமைப்பைச் சேர்ந்த திருமலைப் பொறுப்பாளர் அர்ஜுனாவும் புளொட்டால் விசாரணைக்கென வவுனியாவுக்கு அழைக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பதும் அறிந்ததே.

*இராசன்*

## திருமலை நகரசபையும் ஓட்டோச் சாரதிகளும்!

திருகோணமலை அரசாங்க வைத்தியசாலைக்கு அருகில் இருந்த ஓட்டோ தரிப்பு நிலையம் திடீரென பொலிஸாரின் துணையுடன் அகற்றப்பட நகரசபை நடவடிக்கை எடுத்ததன் விளைவால் ஓட்டோ தரிப்பதற்கு அரசாங்க வைத்தியசாலைக்கு அருகில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவால் ஓட்டோ சாரதிகள் கணிசமான வருமானத்தை இழந்து அல்லலுறுகின்றனர்.

மீண்டும் பழைய இடத்தில் ஓட்டோ நிறுத்துவதற்கு அனுமதிக்கக் கோரி கடந்த 10ம் திகதி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஓட்டோ சாரதிகள் சங்கம் தீர்மானித்து பொலிஸாரின் அனுமதிக்குச் சென்ற போது என்ன காரணத்திற்காக அவ்விடத்தில் ஓட்டோ நிறுத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என பொலிஸ் பொறுப்பதிகாரியை வினவினர்.

ஓட்டோ தரிப்பு நிலையத்திற்கு சில யார் தொலைவில் திருமலை நகரசபை தலைவரின் வீடு இருப்பதால் சூரியமூர்த்தியின் பாதுகாப்பைக் கருதி அவர் வேண்டிக் கொண்டதன் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். அத்துடன் அடையாள வேலை நிறுத்தம் செய்வதற்கு அனுமதிக்க முடியாது எனவும் மறுத்துவிட்டார்.

இதன் பின் தான் ஓட்டோ சாரதிகளுக்கு சங்கதி புரிந்தது. சூரியமூர்த்தியின் குடும்பத்தவர்கள் ஓட்டோவில் பயணம் செய்து விட்டு கேட்கும் தொகையை தருவதில்லை எனவும் நகரசபைத் தலைவரின் குடும்பமென மார்தட்டுவதாகவும் இதனால் ஏற்பட்ட மனக்கசப்பின் எதிரொலியாக நகரசபைத் தலைவரால் பழிதீர்க்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கினறனர்.

நோயாளிகள் இவ்விடத்தில் ஓட்டோ இல்லாததால் கஷ்டப்படுகின்றனர். ஓட்டோ நிலையம் இப்போது சின்ன முற்றவெளியில் இருக்கிறது. நோயாளிகளோ நீண்டதூரம் நடக்க வேண்டிய நிலை ஓட்டோவுக்காக.

*தே.சாறு*

## அரச அதிபரும் உடந்தை!

திருகோணமலையில் லிங்கநகர் என்ற இடத்தில் மீள்குடியேற்றக் கிராமம் ஒன்று அமைந்துள்ளது. அகதிகளாக அங்குமிங்கும் அலைந்து அலுத்துப்போனவர்கள். வாடகை வீட்டில் குடியிருந்து அகதிகளாகி மீண்ட போது வீடு மறுக்கப்பட்டு நிர்க்கதியானோர். சொந்த இடங்களைக் காவு கொடுத்து விட்டு அலைந்தோர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட மீள் குடியேற்றமே இக்கிராமம்.

இதில் சுமார் 250 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தப் பகுதியை தனது பயிற்சி நிலையமென்று இராணுவம் கூறி வருகிறது. காணித்திணைக்கள அதிகாரிகளோ பயிற்சி நிலமாகப் பயன்படுத்த இராணுவத்திற்கு தற்காலிக அனுமதிதான் வழங்கப்பட்டது. எனவே, இராணுவம் அதில் எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது என்று கூறுகிறார்கள்.

உடனடியாக காணிகளை விட்டு வெளியேறுமாறு இராணுவம் ஒலிபெருக்கி மூலம் பல தடவை கூறியிருக்கிறது. திடீரென ஒரு நாள் இரவு அங்கு வந்த இராணுவத்தினர் சத்த வெடிகள் வைத்து மக்களைப் பயமுறுத்தியுள்ளனர். இவை ஆறு மாதத்துக்கு முந்திய சம்பவம்.

ஆனால், கடந்த 28.8.1996 அரசாங்க அதிபர் எச்.டி. சந்திரதாச புதுவிதமான செயற்பாடொன்றில் இறங்கியமை மக்கள் மத்தியில் கலக்கத்தை உண்டு பண்ணியுள்ளது.

திடீரென பத்து கிராம உத்தியோகத்தர்களை அனுப்பி அங்குள்ள மக்களின் விபரங்களைத் திரட்டியிருக்கின்றார். கிராம உத்தியோகத்தர்களுக்கோ தாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்ற விபரங்கள் கடைசி நிமிடம் வரை தெரியாமல் மறைக்கப்பட்டே இருந்திருக்கிறது. லிங்கநகரில் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று கிராம உத்தியோகத்தர்களைப் பாவித்த அரசாங்க அதிபர் பொலிஸ் இராணுவம் புடைசூழ அவர்களை அனுப்பிவைத்திருக்கிறார். பொலிஸார் சகிதம் வீடு வீடாகச் சென்று கிராம உத்தியோகத்தர்கள் விபரங்களைத் திரட்டியுள்ளனர்.

அரசாங்க அதிபரால் அனுப்பப்பட்ட படிவம் ஒன்றிலேயே ஒவ்வொரு குடும்பத்தவர் விபரமும் வெகு கவனமாக பதியப்பட்டு இருக்கின்றது. பெறப்பட்ட விபரங்கள் அனைத்தும் காணியில் குடியிருக்கும் உரிமையை இல்லாமல் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. விபரங்களைப் பெற்றுக்கொடுத்த கிராம உத்தியோகத்தர்கள் பலர் சோர்ந்த மனத்தினராகவே காணப்பட்டனர்.

முஸ்லிம்களின் மையவாடிகளில் அடாத்தாகக் குடியிருப்போருக்கு பாதுகாப்பளித்து ''உறுதி தருகிறோம் இடம் பெயர வேண்டாம்'' என்று ஊக்கப்படுத்திய ஒருவரே இச்சம்பவங்களின் சூத்திரதாரி எனக்கூறப்படுகிறது.

லிங்கநகர் முன்பகுதியில் தனியார் காணியொன்றில் சிங்களவர்கள் குடியேறி இருந்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*விவேகி*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கம்

## -சில சிந்தனைகள்

ஆர்.எம்.இம்தியாஸ்

இலங்கையில் முஸ்லிம் தேசியவாதமானது ஒரு விபத்தல்ல. எவ்வாறு தமிழ்த் தேசியவாதம்திட்டமிடப்பட்ட அரசியல் சமூக, பொருளாதாரக் காரணிகளால் உருவாக்குவிக்கப்பட்டதோ அவ்வாறே முஸ்லிம் தேசியவாதமும் உருவாகி வருகிறது. பொதுவான சிங்களப் பேரினவாதத்தாலும், குறிப்பான தமிழ்த் தேசியவாத குறுந்தன்மைகள் காரணமாகவும் இலங்கையில் முஸ்லிம் தேசியவாதம் வட, கிழக்கு பகுதிகளைச்சார்ந்து ஆர்ந்தெழுந்தது. இவ்வாறான முஸ்லிம் தேசியவாதத்தை தவிர்க்க முடியாத சூழலில்வழி நடத்திய பெருமை முஸ்லிம் காங்கிரசினையேசாரும்.

இலங்கையில் முஸ்லிம்கள் சகல செளபாக்கியங்களுடன் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்று காலம் காலமாக உலகுக்குக் கூறப்பட்டு வந்தது. இவ்வாறான கற்பிதங்கள் மிகவும் திட்டமிட்டு ஒரு சில முஸ்லிம் செல்வந்தர்களினைச் சுட்டி முழு முஸ்லிம்களது நிலையாகவும் வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறான கருத்துக்கள்இலங்கையின்பிரதானமான சிங்களப் பேரினவாதக்கட்சிகளால் பரப்பப்பட்டன. இப்பிரச்சாரத்துக்காக தலைநகரில்வாழும்மேட்டுக்குடி முஸ்லிம் தலைவர்கள் முன்கொணரப்பட்டார்கள். முஸ்லிம்களின் மெய்யான இருப்பை மறுதலித்து கற்பிதங்களினை முன்னெடுத்தமைக்காக இத்தலைவர்களுக்கு சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளை வழங்கினர். (முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அஷ்ரஃப்பின் வார்த்தைகளில் கூறுவதாயின் முழு அமைச்சகப்பதவிகள், அரை அமைச்சகப்பதவிகள், கால் அமைச்சகப் பதவிகள் எனப்பதவிகள் வழங்கப்பட்டன. )எனினும் முஸ்லிம்களின் இருப்பு இவர்களின் கூற்றுக்களுக்கு அப்பால்வேறுவிதமாகக்காணப்பட்டன. எவ்வாறாயினும் தனிக்கட்சியின் அவசியம்பற்றிய வற்புறுத்தல்களுக்கான நியாயங்கள் 80களின் பிற்பகுதி வரை உருவாக்கப்படவில்லை.

80களின் பிற்பகுதி என்பது இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு நெருக்கடியான காலமாகும். இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு இலங்கை அரசியலில் எதிர்விளைவுகள்தோன்றின; இனப்பகைமைகள் கூர்மையடைந்தன. இனப்பிரச்சினையில் மூன்றாம் நிலையில் காணப்பட்ட வடகிழக்கு முஸ்லிம்கள் ஈழப்போரில் கட்டாயப்படுத்தப்பட்டு உள் அழைக்கப்பட்டார்கள். சிங்களப் பேரினவாதத்தின் மறைமுகத் தாக்குதலுக்கு உள்ளாகிய முஸ்லிம்கள் தமிழ்க்குறுந் தேசியவாதத்தின் பகிரங்க வன்முறைகளுக்கு உள்ளாகினார்கள். இதன் காரணமாக நிபந்தனையற்ற முறையில் வழங்கப்பட்ட தமிழ் மக்களுக்கான போராட்ட ஆதரவுகள் வாபஸ் பெறப்பட்டன. அல்லது சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டன. இதன் இறுதிக்கட்டவிளைவே முஸ்லிம் அரசியலில், தனிக்கட்சி பற்றிய அபிலாஷையாகும். முஸ்லிம்கள்தம்மை ஒரு தேசமாக அடையாளப்படுத்திய பிறகு ஒழுங்கமைக்கப்பட்ட முதலாவது அரசியல் பணி தமக்கான தனிக்கட்சி ஒன்றை அமைத்ததே என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

முஸ்லிம்கள் அரசியலில் ஆர்வமற்றவர்கள். முஸ்லிம்களுக்கு எப்பிரச்சினைகளும் இல்லையென்ற பாரம்பரிய சுலோகங்களுக்கு தனிக்கட்சி பற்றிய முடிவு பெரும் ஆச்சரியத்தை வழங்கியிருக்கலாம். எனினும் முஸ்லிம்களின் இருப்பை நுணுக்கமாக உணர்ந்தவர்களுக்கு இது ஆச்சரியமான முடிவாகத் தென்படவில்லை.

முஸ்லிம்களது வேதனையான அரசியல் இருப்பை எம்.எச்.எம்.அஷ்ரஃப் போன்றோர் நன்கு உணர்ந்தார்கள். இதன் காரணமாகத்தான் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. முஸ்லிம்கள் தமது இருதரப்பு அநியாயங்களைச் சமாளித்து தற்பாதுகாப்புக்காக ஏங்கியதனை யாரும் பிழையாகக் கூறமுடியாது. இவ்வடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸுக்கு அமோகமான ஆதரவினை வழங்கியது அதிசயமானதும் அல்ல. முஸ்லிம் காங்கிரசின்ஆரம்பகாலச் செயற்பாடுகள் முஸ்லிம் தேசியவாதத்தேவைகளினை ஓரளவு புரிந்து கொண்டு முன்னெடுக்கப்பட்டன. ஆயினும், முஸ்லிம்காங்கிரசின் வர்க்க அரசியல், பாராளுமன்ற அணுகுமுறைகள், காங்கிரஸ் மீதான முஸ்லிம்களின் அளவிலா நம்பிக்கை, முஸ்லிம் தேசியத்தை ஒழுங்காகப் புரிந்து கொள்ளத்தவறியமை ஆகிய காரணிகள் முஸ்லிம் காங்கிரசினை முஸ்லிம் தேசியத்தின்அடுத்த கட்ட வளர்ச்சிக்காக ஆயத்தப்படுத்துவதில் பின்னடையச் செய்துள்ளது. முஸ்லிம் காங்கிரசின் இன்றைய செயற்பாடுகளுள்பல முஸ்லிம் தேசிய அபிவிருத்திக்கு உதவப்போவதில்லை. வெறுமனே அடுத்த பாராளுமன்றத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டே முஸ்லிம் காங்கிரசின் அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக முஸ்லிம்தேசியத்தை முஸ்லிம்காங்கிரஸ் சந்திரிகாவின் மனித முக சிங்களப் பேரினவாதத்துக்கு முன்பு சரணடையச் செய்துள்ளது.

80களின் பிற்பகுதி என்பது இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு நெருக்கடியான காலமாகும். இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு இலங்கை அரசியலில் எதிர் விளைவுகள் தோன்றின. இனப்பகைமைகள் கூர்மையடைந்தன. இனப்பிரச்சினையில் மூன்றாம் நிலையில் காணப்பட்ட வடகிழக்கு முஸ்லிம்கள் ஈழப்போரில் கட்டாயப்படுத்தப்பட்டு உள் அழைக்கப்பட்டார்கள். சிங்களப் பேரினவாதத்தின் மறைமுகத் தாக்குதலுக்கு உள்ளாகிய முஸ்லிம்கள் தமிழ்க்குறுந் தேசியவாதத்தின் பகிரங்க வன்முறைகளுக்கு உள்ளாகினார்கள். இதன் காரணமாக நிபந்தனையற்ற முறையில் வழங்கப்பட்ட தமிழ் மக்களுக்கான போராட்ட ஆதரவுகள்வாபஸ் பெறப்பட்டன. அல்லது சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டன. இதன் இறுதிக் கட்டவிளைவே முஸ்லிம் அரசியலில், தனிக்கட்சி பற்றிய அபிலாஷையாகும்.

இவ்வாறான நிலைமைகள் முஸ்லிம் தேசத்தை, முஸ்லிம் தேசியத்தை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுக்க உதவுமா என்று வினவும் போது அது முரணான பதிலையே மிஞ்சவைக்கும். முஸ்லிம்தேசியத்தை முன்னெடுத்த முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பிழைகளுக்காக வடகிழக்கு முஸ்லிம்கள் மீண்டும்ஒரு முறை சிங்களப்பேரினவாத சார்புக் கட்சிகளை, அதன் முஸ்லிம் உறுப்பினர்களை ஆதரிப்பது எவ்வகையிலும் நன்மையானதாக அமையாது. ஆயின், வடகிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பணிகள் மூன்று ஆகும்.

1. முஸ்லிம் காங்கிரஸுக்குள் தற்போது ஆதிக்கம் செலுத்தும் அஷ்ரஃப்பின் தலைமையினை நிராகரித்து புதிய தலைமைத்துவத்தை உருவாக்குதல்.

அல்லது,2. நீண்ட கால நோக்கில் செயற்படும் அரசியல் இயக்கத்தைக் கட்டியமைத்தல்.

அல்லது,3.இன்னொரு கட்சியினை உருவாக்குதல்.

மேலே கூறப்பட்ட மூன்று பணிகளுள் முதலாவதும், மூன்றாவதும் நடைமுறையில் சாத்தியமற்றது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப், 'தகுதியானவர் தலைமையினைப்பொறுப்பெடுக்கலாம்' என்று வசீகரமான முறையில் கூறினாலும் அஷ்ரஃபுக்கு சவாலாகத் தோன்றும் எந்தப்பிரிவினரையும் கட்சி அனுமதிக்காது என்பதே முஸ்லிம் காங்கிரஸ் வரலாறாகும். ஆகவே கட்சிக்குள் புனரமைப்பு என்பது தற்போதைக்கு சாத்தியமாகாது. அதேவேளை கட்சி ஒன்றை உருவாக்கி பதிவதும் முஸ்லிம் அரசியல்தேவைகளினை ஈடுசெய்யாது. ஏனென்றால், ஒரு கட்சியானது அடுத்த பாராளுமன்றத் தேர்தலை முன்வைத்தே காய்களை நகர்த்தும். ஆதலால் கட்சியென்பது இன்னொரு முஸ்லிம் காங்கிரசையே அனுபவமாக்கும். ஆயின், அடிமட்டத்தில் நீண்டகாலத் திட்டமிடலில் இயங்கக்கூடிய அரசியல் இயக்கமொன்றை அமைப்பது மிகச் சரியானதாகும். இதுவே காலத்தின் தேவையுமாகும். இங்கு இயக்கம் என்பது ஆயுத அரசியலை கொண்டதாக அமையத் தேவையில்லை.

முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கம் முஸ்லிம்களினை நீண்டகாலத்தில் அரசியல் மயப்படுத்துவதற்கு உதவும். விடுதலையடைந்த தேசங்களின் வரலாறு இதனையே நிரூபித்துள்ளது. இவ் அரசியல் இயக்கம் கீழ் வரும் தேவைகளினை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது நாம் கட்சிகளில் கண்டுகொண்ட பிழைகளைத் தவிர்க்க உதவும்.

முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கம் கஷ்டப்படும் முஸ்லிம் விவசாயி தொழிலாளர்களினை தலைமைப்படுத்தி இயங்கவேண்டும். உயர் வர்க்க பண்புகளினை, பின்புலத்தை தலைமைத்துவம் கொண்டு காணப்படும் போது, அர்ப்பணிப்பு மிக்க போராட்டங்கள் சாத்தியமாகாது. இழப்பதற்கு எதுவுமில்லாத வர்க்கமே கஷ்டப்படும் தொழிலாளர், விவசாயிகள் ஆவார்கள்.

முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கமானது பரந்தமட்டத்தில் நீண்டகாலத் திட்டமிடலில் இயங்க வேண்டும். முஸ்லிம்கள் தொடர்பாக சரியான சகல விபரங்களையும் சேகரித்து முஸ்லிம்களுக்கான அரசியல் அறிவினை முஸ்லிம் தேசத்தில் வழங்கி முஸ்லிம்கள் மத்தியில விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். கடின உழைப்பு இதற்கு மகா முக்கியம். பாராளுமன்ற அரசியலினை நிராகரித்து மக்களினை வெகுசனஅமைப்பாக்கும் வேலைகளினை முன்னெடுக்க வேண்டும். பாராளுமன்றம் என்பது அடிப்படையிலேயே சிங்களப் பேரினவாதத் தன்மைகொண்டது. இதன் மூலம் முஸ்லிம்கள் உரிமைகளினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் அபிப்பிராயப்படவில்லை. இலங்கைப்பாராளுமன்ற அரசியல் சாதனை தான் தமிழ் மக்களது ஆயுதம் ஏந்திய போராட்டமாகும். ஆயின், முழுமையாக பாராளுமன்றத்தை நிராகரிக்க வேண்டும் என்பதில்லை. பாராளுமன்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதனை ஒரு கட்டத்துக்கு அப்பால் பயன்படுத்தலாம். ஆனால், இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் போன்று பாராளுமன்றத்துக்குப் பலியாகிவிடக் கூடாது.

முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கம் முஸ்லிம் தேசத்தையே உயர்த்திப் பிடிக்கவேண்டும். இலங்கையில் இஸ்லாமிய ஆட்சியை தோற்றுவிப்பதற்கு சமகாலத்தில் முயல்வது முயற்சிகளினை சீரழிக்கும். முஸ்லிம்கள் மத்தியில் இன்றுள்ள தேவை ஏகபோகத்தலைமை ஆட்சி அல்ல, மாறாக சமமான அரசியல் சமூக நிர்வகிப்பாகும். ஆதலால், இஸ்லாமிய அடிப்படைவாத கோஷங்களினைத் தவிர்த்து முஸ்லிம் தேசிய வாதத்தினை முன்னெடுக்க வேண்டும். இலங்கையில் சமானமான முறையில் வாழ்வதற்கு இதுதான் வழியுமாகும். தமிழ் தேசியவாத அமைப்புக்களுடன் சுமுகமான உறவுகளினைப் பேணுதல் அவசியமாகும். முஸ்லிம்களுக்கான உரிமை இயக்கம் தமிழர் போராட்டத்தை காட்டிக்கொடுத்து வளருதல் பெரும் ஆபத்தாகும். அத்துடன் தெற்கில் உள்ள சிங்கள முற்போக்கு சக்திகளுடனும் நல்லுறவுகளினைப் பேண வேண்டும். ஏனென்றால் கஷ்டப்படும் முஸ்லிம்களின் சரியான போராட்டங்களினை சரியான முறையில் கஷ்டப்படும் சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள். இலங்கையின் மத்திய ஆட்சியில் சிங்களப் பேரினவாதம் வெற்றிகரமாக இயங்குவதன்காரணமாக முழுச்சிங்கள மக்களினையும் எதிரியாக நோக்குவது பிழையாகும். முக்கியமாக, பொது எதிரியார், நண்பன் யார் என்பதனை அடையாளம் கண்டு, முற்போக்கு அணியினரை உறவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

முஸ்லிம்களுக்கான உரிமை இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் இங்கு முன்வைக்கப்பட்டுள்ள சில கருத்துக்கள் ஒரு சில ஆரம்பக்கருத்துக்கள் மட்டும் தான். இது பெரும் வரலாற்று தொழிற்பாடுகளினை உட்கொண்ட சமுதாயப் பொறுப்பாகும். இதனை மிகவும் கவனமாக கையாள வேண்டும். வெறும் உணர்ச்சிகளுக்கு அடிபணிந்து குறுகிய அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்டு , நடந்து கொள்வதினைத் தவிர்க்க வேண்டும். இலங்கை முஸ்லிம் சமுதாயம் ஆரோக்கியமான அரசியல் அபிவிருத்தியினை சொந்தமாக்க வேண்டும். அதற்காக இன்றைய முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தினை நேர்மையாக ஆதரிக்கும் அனைத்து மக்களும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்; தெளிவான ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*சொல்வதைத் தவிர வேறு வழியில்லை*

# டெலோவின் ஒடுக்குதலுக்கு சார்பான இனவாதக்குரல்!

அபுநிதால்

சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் பல தசாப்தங்களாக அடிமைப்பட்டு வாழ்ந்து வந்த, வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் தங்களுடைய விட்டுக்கொடாத போராட்டத்தின் ஊடாக இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய இனங்களின் உரிமைகளை சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கியே ஆக வேண்டுமென்ற நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்திருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் நியாயமாக சிறுபான்மை இனங்களுக்கான அதிகாரங்களை பகிர்ந்தளிக்கவேண்டிய சூழல், நிர்ப்பந்தம் எழுந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் அனைத்து மக்களும் சமத்துவமாகவும் சுதந்திரத்துடனும்சுயாதிபத்தியத்துடனும் வாழும் உரிமையை யாரும் மறுக்க முடியாததாகிறது. இவ்வுண்மையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் தீர்வில் முஸ்லிம்களுக்கும் நியாயமான தீர்வு வழங்கப்படவேண்டுமென்பதில் உண்மையான மக்கள் விடுதலையின் பேரில் அக்கறை கொண்ட போராட்டக்காரர்களுக்கும் அமைப்புகளுக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது!

முஸ்லிம்களின் கடந்தகால அரசியல் வரலாறு அவர்களை இன உரிமைகளுக்காகப் போராடுவதில் அக்கறைப்படாதவர்களாகவும், தெற்கு ஆட்சியாளர்களின் சலுகைகளுக்காக தங்களது அரசியலை பயன்படுத்த அனுமதி அளித்தவர்களாகவும் இருந்தனர் என்பதை வரலாறு தெளிவுடன் இனம் காட்டி நிற்கிறது. 1980க்குப்பின் வடகிழக்கில் ஏற்பட்ட சூழ்நிலைகளின் காரணமாய் தனி அரசியல்தலைமைத்துவத்தின் கீழ் அணி திரண்ட போக்கு முஸ்லிம்களின் அச்சம் காரணமாகவும் பாதுகாப்பற்ற நிலைகாரணமாகவும் ஏற்பட்டதன்றி வேறில்லை. முஸ்லிம் மக்கள் மத்தியில் இவ் அச்சத்தையும் பாதுகாப்பற்ற நிலையையும் ஏற்படுத்தியதில் பெரும்பங்கு வடகிழக்கில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து இயக்கங்களுக்கும் இருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் என்று தமிழர்களையும் முஸ்லிம்களையும் இணைத்திருந்த அடையாளத்தைத் தொடர்ந்தும் காப்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளாது முஸ்லிம்களை அச்சுறுத்தும் நிலை அதிகரித்ததன் பேரில் முஸ்லிம்களிடையே அச்சமும் பாதுகாப்பற்ற சூழலும் ஏற்பட்டது. இதன் விளைவால் காலாகாலம் தொட்டு தமிழர்களையும், முஸ்லிம்களையும் ஐக்கியப்படுத்தி நின்ற தமிழ் பேசும் மொழி எனும் அடையாளம் பின்தள்ளப்பட்டதாயிற்று. பல தசாப்தங்களைக் கொண்ட தமிழ் மக்களின் தனி அரசியல் தலைமை வரலாற்றின் ஊடே நிகழ்ந்த மிகவும் துரதிருஷ்டவசமான சம்பவங்களில் முதன்மையானதாகக் கொள்ளப்படக்கூடியது பெரும்பான்மையினரின் அடக்கு முறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த தமிழ்த் தலைமைகள் தங்களின் கீழ் சிறுபான்மையினராய் இருந்த முஸ்லிம்களை அடக்கமுற்பட்டதுதான். இதனால் ஏற்பட்ட நிகழ்வுகளின் விளைவுகளைக்கண்டவர்களின் மூலமும், மக்களின் சுதந்திரத்தின் மீதும் சமத்துவத்தின் மீதும் மனிதாபிமானத்தின் மீதும் அக்கறை கொண்டவர்களின் மூலமும் முஸ்லிம்களுக்கும் நியாயமான தீர்வு வழங்கப்படல் வேண்டுமென சொல்லாமல் இருக்க முடியவில்லை.

முஸ்லிம்களுக்கான தீர்வாக முஸ்லிம்கள் எதைக் கேட்கின்றார்கள் என்பதை முஸ்லிம்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரத்துடன் வாழும் உரிமையை எப்படி சிங்களவர்கள் தீர்மானிக்க முடியாதோ அதைப் போலத்தான் முஸ்லிம்கள் சுதந்திரத்துடன் வாழ்வதற்கான உரிமையை தமிழ் மக்கள் தீர்மானிக்க முடியாது என்பதை நியாயமான எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள். அதிகாரப் பகிர்ந்தளிப்பின் ஊடாக அதிகார அலகுகளை இந்த நாட்டில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் கொண்டிருக்கும் நிலையில் இந்த நாட்டில் அண்ணளவாக 8வீதம் வாழும் முஸ்லிம்களும் தங்களுக்கென தனியான அதிகாரங்களைக்கொண்டிருத்தலே பாதுகாப்பானதாக இருக்க முடியும். அந்த வகையில் முஸ்லிம்களுக்கான தனியான அதிகார அலகு பற்றிய தேவை முஸ்லிம்கள் மத்தியில் உணரப்படும் அதேவேளை சமத்துவத்தின் மீது நம்பிக்கைகொண்ட ஏனைய சக்திகளும் இதனை வரவேற்கின்றன.

இத்தனியான அதிகார அலகு எப்படி அமைய வேண்டுமென்பதில் உள்ள நியாயமான, சாத்தியமான பிரச்சினைகளையிட்டு விமர்சனம் செய்வதுதான் தார்மீகமே ஒழிய முஸ்லிம்களுக்கு தனியலகு தீர்வில் இருக்க முடியாது என சொல்ல முடியாது! முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகு பற்றிய விடயத்தில் தமிழர்களும் முஸ்லிம் மக்களும் நியாயமாக நடந்து கொள்வது என்பதானது வடக்கில் வாழும் முஸ்லிம்களை பாதுகாப்பதுடன் கிழக்கில் வாழும் அம்பாறை மாவட்ட தமிழர்களை பாதுகாப்பதுமாக இருக்கிறது. இவ்வுண்மையின் அடிப்படையில் ரெலோ தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் முஸ்லிம்களுக்கான தனியான அதிகார அலகு பற்றிய சிந்தனைக்கு இதுவரை தங்களது எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை. விடுதலைப் புலிகள் அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் வெளியிட்ட துண்டுபிரசுரத்தில் மொன்றில் முஸ்லிம்களை தனித்துவமான மக்களாக ஏற்றுக்கொண்டிருப்பதாக வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகுக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலம் தொட்டே ரெலோ தனது எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்திருக்கிறது. இவ் வெளிப்பாடானது சிங்கள தேசியவாதிகளினதும், இனவாதிகளினதும், தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமை வழங்கும் விடயத்தில் சிங்கள தேசியவாதிகளையும், இனவாதிகளையும், சார்ந்த ஒப்பீடாக ரெலோவின் கருத்தை முஸ்லிம்கள் விடயத்தில் பார்க்க வேண்டியதாக விருக்கிறது.

இந்த நாட்டில் நீண்ட காலமாக இனவாத்தை மூலதனமாகக் கொண்டு அரசியல் நடாத்திய, நடாத்தும் சிங்கள தேசியவாதிகளின், இனவாதிகளின் திறபடாதகண்களில் போன்று ரெலோவும் அதற்கேற்ப தன்னை ஒரு தமிழ் இனவாதத்தின் குறியீடாக வெளிப்படுத்தி நிற்பதானது முஸ்லிம்கள் சமத்துவத்துடன் சுதந்திரமாய் வாழ்தல் தொடர்பாய் எந்த வகையான நிலைப்பாட்டில் நிற்கின்றார்கள் என வினவத்தோன்றுகிறது.

விடுதலைப் புலிகள் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் போன்ற அரசியல் கட்சிகள் முஸ்லிம்களின் தனி அதிகார அலகு அல்லது தனித்துவம் தொடர்பாய் அக்கறைகொண்டிருக்கும் தருணத்தில் ரெலோவின் இனவாத வெளிப்பாடானது முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமல்லாது மக்கள் விடுதலையின்பால் அக்கறைகொண்ட அனைவருக்கும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தி இருக்கிறது. சிறில் மத்யூ, காமினி விஜேசூரிய, டொக்டர் ஹரிச்சந்திர, தினேஷ் குணவர்த்தன, நளின்த சில்வா, இனவாதத் தேரோக்கள் போன்ற தனிநபர்களும் அவர்கள் சார்ந்த பூமிபுத்திர, ஜாதிக சிந்தனய, தேசபிரேமி போன்ற இனவாத அமைப்புகளுடன் ரெலோவை நிறுத்துவதற்கான ஏதுக்களை கொண்டு வந்திருக்கிறது.

இனவாதம், மதவாதம் இந்த நாட்டில் ஏற்படுத்திய தாக்கங்களையும் கொடுமைகளையும் உணராமல் அல்லது உணரவில்லை என பாசாங்கு செய்து கொண்டு அரசியல் நடாத்தும் சிங்கள இனவாதிகளாய் இருந்தால் என்ன, தமிழ் இனவாதிகளாய் இருந்தால் என்ன முஸ்லிம் இனவாதிகளாய் இருந்தால் என்ன அனைவரும் அப்பாவி மக்களின் வாழ்வுடன் சூதாடுகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.




வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியத்தை மீளக் கட்டி எழுப்பலாம் என்கிற நம்பிக்கை நாளுக்கு நாள் வலுப்பட்டு வருகிறது. தமிழ் முஸ்லிம் மக்களிடையே சாதாரண வாழ்வு மட்டத்தில் மனிதாபிமானமும் நட்பும் உயிர்ப்புடன் பூவும் பிஞ்சுமாக செழிக்கத் தொடங்கியிருக்கிறது. (இருதரப்பு அரசியல்காரர்களும் , அரச சார்பற்ற நிறுவனங்களும், மத நிறுவனங்களும், கலைஞர்களும், கவிஞர்களும் இந்தக் குருத்துகள் இலையாகவும் இலை கணுக்களில் தோன்றுகிற அரும்புகள் மலர்ந்து மணம் வீசவும் ஏற்ற சூழலை உருவாக்குவதில் வேண்டிய பசளைகளை தேடிவந்து இடுவதில், நீர் ஊற்றுவதில் கட்டிக் காவல் காப்பதில் இப்போதிருந்தே உழைத்திட வேண்டும். மலர்களில் மகரந்தம் சேர்க்கிற பொன்வண்டுகளாக கலைஞர்கள், கவிஞர்கள் ஓயாது உழைத்திட முன்வர வேண்டும்.

இந்த வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதற்கவட்டை வைத்தவர்கள் வரிசையில் அட்டாளைச்சேனை முஸ்லிம் இளைஞர்களது சோபர்ஸ் விளையாட்டுக் கழகமும், திருக்கோவில் தமிழ் இளைஞர்களது உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் முக்கிய இடம் பெறுகிறது. அவர்களை வாழ்த்த என்னிடம் வார்த்தைகளில்லை. சோர்பஸ் விளையாட்டுக் கழக முஸ்லிம் இளைஞர்கள் திருக்கோவிலில் கிரிக்கட் விளையாடிய மண்ணையும் திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக இளைஞர்கள் தமது முஸ்லிம் தோழர்களுடன் விருந்தாடிக் களித்த ஒலுவில் கடற்கரை மணலையும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது.

தமிழ் அரசியல் வட்டாரங்களிலும், முஸ்லிம் அரசியல் வட்டாரங்களிலும் கூட விமர்சனம் சுய விமர்சனம் அடிப்படையிலான மீள்பார்வைகள் ஆரம்பித்திருக்கிறது என்பதையும் நான் இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டாக வேண்டும். முஸ்லிம் மக்களது தனித்துவ தேசிய இன அடையாளங்களை இன்று பெரும் பாலான தமிழர்களும் 'அவர்களது அமைப்புகளும் அங்கீகரித்திருக் கின்றன. அண்மையில் போராளிகள் தரப்பில் இருந்து வருகிற சமிக்ஞைகள் விமர்சனம், சுயவிமர் சனம் அடிப்படையில் அவர்களும் தமது நிலைப்பாட்டை செம்மைப்ப டுத்த முன்னிற்பதை கோடிட்டுக் காட்டுகின்றன. இன்று மூன்று தீர்வுகளைப் பற்றிப் பேசப்படுகிறது.

1. வட கிழக்கு மாகாணத்தில் தனியான முஸ்லிம் அலகும் தனியான தமிழ் அலகுமாக இரு மாநிலங்கள்.

2. தனியான தமிழ் அலகும் தனியான முஸ்லிம் அலகும் இணைந்த வட கிழக்கு மாநிலம்.

3. அம்பாறை மாவட்ட முஸ்லிம் தமிழ்ப் பகுதிகளை உள்ளடக்கிய முஸ்லிம் மாநிலமும் எஞ்சிய வட கிழக்கு மாநிலமுமாக இரண்டு மாநில அரசுகள்.

இந்தத் தீர்வுகளில் மூன்றாவது தீர்வு, அம்பாறை மாவட்டத்துக்கு வெளியில் வாழும் முஸ்லிம் மக்களாலும், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களாலும் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டு விட்டது என்று தோன்றுகிறது. எனவே இது பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்ள வில்லை. யாழ்ப்பாணம், மன்னார், மூதூர், ஏறாவூர், காத்தான்குடி முஸ்லிம் மக்களும், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களும் நிராகரிக்கிற எந்தத் திட்டத்தையும் ஓர் அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு அரசியல் தீர்வின் அடிப்படையை யாழ்ப்பாண த்தில் இருந்து பொத்துவில் வரை வாழ்கிற முஸ்லிம் மக்கள் தனித்த முஸ்லிம் அலகாகவும், யாழ்பாணத்திலிருந்து பொத்துவில் வரையுமுள்ள தமிழ் மக்கள் தனித் தமிழ் அலகாகவும் வரையறுக்கின்ற அடிப்படையில் ஏற்படுகின்ற ஒரு திட்டமே உகந்ததும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஓர் அரசியல் தீர்வின் அடிப்படையாக முடியும். இந்த அடிப்படையில் மேலே குறிப்பிட்ட முதலாவது இரண்டாவது தீர்வுகள் சாத்தியமுள்ள தீர்வுகளாகும். மேற்படி இரண்டு தீர்வுகளில் எதை முஸ்லிம் மக்கள் தெரிவு செய்தாலும் நாம் அதை ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள்.

இந்த இரண்டு தீர்விலும் நான் கனவு காணுகிற தீர்வு தமிழ் அலகும் முஸ்லிம் அலகும் தத்தமது தனித்துவத்துடன் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் வட கிழக்கு மாநிலமாக இணைந்து வட கிழக்கு மாகாணத்து சிங்கள மக்களது சரிநிகர் சமத்துவத்தையும், உறுதிப்படுத்துகிற ஒரு திட்டத்தின் அடிப்படையிலான தீர்வையே ஆகும். இத்தகைய ஒரு தீர்வை சகல தரப்பினரின் மத்தியிலும் எடுத்துச் செல்வதற்கான ஒரு சூழல் உருவாகி வருகிறது என்றே நான் திடமாக நம்புகிறேன்.

அபிவிருத்தி அடைந்து வருகிற, நம்பிக்கை தருகிற இந்தச் சூழலைக் கண்டு மனம் பொறுக்காதவர்களும் இருக்கவே இருக்கிறார்கள். அண்மை யில் முஸ்லிம்களை நோக்கிப் போராளிகள் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் சிலரைக் கலவரமடைய வைத்துள்ளது. போராளிகள் தமது தவறுகளை ஒரு போதும் திருத்த மாட்டார்கள், என்ற நம்பிக்கையே மூலதனமாக அரசியல் செய்பவர்கள் அவர்கள்.

சில நாட்களின் முன் மட்டக்கள ப்பைச் சேர்ந்த முஸ்லிம் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் கண் கலங்கச் சொன்ன கதை என்னை நெருடுகிறது. தனது நண்பரான ஒரு ஏழை முஸ்லிம் அழுக்குத் துணி சேகரித்து துவைத்து விற்று ஒரு தசாப்தமாக சேமித்த பணத்திலும், கடன் பெற்றும் வாங்கிய ஓட்டோ கடத்தப்பட்டுள்ளதாகவும், அதனை மீட்பதற்கெடுத்த எல்லா முயற்சிக ளும் தோற்றுப் போனதால் அந்த ஏழை தற்கொலை செய்கின்ற அளவுக்கு விரக்தி அடைந்துள்ளதா கவும் அவர் கூறினார். முஸ்லிம்களின் நட்புறவைக் கோரி வெளியிடுகிற ஆயிரம் துண்டுப் பிரசுரங்களை விட ஒரு ஏழை முஸ்லிமின் கண்ணீரைத் துடைப்பது மேலானது என்று போராளிகளுக்கு இடித்துரைக்க வேண்டும்.

சம காலத்தில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீகாந்தாவின் அறிக்கை என்னை அதிர வைத்தது. முஸ்லிம்களின் இனத் தனித்துவத்தை நிராகரிக்கிற ஆபத்தான தமிழ் இனவாதக் கருத்தாக வெளிவந்துள்ள அவரது செய்தியை தமிழர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் நிராகரிக்க வேண்டும். ஸ்ரீகாந்தா தனது கருத்துக்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றுமொரு அதிர்ச்சி கால நேரப் பொருத்தமில்லாமல், ஆத்மா எழுதிய செங்கோல் = சிவப்பு + கோல் என்கிற கவிதை இனங்களுக்கிடையிலான பிரச்சினையில் சுய விமர்சனமற்ற விமர்சனம் இனவாதமே. ஆத்மாவும் தனது சுயவிமர்சன மற்றதும், காலமாற்றத்தை நிராகரிப் பதுமான நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

"கண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமே"

www.tamilarangam.net



## அஷ்ரப் மீதான படுகொலை முயற்சி:

# ஒரு புனை கதை!

ஒருவருக்கொருவர் ஐக்கியமாகவும் புரிந்துணர்வுடனும் சுமுகமாக வாழத்தலைப்பட்டுள்ள கிழக்கின் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் மீண்டுமோர் இனக்குரோத அழிவுக்கு வழி தேடும் வகையில் பல்வேறு சம்பவங்கள் மீண்டும் தலை காட்டத் தொடங்கியுள்ளன.

ஓகஸ்ட் 15ம் திகதி அன்று செவ்வாய்க் கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஸ்ரப், சுகாதார அமைச்சர் பௌசி ஆகியோர் கலந்து கொண்ட பொதுக்கூட்டமொன்றில் நுழைய முற்பட்ட இரண்டு கரும்புலிகளை விசேட அதிரடிப் படையினர் சுட்டுக் கொன்றதாக அரசின் வானொலியும் தொலைக்காட்சியும் உடனே அறிவித்தன. அரசின் பத்திரிகைகள் முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டன.

கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களும் பாண்டிருப்பைச் சேர்ந்தவர்கள். நாகராஜா ரமேஷ்குமார், சம்மாந்துறை தொழில் நுட்பக்கல்லூரி முதலாம் வருட (NCAT) மாணவன். இதை விட கல்முனை சர்வோதய இயக்க உறுப்பினரும் அதில் பணிபுரிபவருமாவார்.

மற்றைய இளைஞர் தில்லைநாயகம் சிவானந்தராஜா (21) வெஸ்லிக் கல்லூரி மாணவன். இவர்கள் இருவரும் அமைச்சர் அஸ்ரப், பௌசி ஆகியோர் கலந்து கொள்ளவந்த இடத்துக்கு அரைமைல் தொலைவிலுள்ள விசேட அதிரடிப்படையினரின் சோதனைச் சாவடியிலேயே சுட்டுக் கொல்லபட்டுக் கிடந்தனர்.

நாகராஜா ரமேஸ்குமார் காலை ஒன்பது மணியளவிலேயே தனது லுமாலா சைக்கிளில் வீட்டிலிருந்து கிளம்பியிருக்கிறார். போகும் போது வெளிநாடு போகவேண்டிய ஏஜென்சியிடம் செல்வதாகக் கூறியே சென்றுள்ளார்.

இவரை கல்முனையில் வழிமறித்த விசேட அதிரடிப்படையினர் காலை பத்து மணியளவில் பிடித்துச் சென்றுள்ளனர். இதை நேரில்கண்ட பலர் இவரது வீட்டாரிடம் கூறவே அவர்கள் பதினொரு மணியளவில் கல்முனை பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தும் தாம் அப்படி யாரையும் கைது செய்யவில்லையெனக் கூறியுள்ளனர்.

ஆனால் மாலை ஆறுமணியளவில் இவ்விரு இளைஞர்களும் அமைச்சர்கள் அஷ்ரப் பௌசி ஆகியோரை தாக்குவதற்கு சென்ற கரும்புலிகள் என விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தார்கள்.

அப்பாவிகளான இவ்விரு இளைஞர்களும் இவ்வாறு கொல்லப்பட்ட சம்பவம், இங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் மீண்டுமோர் பய பீதியையும் அச்சநிலையையும் தோற்றுவித்துள்ளது.

கரும்புலிகளென விசேட அதிரடிப் படையினரால் இவ்வாறு சுட்டுக்கொல்லபட்ட இரு இளைஞர்களில் ஒருவர் அரசுடனும் பாதுகாப்புப்படைகளுடனும் மிகவும் நெருங்கிய உறவினைக் கொண்டுள்ள ஒரு தமிழ்க் கட்சியின் கிழக்கு மாகாண உறுப்பினரின் உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் தலைதூக்கியுள்ள இவ்வாறான பாதுகாப்பு படைகளின் மிலேச்சத்தனமான போக்குகளும் இவ்விளைஞர்களின் மரணம் பற்றிய மர்மங்களைக் கண்டறியவும் ஒரு விசாரணை நடாத்த வேண்டுமெனப் பாதுகாப்பு அமைச்சை கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகள் கேட்டுள்ளமையும் இவ்விளைஞர்கள் உண்மையிலேயே நிரபராதிகள் என்பதை தெளிவாக்குகின்றன.

இதைவிட இவ்விளைஞர்களின் மரண விசாரணைக்குக் கூட இச்சம்பவத்துக்குப் பொறுப்பாக இருந்த விசேட அதிரடிப்படை அதிகாரி சமூகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. நாகராஜா ரமேஷ்குமார் வீட்டிலிருந்து செல்லும் போது கழுத்தில் அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியும் கழுத்தில் காணப்படவில்லை.

இவர்கள் சென்ற சைக்கிளின் குழாய்களினுள்ளே வெடிமருந்துகளை நிரப்பிச் சென்றதாக அரசின் தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால் இவர்கள் பயணம் செய்த லுமாலா சைக்கிள் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில், எரிக்கப்பட்டுக் கிடந்ததாகவும் தெரியவருகிறது.

மூன்று மாதங்களுக்கு முன்னரும் ஒருதடவை காத்தான்குடியில் முஸ்லிம் காங்கிரசின் முக்கியஸ்தரும், பிரதியமைச்சருமான ஹிஸ்புல்லாஹ் கலந்துகொள்ளவிருந்த ஒரு நிகழ்ச்சியிலும் ஒரு சில மணித்தியால இடைவெளியில் கரும்புலிகள் பிரதியமைச்சரைக் கொல்வதற்கு காத்தான்குடிக்குள் நுழைந்து விட்டார்கள் என்று செய்தி வெளியாகிப் பரபரப்பானது.

பிரதியமைச்சர் விசேட ஹெலிகொப்டரில் உடனே கொழும்புக்குப் பறந்தார். அரசின் வானொலி, தொலைக்காட்சி என்பனவும் செய்தி வெளியிட்டன. அரச பத்திரிகைகள் முன் பக்கத்தில் பிரதியமைச்சரின் பெயரை வெளியிட்டன.

கூலித்தொழிலுக்கு காத்தான்குடிக்குச் சென்ற ஒரு சில தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். பலர் படைகளால் விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்கள். தமிழ் பகுதிகளில் வியாபாரத்துக்கு சென்ற முஸ்லிம்கள் வாரிச் சுருட்டிக்கொண்டு வந்தார்கள். பல மணிநேரம் போக்குவரத்து தடைப்பட்டது. பின்னர் நிலைமை படிப்படியாக சுமுகமாகியது.

பொதுஜன முன்னணியுடன் மிகவும் நெருக்கமாக அரசியல் உறவைக் கொண்டு தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் வளர்ப்பதில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கு கிழக்கின் முஸ்லிம்களின் மத்தியில் மெல்லமெல்ல எழும் எதிர்ப்புணர்வுகளை இல்லாமல் செய்வதற்காக புலிகள் எப்போதுமே தம்மை கொல்லத் தயாராக இருப்பதாகக் காட்டி மக்களிடம் அனுதாபம் பெறும் ஒரு தந்திரமா இது? அல்லது தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் மீண்டும் தோன்றி வருகிற நெருக்கமான ஐக்கிய உணர்வுகளை சிதறடிப்பதற்கான ஓர் ஆரம்ப கட்டமா இது? என்ற கேள்விகள் எழும்புவதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

# மொரட்டுவயில் அல்ல கல்கமுவவில்!

கடந்த சரிநிகரில் வவுனியாவில் கடத்தப்பட்ட யாழ் வர்த்தகருடைய சடலம் மொரட்டுவவில் கிடைக்கப் பெற்றதாக ஒரு செய்தி வெளியாகி இருந்தது. அதில் ஒரு திருத்தம் சடலம் கிடைத்தது மொரட்டுவவில் அல்ல, கல்கமுவவில். அவ்வர்த்தகருடைய பெயர் செல்லையா சுப்பிரமணியம். மணியம் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் புடவைக் கடை வைத்திருந்தவர். யாழ்ப்பாணத்தில் யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் 1992இல் அவர் கொழும்பில் தனது வியாபார நிலையத்தை நடாத்தி வந்தார்.

1996 மார்ச் 11ம் திகதி சுப்பிரமணியம் திடீரெனக் காணாமல் போனார். காணாமல் போன இவரை இவரது மகன் தேடியலைந்தார். 1996 மார்ச் 20ம் திகதி சுப்பிரமணியம் வவுனியா அரச மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக அவரது மகனுக்குத் தகவல் கிடைத்தது. மகன் வைத்தியசாலைக்கு சென்ற போது அவரைப் பார்வையிடுவதற்கு வவுனியா பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைப் பிரிவிலிருந்து (Counter Subersive Unit-CSU) அனுமதி தேவை என அறிவிக்கப்பட்டது. மகன் மேற்படி அனுமதியைப் பெற்று வந்து தந்தையை அரச மருத்துவமனையில் பார்வையிட்டார்.

சித்திரவதைக்குட்பட்டு சிங்கள மொழிமூலத்திலான வாக்குமூலத்தில் சுப்பிரமணியத்தின் கையெழுத்து பெறப்பட்டிருந்தது. 15 நாட்களின் பின்னர் தடுத்து வைத்திருக்கும் கட்டளைச் சட்டம் (D.O.) பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் சுப்பிரமணியம் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அனுராதபுர சிறைக்கு அனுப்பப்பட்டார். உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் பின்னர் 1996 யூலை 8இல் தடுத்து வைக்கும் கட்டளைச் சட்டம் வாபஸ் பெறப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

1996 யூலை 12ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு தனது ஆவணங்களையும், பிரயாணப் பையையும் பெறுவதற்கு சுப்பிரமணியம் வவுனியா CSUக்குச் சென்றார். பொறுப்பதிகாரி அன்று இல்லாதபடியால் மறுநாள் வருமாறு அறிவிக்கப்பட்டது. காலையில் சென்ற போது மீளவும் மாலையில் வருமாறு அறிவிக்கப்பட்டது. சுப்பிரமணியம் பிற்பகல் சுமார் 3.30 மணியளவில் மேற்படி CSU பிரிவிற்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் மீண்டும் உயிரோடு திரும்பவில்லை. காணாமல் போன தந்தையைப் பற்றிய தகவல்களை மகன் 1996 யூலை 18ம் திகதி வீரகேசரியில் ஒரு விளம்பரமாக பிரசுரித்தார். 1996 யூலை 22ம் திகதி ஜனாதிபதிச் செயலகம், மனித உரிமை செயலணி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய நிறுவனங்களுக்கு மகன் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

1996 ஓகஸ்ட் 8ம் திகதி கல்கமுவவில் எரிந்து கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு சடலங்களை அடையாளம் காண்பது தொடர்பாக சுப்பிரமணியத்தின் மகன் குற்றப் புலனாய்வுப் துறைத் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டார். சுப்பிரமணியத்தின் பிரயாணப் பையும் காணப்பட்ட காசோலைப் புத்தகம் போன்ற தடயங்கள் மூலமே மகனின் முகவரியை குற்றப் புலனாய்வுத் துறையினர் கண்டு பிடித்துள்ளனர். அவரிடம் பெற்ற வாக்குமூலத்தின் பின்னர் சவச்சாலையில் எரிந்து கருகிய நிலையில் காணப்பட்ட இரு சடலங்கள் மகனுக்குக் காட்டப்பட்டன. ஆனால், சுப்பிரமணியத்தின் பிரேதமா என்பதை மகனால் அடையாளம் காண முடியவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா CSU பிரிவைச் சேர்ந்த 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொழும்பு குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## ஆவது ஒன்றுமேயில்லை'

முஸ்லிம் அரசியலின் புராதன சின்னங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வீதிகள் காணப்படுகின்றன. அந்த வகையில் கல்குடாத் தொகுதியில் காகித நகரில் (Paper Town) அமைந்துள்ள ஹிஸ்புல்லாஹ் வீதியும் ஒன்றாகும். இந்த வீதியில் பொதுமக்கள் பிரயாணம் செய்வதைவிட கால்நடைகள் செல்வதும் மிகக்கஷ்டமாக உள்ளது.

இந்த வீதியை கொந்தராத்து எடுத்தவர் ஓட்டமாவடியைச் சேர்ந்த ஒருவர். வீதி முழுமைபெற்றுவிட்டதென்று முழுப் பணத்தையும் பெற்று விட்டார் கங்காணியார். இதனை சிபாரிசு செய்து பணத்தை வழங்கிய வீதி நிர்மாணிப்பு அபிவிருத்தி சபை (RCDC) எவ்வளவு பெரிய தவறைச் செய்துள்ளது. இப்படிப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு இனிமேலாவது ஒப்பந்த வேலைகளை கொடுக்காதீர்கள் என்று கேட்பதைத்தவிர நாம் வேறென்ன செய்ய முடியும்?




# 'எமது புத்திமதியைக் கேட்டால்தானே!'

விரும்பத்தகாத யுத்தம் மக்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தால் பாதிப்பு மக்களுக்குத்தான். இந்தக் கொடிய யுத்தம் முடிவுக்கு வரவேண்டும். யுத்தத்தினால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. யுத்தம் மூலம் விடுதலைப் புலிகளை அழித்து பயங்கரவாதத்தை இல்லாமல் செய்து சமாதானத்தை கொண்டுவருவதாகக்கூறி அரசாங்கம் யுத்தத்தைத் தொடருகிறது. விடுதலைப் புலிகளும் சமாதானத்திலும் பார்க்கச் சண்டையைத்தான் விரும்புகிறார்கள். உண்மையில் இருபகுதியும் சமாதானத்தை விரும்பவில்லை'' இவ்வாறு யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் கனடா ஸ்காபறோ நகரிலுள்ள தேவாலயமொன்றில் அங்கு வாழும் இலங்கைத் தமிழர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தமதுரையில்;

கத்தோலிக்க ஆயர் மன்றம் சமாதானத்துக்கான போர் வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால் எமது வேண்டுகோள்கள் அந்தத் தேசத்தில் எடுபடாது. 7% கத்தோலிக்கர்களும் 75% பௌத்தர்களும் வாழும் நாட்டில் கத்தோலிக்க மக்களின் கோரிக்கைகள் பலனற்றவையே. அரசாங்கத் தரப்பினரைச்சந்தித்து சமாதானத்திற்கான அவசியத்தை எடுத்துச் சொன்னோம். விடுதலைப்புலிகளின் தலைவர்களையும் சந்தித்துப் புத்திமதி சொன்னோம். புலிகள் எமது புத்திமதியைக் கேட்டால் தானே. இருபகுதிக்குமிடையே கசப்புணர்வு, வீண் வைராக்கியங்கள் பலமாக உள்ளன. ஜனாதிபதி சந்திரிகா செய்யும் சில காரியங்கள் நல்லதுதான். ஆனால் சமாதானத்திற்கு அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். எனவே சமாதானத்தை விரும்பும் இன்னொரு சக்தி தோன்ற வேண்டும். அல்லது வேறொரு நாடு வர வேண்டும். நாம் சமயவாதிகள்; சமாதான விரும்பிகள். நாங்கள் வன்முறையை விரும்பவில்லை. இப்போது தமிழர் மத்தியில் நல்ல தலைவர்கள் இல்லை.

வன்னிப்பிரதேசத்தைப் பற்றிச் சொல்வதென்றால் அங்கு இடம்பெயர்ந்து போனவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கு சாதாரண வாழ்க்கை மறுக்கப்பட்டுள்ளது. ஷெல், பொம்பர் தாக்குதல்கள் அடிக்கடி இடம் பெறுகிறது. தற்போது வன்னியில் முருங்கன் வரை யாழ்மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

# வராததேனோ!?

கடந்த ஓகஸ்ட் 15,16ம் திகதிகளில் அமைச்சர் பௌசி அம்பாறை மாவட்டத்திற்கு அமைச்சர் அஷ்ரஃப்பின் அழைப்பை ஏற்று விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறக்காமம், சென்ரல்கேம், சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, நிந்தவூர், ஒலுவில் என்று அனைத்துமே முஸ்லிம் பிரேதச ஆஸ்பத்திரிகளுக்குத்தான் அவர் சென்றார்.

ஒரு தமிழ்ப் பிரதேச ஆஸ்பத்திரிக்காவது சென்றிருக்கக் கூடாதா? ஏனிந்த பாரபட்சம்? அம்பாறை மாவட்டத்திலேயே பழம் பெரும் ஆஸ்பத்திரி கல்முனை ஆதாரவைத்தியசாலை. மாற்றாந்தாய் மனப்பாங்குடன் மாறி மாறி வந்த அரசின் ஏவலாளிகள் புறக்கணித்தார்கள். இன்றும் இதே நிலைமை தொடருகிறது. கேவலம்; ஒரு ஜெனரேட்டர் கூட இல்லை.

இதுதானா? மனச்சாட்சியுடன் இன ஒற்றுமை பேசும் சீலம்? சொல்வது ஒன்று, செய்வது ஒன்றா?

# காணாமல் போகும் கோவைகள்

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு நஷ்ட ஈடுகோரி விண்ணப்பித்த தமிழர்களது கோவைகளில் இருந்து முக்கிய ஆவணங்களான பொலிஸ் முறைப்பாடு காணி உறுதி என்பன மாயமாகக் காணாமல் போகிறது. சிலகோவைகள் முழுமையாகவே காணாமல் போய்விடுகிறது.

சிலருக்கு உங்கள் ஆவணங்கள் எல்லாம் சரி. பணம் வந்ததும் அனுப்பி வைக்கிறோம் என்று கடிதம் வந்தது. ஆனால், சில மாதங்களின் பின்னர் உங்கள் கோவையில் பொலிஸ் முறைப்பாடு, காணி உறுதி போன்ற ஆவணங்கள் இல்லை அனுப்பி வைக்கவும் என்று கடிதங்கள் வருகின்றன. இது பெரும்பாலும் எல்லாத் தமிழர்களுக்குமே வருகிறது. இவர்கள் செய்வதறியாது திகைப்படைகின்றனர். ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே மூலப்பிரதிகள் எல்லாவற்றையும் விண்ணப்பத்துடன் இணைத்துள்ளனர்.

தமிழ் அரச ஊழியர்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்படும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை இழுத்தடிப்புச் செய்வதற்காக அமைச்சு அதிகாரிகளின் திட்டமிட்ட செயலா இது என்ற கேள்வி எழுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்த் தேசியவாதம்

## ஓர் ஆய்வு - 3

டி.சிவராம்

இது திராவிடக் கருத்து நிலை எனக் கருதப்படக்கூடிய வகையில் ஏறத்தாழ 130 வருடங்களுக்கு மேலாக பலரும் எழுதியும், பேசியும் வந்துள்ளனர்.

இவர்களுள் திராவிட இயக்க மூலகர்த்தாக்களாகக் கொள்ளப்படும் சுந்தரம்பிள்ளையும், அவரைச் சார்ந்த வேளாள அறிஞர் குழாமும் தமது சாதிவட்டத்தினுள் நின்ற வண்ணம் அறிவுலகிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் மத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் பிரதானமான நோக்கில்எழுதியவர்கள். பெரியார்பிரதானமாக சமூகச்சீர்த்திருத்த நோக்கிலும்தம் அரசியலை முதன்மைப்படுத்தும் நோக்கிலும்எழுதியவர், பேசியவர். மறைமலை அடிகள் தமிழ் மொழித் தூய்மை சைவம் அதன்பின் நின்ற வேளாள நலன்கள் என்ற வட்டதினுள் நின்று செயல்பட்டவர். இவ்வாறாகத் திராவிடக் கருத்து நிலையின் 130 வருடப் பரப்பை நோக்கும் போது 'பன்மொழிப் புலவர்' கா. அப்பாதுரை அவர்களே ஒரு தேசியப் பொதுமக்கட் திரட்சியை அவாவிய அரசியற் திட்டத்தினை அடித்தளமாகக் கொண்டு செயலாற்றிய கோட்பாட்டாளர் எனலாம்.

இவரே திட்டவட்டமான தமிழ் - திராவி தேசியத்தை வரையறை செய்து அதற்கு ஒரு புவியியல், அரசியல், இன வரலாற்று வடிவத்தை நிர்மாணிக்க முற்பட்டவர் எனலாம்.

ஒரு குறிப்பிட்ட அரசியற் திட்டத்திற்கு ஏற்ற முறையில்தமிழ் - திராவிட தேசியம், அதற்கான ஒரு அறிவியல் அடித்தளம் என்பவற்றை இட்டுக் கட்டியும், கற்பிதம் செய்தும், நிறுவப்பட்ட சில வரலாற்றுத் தகவல்களை திறமையாகக் கலவை செய்தும் உருவாக்கியவர் அவரே. தமிழ் -திராவிடத் தேசிய எழுச்சியில் அள்ளுண்டவர்களுக்கு அவரது எழுத்துக்களே கோட்பாடு அறிவியல் அடித்தளமாய் அமைந்தன. அப்பாத்துரையின் திராவிட -தமிழ் தேசியம் பற்றிய சிந்தனையை சரியாகப் புரிந்துகொள்வதற்கு முதலில் அது எழுந்த அரசியல் சூழலைப்பார்க்க வேண்டும்.

1937 இல் சென்னை மாகாணத்தில் ஆட்சிக்கு வந்த இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியைக் கட்டாய பாடமாக்கியபோது அதற்கெதிராக தமிழகத்தில் பெரும் கிளர்ச்சி தோன்றிற்று. இதற்குப் பெரியாரின் சுயமரியாதை இயக்கமும், நீதிக்கட்சியும், மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்தவரும் ஒன்றிணைந்துதலைமை கொடுத்தனர். இந்தக் கிளர்ச்சி தமிழ்நாடு தமிழருக்குத்தனிநாடாக வேண்டும்என்ற கோஷத்திற்கு வழிவகுத்தது. எனவே நீதிக்கட்சியின் திருவாரூர் மாநாட்டில் இதுவே தீர்மானமாகவும் நிறைவேற்றப் பட்டது. எனினும், ஒரு வருடம் கழித்து 24.08.1940இல் நடைபெற்ற நீதிக்கட்சியின் 15வது மாநாட்டில் ''திராவிடர்களுடைய கலை, நாகரீகம், பொருளாதாரம் ஆகிய வகைகள் முன்னேற்றம் அடைவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் (பிரிட்டிஷ்) இந்தியா மந்திரியின் மேற்பார்வையில் ஒரு தனிநாடாகப் பிரிக்கப்படவேண்டும்'' எனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று நீதிக்கட்சியில் முதன்மை பெற்றிருந்த ஆந்திர, கன்னட, கேரள நிலப்பிரபுக்கள், உயர் உத்தியோகத்தர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் செல்வாக்கும், அவர்களுடன் சேர்ந்திருப்பின் பிரிட்டிஷ் அரசுடன் தமது பேரம் பேசும் சக்தி பெருகும் என எண்ணிய தமிழகத்தின் வெள்ளாள பெருந்தலைகளினுடைய நலன்களுமே இம்மாற்றத்திற்குக் காரணம் எனலாம்.

ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழகம் ஆகியவற்றைக் கொண்டிருந்த சென்னை மாகாணமே திராவிட நாடு; அதற்கு விடுதலை வேண்டும் என்ற அடிப்படையில் நீதிக்கட்சியாளர் ஒரு 'தேசிய' கருத்துநிலையை உருவாக்க வேண்டிய தேவை இதன் காரணமாக எழலாயிற்று. ஆனால் நீதிக்கட்சியில் பொப்பிலிராஜா (ஆந்திரர்) டி.எம். நாயர் (கேரளர்) போன்றவர்கள் தலைமை பெற்றிருந்த போதும் தமிழகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவற்றிற்குரிய பிராந்திய உணர்வுகளே மேலோங்கிய வண்ணம் இருந்தன. அங்கிருந்த பிராமணரல்லாத உயர்சாதிகளுக்கும் (நாயர், கம்மா, ரெட்டி, லிங்காயத்) பிராமணருக்குமிடையில் பெரிய முரண்பாடுகள்இருக்கவில்லை என்பதும் பிராமண (ஆரிய) எதிர்ப்பை மையமாகக்கொண்டதிராவிடக் கருத்தியல் அங்கு எடுபடாமல் போனதற்கு ஒரு காரணம் எனலாம்.

இந்நிலையில்நீதிக்கட்சி, அதன் உருமாற்றமான திராவிடர் கழகம் அதிலிருந்து உடைந்து தனிக்கட்சியாகிய தி.மு.க. என்பன தமிழ்க்கலாசாரம், வரலாறு என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டு திராவிடத் தேசியம் எனும் ஒரு கருத்து நிலையை நிர்மாணிக்க முயன்றன. இம்முயற்சியில் தோன்றிய சிக்கல்களுக்கு 1961இல் அண்ணாத்துரை தான் எழுதிய ''இன்பத் திராவிடம்'' என்னும் நூலில் விடையிறுக்க அவர் முயல்கிறார். 'இந்தப் பிரச்சினை முதலில் நாம் தமிழ் நாடு தமிழருக்கே என்றுதான் தொடங்கினோம்....'' (ப.21) தமிழ் நாடு தமிழருக்கே என்ற உரிமை முழக்கத்தை அன்பழைப்பாக்கிய போது அது திராவிட நாடு திராவிடருக்கே என்று வளர்ந்தது'' (ப.23)எனக் கூறுகிறார் அண்ணாதுரை. கேரளர், ஆந்திரர், கன்னடர், தமிழர் ஆகியோர் ''மொழியால் நால்வர். இனத்தால் ஒருவர்'' என்கிறார்.

திராவிடநாட்டுப் போராட்டத்தை மற்ற மூன்று மாநிலத்தவரும் கணக்கிலெடுக்கவில்லை எனக்கூறி தி.மு.கவின் திராவிட நாட்டுக் கோரிக்கையை கண்டித்த சில தமிழ் நாட்டுத் தேசியவாதிகளுக்குப் பதிலிறுக்க முனைகிறது அண்ணாவின் 'இன்பத்திராவிடம்.' 1940 இற்குப் பின் தோன்றிய இந்தத் திராவிட நாட்டுக் கோரிக்கையின் பின்னணியில் தான் நாம் கா. அப்பாத்துரையின் சிந்தனையை நோக்கவேண்டும். இதில் முதலாவதாக கா.அப்பாத்துரை தனது அகண்ட தமிழ் - திராவிட தேசியக்கருத்துநிலையின் (Pan - Tamil -Dravidian Nationalism) அடிப்படையில் ஈழத்தமிழர் பற்றியும் எழுதியுள்ளார் என்பதைக் குறிப்பிட வேண்டும். அத்துடன் அன்று இலங்கையில் இருந்த அகண்ட தமிழ்த் தேசிய கருத்துநிலையின் பால் ஈர்க்கப்பட்டிருந்த தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை போன்ற எழுத்தாளர்களுடனும் உறவு கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அவர் 'கட்டியெழுப்பிய' திராவிட - தமிழர் தேசியக் கருத்து நிலையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை;

1. பிரிட்டிஷாரின் நிர்வாக அலகான சென்னை மாகாணம் ஆதிகாலந்தொட்டே பொதுப்புவியியல் அரசியற்பண்புகளால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தேசம் என்பது. இதுபற்றி அவர் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பினும் குறிப்பாகத் 'தென்னாடு', 'குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு' என்னும்இரு நூல்களில் விபரிக்கிறார்.

கடல்கொண்ட லெமூரியா அல்லது குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியே 'தென்னாடு' (சென்னை மாகாணம்) எனவும் வட இந்தியா இமயமலைத் தொடர் என்பன கடலாக இருந்த காலத்திலேயே அது உயிரினங்கள்வாழும் நாடாக இருந்தது எனவும் ''குரங்கு இனத்தின் மூல இனமாகிய இலெமு (Lemur) இங்கு தோன்றியது எனவும், மனித இனமே இங்குதான் உற்பத்தியாயிற்று எனவும், கூறிச்செல்கிறார். ''தென்னாடு உலகின் பழம்பெரும் நாடுகளில் ஒன்று என்பது மட்டுமன்று, அது இயற்கை அன்னையின் முதல் மாநிலக் கன்னியாகவும் இருந்தது'' (ப.11 'தென்னாடு')

''தென்னாட்டுக்குத் தமிழகம் என்ற பெயரும் திராவிடம் எனும் பெயரும் பண்டைக் காலத்திருந்தே வழங்கியிருந்தன என அறிகிறோம்'' (ப. 13 மேற்படி நூல்)

தேன்என்ற சொல்லுடன் சம்பந்தப்பட்டதாக தென்னாடு எனும் சொல் உள்ளதாகவும் அதன் காரணமாகவே தமிழுக்கு இனிமை எனும் பொருள் வந்தது எனவும், தெலுங்கு - தெனுகு (தேன்) எனவும், துளுமொழியின் பெயர் துளியிலிருந்து அதாவது தேன் துளியிலிருந்து வந்தது எனவும், கன்னடம் கன்னல் அதாவது கரும்பு என்னும் அடியிலிருந்து பிறந்தது எனவும் மலையாளம் மலையம் எனும் இனிய தென்றலிலிருந்து பெறப்பட்ட சொல் எனவும் ஆகவே இவை தென்னாட்டின் பொதுமையைக் (!) காட்டுகின்றன எனவும் கூறிச் செல்கிறார்.

சென்னை மாகாணத்தின் ஏனைய மூன்று மொழியினரையும் உள்ளடக்கக் கூடிய ஒரு தேசிய கருத்து நிலையை தமிழ் மக்களையும் கவரக்கூடிய வகையில் அவர் எவ்வாறு வலிந்து கட்ட முற்படுகிறார் என்பதற்கு இது போன்ற பல உதாரணங்களை அவர் நூல்களில் பரக்கக் காணலாம்.

''தென்னாடு தூய திராவிட இனமும் மொழியும் பண்பும் உடைய நாடு'' (மே.ப.நூல். ப.47) என்பதே அவரது மைய அரசியற் கருத்து.

2. சென்னை மாகாணம் ஒரு பொது மொழி கலாசாரப்பழம் பொதுமையைக் கொண்ட தேசம் என்பது.

''முதலில் 'தமிழ்' என்பது தென்னாட்டில் வழங்கப்பட்ட மூல திராவிட மொழியின் பெயராக இருந்தது. இது முத்தமிழ் (முன்னைய தமிழ் அல்லது மூன்று தமிழ்) எனப் பிற்காலத்தில் வழங்கப்பட்டது. இன்று இதனையே நாம் திராவிடம் என்கிறோம்'' (வளரும்தமிழ். ப.21 அலமேலு நிலையம், சென்னை 1956) இனி தொல்காப்பியர் கொடுந் தமிழ் எனக் குறிப்பிட்டது ஏனைய திராவிட மொழிகளையே எனக் குறிப்பிடும் அப்பாத்துரை திராவிட நாடு (தென்னாடு) பற்றிய தனது வரையறையை நியாயப்படுத்துவதற்காக தொல்காப்பியம் கூறும் தமிழ் கூறு நல்லுலகின் எல்லைகள் பொருத்தமற்றன எனவும் கூறுகிறார்.

''தொல்காப்பியர் கூறிய நாட்டெல்லை உண்மையில் செந்தமிழ் கொடுந் தமிழ் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய முழுத் தமிழ் (திராவிட) நாட்டெல்லையன்று'' (மே.ப.நூல் ப.21). மேலும் சென்னை மாகாணத்தின் ஏனைய இனத்தினரை உள்ளடக்க முனைந்த திராவிடத் தேசியம் சரிப்பட்டு வராது எனக்கூறிய தமிழ்ப்பற்றாளரை நோக்கி ''செந்தமிழும் கொடுந்தமிழும் ஒரு தமிழ் ஆக வேண்டும் என்று அரசியல் துறை எழுச்சி பெற்றவர்கள் அனைவரும் விரும்புகின்றனர். புலவர்கள் உடனிருந்து ஒத்துழைப்பார்களா? அவர்கள் தமிழ் இலக்கியப் பற்று, தமிழ் பற்று, தமிழ் மக்கட் பற்று, தமிழ் நாட்டுப்பற்று, பெருந்தமிழுலகப் பற்று ஆக விரிவுபடுமா?'' (மே.ப.நூல் முடிவு) எனக் கேட்கிறார்.

இங்கு பெருந்தமிழுலகம் என அவர் கூறுவது சென்னை மாகாணத்தையே.

3. திராவிட நாடு என அவர் கூறுகின்ற நிலப்பகுதியில் தேசிய உணர்வு மிக நீண்ட காலமாக இருந்து வருகிறதென்பது. அவரது இக்கருத்து பல இடங்களில் காணப்பட்டாலும் 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' (ஔவை நூலகம். சென்னை 1957) எனும் நூலிலேயே தெளிவாக வெளிப்படுகிறது.

பரந்துபட்ட தென்னிந்தியாவிற்கு ஒரு மாநிலத் தேசியம் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. அது எக்காலத்திலும் மங்கிவிடவில்லையென இந்நூலில் நிறுவமுற்படுகிறார். 'உதாரணமாக மராட்டிய மன்னன் சிவாஜியை ''மாநில தேசியத்தை வட திசை இஸ்லாமியப் படையெடுப்பினின்றும் காக்க விரும்பிய தேசிய வீரன்'' எனப் புகழ்கிறார். (மே.ப.நூல். ப.288)

தேசியம் பற்றிப் பேசுகையில் ''உலக நாடுகளில் இத்தேசிய உணர்வுகாரணமாக நாட்டெல்லை வகுக்கப்பட்டதும், தேசிய அரசியல்கள் அமைந்ததும் அண்மைக் காலத்தில்தான்.... தமிழகத்திலோ தேசிய உணர்வும் தேசிய நாட்டெல்லையும், தேசிய அரசியலும் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஏற்பட்டு விட்டன... ஆனால் துரதிர்ஷ்டவசமாக மற்றெல்லா நாடுகளிலும் புதிய தேசியத்தால் வரலாறு காணப்பட்ட நாளிலேயே தமிழகம் தன் தேசிய எல்லை, தேசிய அரசியல், தேசிய உரிமை வாழ்வு, தேசிய உணர்வு ஆகியவற்றை இழந்துள்ளது'' (மே.ப.நூல். ப.49) என்கிறார் அப்பாத்துரை.

தமிழருக்கு உரிய 'தேசிய உணர்வு' இந்த 'மாநிலத் தேசியம்' (அதாவது சென்னை மாகாணத்திற்கேயுரிய திராவிடத் தேசியம்) என்பது அவர் கருத்து என்பதை மனதிற்கு கொண்டே தமிழகத்தின் தேசியம் பற்றி அவர் மேற்கூறியதை நோக்கல் வேண்டும்.

– வரும்

## பெண்கள்.....

சில்ரண்ட்'' (1992), கோபி தேசாயின் ''மூஜ்சே தோஸ்தி கரோஜ்'' (1992), கல்பனா லஜ்மியின் ''ஏக் பால்'' (1986), விஜய மேத்தாவின் ''பெஸ்தோன்ஜி'' (1987), நவ்கோட் மற்றும் ஜயோ பட்வர்தனின் ''அனந்த யாத்ரா'' (1985) என்பன அண்மையில் எல்பின்ஸ்டனில் திரையிடப்பட்ட சில பெண்களின் பங்களிப்பை வலியுறுத்தும் படங்களாகும்.

சத்யஜித் ரேயின் ''தீன் கன்யா'' திரைப்படத்தில் நடித்து திரைப்படத்துறையுடன் இணைந்த அபர்ணா சென் பின்னர் பெங்காலி சினிமாவிலும் ஹிந்தி சினிமாவிலும் பிரபல நடிகையானார். உலகமறிந்த தயாரிப்பாளரான அவர் முதல் முதல் தயாரித்தது ''36 சௌரன்கி லேன்'' ஆகும். கல்கத்தாவில் மாடிவீடொன்றில் வசிக்கும் ஆங்கிலோ இந்தியன் தொடர்பு கொண்ட ஆங்கில ஆசிரியையான ஒரு பெண்ணை மையமாகக்கொண்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலப் பெயரைக்கொண்ட மேற்கத்தேய நடை உடை பாணி கொண்ட ஆனால், பிரித்தானிய ஆளடையாளமோ மறுபுறம் இந்திய ஆளடையாளமோ பெறாத ஒரு பெண், சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இதில் அடங்கும். பெண்ணைத் தாயாகவோ, மனைவியாகவோ கௌரவமாகவோ ஏற்றுக்கொள்ளும் சமூகத்தினுள் தனித்து ஒரு பெண் குடும்பம் என்ற வரையறைக்குள் செல்லாததினால் விலக்கி வைக்கப்படுவதை இத்திரைப்படம் சுட்டிக்காட்டுகின்றது.

பிரேமா கரந்த் தயாரித்த ''பனியம்மா''வுக்கு பிரதான கதைவடிவம் கன்னட நாவல் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. கலை இயக்குநராக, திரைப்படத்துறையில் நுழைந்த இவரின் முதல் தயாரிப்பே ''பனியம்மா'' பால்ய விவாகத்தை ஆதரிக்கும் இந்த சமூகமொன்றில் தன் கணவர் இறந்த



பின்னர் 9 வயதில் விதவையாகும் ஒரு சிறுமி தனது முதிய காலம் வரை எதிர்நோக்கும் பிரச்சினைகள் இப்''பனியம்மா'' திரைப்படத்தில் காட்டப்படுகின்றது. சம்பிரதாயபூர்வமான பிராமண கருத்தியல்களுக்குள் பெண் என்பவள் மட்டுமே அதிகப் பாதிப்புக்குள்ளாகின்றாள் என்பதை புரிந்துகொள்ளும் பானியம்மா அவற்றை சவாலாக ஏற்றுக்கொண்டு பிற பெண்களுக்காக குரல் கொடுக்கும் முறையும், இனப்பிரிவினைகள் இன்றி அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும் எனக் கூறுவதையும் இப்படம் சுட்டுகின்றது.

வங்காள சினிமாவில் பிரபல இயக்குநாரான ஷியாம் பெனகலின் திரைப்படங்கள் பலவற்றில் துணை இயக்குநராக பணிபுரிந்த கல்பனா லஜ்மி இயக்கிய முதலாவது திரைப்படமே ''ஏக்பால்''. பிள்ளைகள் இல்லாத திருமணமான பெண் போன்று திருமணமின்றி பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் பெண் கூட சமூகத்தில் இருந்து விலக்கிவைக்கப்படுகிறாள். இதனையே இத்திரைப்படம் குறிக்கின்றது. கௌரவத்திற்கும் பிறரின் மதிப்பிற்கும் உள்ளாகும் ஒரு சமூகம் கூட பெண்ணின் கருத்தரிக்கும் உரிமையை ஆண்களுக்கு வழங்கும் முறையும் அதற்கு சம்மதிக்காத பெண்ணை சமூகம் விலத்திவைக்கும் முறையும் ''ஏக்லாலில்'' காட்டப்படுகின்றது.

நூற்றாண்டுகளாக இந்திய சமூகத்தின் வெளிப்பாடுகளும் பெண் அச்சமூகத்தின் எழுச்சியின் அடையாளமாக இருந்த முறையும் இவ்விழாவின் திரைப்படங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது இத்திரைப்பட விழா நவீன இந்திய திரைப்படவரலாற்றின் பெண்கள் தொடர்பான அக்கறைகள் (Female Subjectivity) ஆழமாக கருத்தாடப்படும் ஒரு சந்தர்ப்பமாக இது அமையும்.

**அனோமா ராஜகருணா**

**தமிழில்: ரத்னா**

**நன்றி: ''எய'' (அவள்)**

www.tamilarangam.net





# புலித்தடை தீர்வல்ல

ஜெகான் பெரேரா

பெரும்பாலான இலங்கையர்களதும், வெளிநாட்டவர்களதும் மனதில் விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் இணைந்தவர்களாகவே பதிந்துள்ளனர். கொழும்பு மத்திய வங்கியை தகர்த்த கரும் புலிகளின் தற்கொலைத் தாக்குதல், இந்தியாவிலும், இலங்கையிலும் அரசியற் தலைவர்களையும் படுகொலை செய்வது, எல்லைப்புறக் கிராமங்களில் ஆண்களையும், பெண்களையும் குழந்தைகளையும் அழித்தொழிப்பது போன்ற நடவடிக்கைகள் காரணமாக புலிகளுக்கு இத்தகைய ஒரு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில், புலிகளை வெறும் 'பயங்கரவாத இயக்க'மாக இனங்காட்டுவது புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கேள்விக்கப்பாற்பட்ட ஒரு விடயமாக மாற்றிவிட்டுள்ளது. புலிகளுக்கெதிரான அரச இராணுவ நடவடிக்கைகளின் போது தமிழ் குடிமக்கள் கொன்றொழிக்கப்படுவதும், குடிமக்களின் கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்படுவதும் நடந்துகொண்டிருக்கின்றன. லட்சக்கணக்கான குடிமக்கள் இடம்பெயர்ந்ததைவிடவும் அதிகளவு விலை கொடுத்தாலும் கூட பரவாயில்லை, 'பயங்கரவாதத்திலிருந்து' நாட்டைக் காப்பாற்றுவது அவசியம் என்று கருதப்படுகிறது. வேறுவார்த்தைகளில் சொல்வதானால் புலிகளின் பயங்கரவாதம் அதற்கெதிரான அரசாங்க நடவடிக்கைகளை, அவை எவ்வளவுதான் பயங்கரவாதத் தன்மை கொண்டவையாக இருந்தாலும் கூட அவை சட்டபூர்வமானவை தான் என்று கருதும் நிலையை தோற்ற வைத்துள்ளது.

அண்மையில் 'தி ஐலன்ட்' பத்திரிகை கொழும்பில் ஒருவர் தமிழராய் இருப்பதால் உள்ள சிக்கலைப் பற்றிய பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் அவர்களுடைய ஒன்றைப் பிரசுரித்திருந்தது. கட்டுரையும் அது விபரித்துள்ள விடயமும், பொ.ஐ.மு. அரசாங்கத்தின் கீழும் மனித உரிமைகளுக்கு இந்தக் கதியா என்ற உணர்வை பலரிடம் ஏற்படுத்தியுள்ளன. புலிகளது பயங்கரத்திலிருந்து இங்குள்ள மக்களைப் பாதுகாத்தல் என்ற அர்த்தத்தில் இந்த கட்டுரையில் விபரிக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் விடயங்கள் நியாயப்படுத்தப்பட்டுவிட முடியும்.

புலிகள் இயக்கம் ஒருசில நூறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறிய இயக்கமாக இருந்திருப்பின் அவர்களை அடக்குவதோ அல்லது கட்டுப்படுத்துவதோ சிலவேளை சாத்தியமாக இருந்திருக்கலாம். பெரும்பாலான பயங்கரவாத இயக்கங்கள் ஆயுதமேந்திய ஒரு சில நூறு உறுப்பினர்களைக் கூட கொண்டதல்ல. உதாரணமாக ஐ.ஆர்.ஏ. இயக்கம் கிட்டத்தட்ட 300 ஆயுதமேந்தியவர்களை மட்டுமே கொண்ட இயக்கமாகும். இந்த இயக்கத்தின் அரசியற் பிரிவான 'சின் ஃபெயின்' 12 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை வென்றெடுத்தது.

புலிகளைப் பொறுத்தவரை மிகவும் மேலோட்டமான கணிப்பின்படியே அவர்களிடம் ஆயுதமேந்திய உறுப்பினர்கள் சுமார் 5000 - 10,000 வரை இருக்கிறார்கள். இத்தனை காலமாக அது உருவாக்கியுள்ள ஆதரவு அமைப்புகளினூடாக அது கொண்டிருக்கக் கூடிய பயங்கரவாதிகளின் தொகை இதனுடன் சேர்க்கப்பட வேண்டும். உதாரணமாக புலிகளின் 5 ஆண்டு கால யாழ்ப்பாண ஆட்சியின்போது, அவர்கள் நிர்வாக, இறைவரி, மற்றும் பொலிஸ், நீதித்துறை போன்றவை உள்ளிட்ட அரசாங்க அமைப்புக்களைப் போன்ற அமைப்புக்களை உருவாக்கி வைத்திருந்தார்கள் என்பது கவனத்திற்குரியதொன்றாகும்.

கடந்த காலங்களில் 1985இல் திம்புவில் நடந்த பேச்சுவார்த்தை முதலாக நடந்த மூன்று பேச்சுவார்த்தைகளிலும், இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசாங்க தரப்பு யோசனைகளை புலிகள் முன் வைத்ததன் மூலம் இலங்கை அரசாங்கங்கள் புலிகளது அரசியல் சக்தியின் பரிமாணத்தை ஏற்றுக் கொண்டே இருந்துள்ளன என்பது தெளிவு. இந்த நாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகளும், இனப்பிரச்சினை தொடர்பாக பேசவிரும்புகின்ற பல தமிழர்களும் புலிகள் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகட்காக நிற்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள். புலிகளின் பிற நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவர்களின் தமிழ் மக்களது உரிமைகட்கான போராட்டத்தில் புலிகளை ஆதரிக்கவே செய்கின்றனர். இலங்கையின் பெரும்பான்மையினரது அரசியலானது தமிழர்களது அரசியல் அபிலாஷைகளை பாராளுமன்ற அரசியல் ஊடாக சாத்தியமாக்க, தமிழ் மக்களின் அபிலாஷைகள் குறித்த கவனிப்பினை ஏற்படுத்திக்கொள்ள உதவக் கூடிய ஒரே வழி என்று இம்மக்கள் நினைத்திருக்கக் கூடும்.

வடக்கு கிழக்கிலுள்ள சிங்கள முஸ்லிம சிறுபான்மையினர் குறித்து அக்கறையற்று இருப்பது போன்ற காரணங்களால், தமிழர்களது தேசிய அபிலாஷைகள் நியாயமற்றவையாகவும், ஜனநாயக பூர்வமற்றவையாகவும் இருக்கக் கூடும். சிங்களவர்களதும், முஸ்லிம்களதும் தேசியவாத அபிலாஷைகளில் இனவாதக் கூறுகள் இருப்பது போலவே தமிழர்களது சில அபிலாஷைகளிலும் இனவாதத் தன்மை இருப்பதாகக் கூறப்பட முடியும். ஆனால், இந்த தேசியவாத உணர்வு காரணமாக பெருமளவான தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் செல்வாக்கைக் கொண்டிருக்கவே செய்வர். எனவே இத்தகைய அபிலாஷைகள் ஆயுத முனையில் நசுக்கப்படவோ அழிக்கப்படவோ முடியாதவையாகும். இவை பேச்சுவார்த்தைகள், பரஸ்பர நன்மைகளையும், பிற சமூகங்கட்கு குறைந்தளவு பாதிப்பையும் தரக்கூடிய விதத்திலான மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்துதல் போன்றவற்றினூடாக மட்டுமே சாத்தியப்படக் கூடியவையாகும்.

சிங்கள, தமிழ் புத்தாண்டின் முன் தீர்மானமான வெற்றியைப் பெற்றே தீருவோம் என்று அரசாங்கம் சொல்லிக்கொண்ட போதும் அந்தக்காலக்கெடு கடந்த ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்து விட்டது மட்டுமல்லாமல், யுத்தம் இன்னமும் தீவிரமாகவும், பெரும் செலவீனத்துடனும் பரவியுள்ளது. முல்லைத்தீவு முகாமை நிர்மூலமாக்கியதன் மூலமாக அவ்வப்போது ஒரு சில அதிர்ச்சியூட்டும் பயங்கரவாத நடவடிக்கைகளான குடிமக்கள் மீதான தாக்குதல்களை மட்டும் செய்கின்ற ஒரு இயக்கமல்ல. சமதையாக சொந்தமாக நின்று போரிடும் சக்திவாய்ந்த ஒரு இராணுவமும் கூட என்று நிரூபித்துள்ளார்கள் புலிகள்.

தடைசெய்வதன் மூலமாக ஒரு இராணுவத்தை பலவீனமாக்கி விட முடியும் என்ற நம்பிக்கையிலேயே புலிகளைத் தடைசெய்ய முனைவது தனது தலையை மண்ணுக்குள் புதைத்து விட்டால் தன்னைத் தனது எதிரிகள் யாரும் காணமாட்டார்கள் என்று கருதுவதாகக் கூறப்படும் தீக்கோழியினைப் பின்பற்றுவதற்கு ஒப்பானதாகும். 1978 இல் கூட புலிகளையும் அது போன்ற இயக்கங்களையும் அன்றைய அரசாங்கம் தடை செய்தது. ஆயினும் கண்ட பயன் எதுவுமில்லை. அது பயங்கரவாதத்தையோ, உள்நாட்டு யுத்தத்தையோ முடிவுக்கு கொண்டுவர எதையும் செய்யவில்லை. 1983 இல் ஆறாவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்ததன் மூலம் பிரிவினைவாதத்திற்கு எதிராக மேலும் தடைகளைப் போட்டும் கூட எந்த முன்னேற்றமும் நடைபெறவில்லை. இது ஜனநாயக பூர்வமாக தெரிவு செய்யப்பட்ட தமிழ் தலைமைகளை பாராளுமன்றத்தில் இருந்து விரட்டுவதற்கு பயன்பட்டதன் மூலம் நிலைமையை மேலும் மோசமாக்கியது.

தீக்கோழி பாணியில் புலிகளைத்தடை செய்ய முனையும் அரசின் போக்கானது புலிகளுக்கு எதிரான இந்த யுத்தம் 'பயங்கரவாதத்திற்கு' எதிரானதாக மட்டும் நடக்கவில்லை என்ற யதார்த்த நிலைக்குள் தனது தலையைப் புதைத்துக் கொள்கிற ஒன்றாகும். இந்தப் பிரச்சினையானது அரசுக்கெதிராக அணி திரண்டுள்ள போராடும் சக்திகள் தமிழர்களாகவும், பெருமளவு தமிழ் மக்களது ஆதரவை பெற்றவர்களாகவும் இருப்பது காரணமாக இது வெறும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாக அல்ல, மாறாக ஒரு உள்நாட்டு யுத்தமாகவே "CIVIL WAR" நடக்கின்றது.

எதிராளியை விலக்கப்பட்டவராக்குவதும் அவரது கருத்துக்களை தெரிவிக்கும் வாய்ப்பினை மறுப்பதும் ஜனநாயக ரீதியிலான சமாதான மாற்றத்திற்கான பாதைக்கு குறுக்கே நிற்பதாகும். இது பல தலைமறைவு வேலைகளைச் செய்வதையும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும், தூண்டுவதாகவே அமையும். இந்தத் தடை இருபுறத்திலும் தீவிரவாதிகளை உருவாக்கிவிடும். இவர்கள் பிரச்சினையை சுமுகமாக பேசித்தீர்க்க விரும்பும் பெரும்பான்மை விருப்பிற்கு எதிராக இயங்குகின்றார்கள். மேற்கு நாடுகளில் பல அவற்றின் குடியியல் உரிமை பாரம்பரியங்களின் காரணமாக இந்தத் தடையை இப்படியே நோக்குவார்கள். இதன் காரணமாக அவர்களில் பலர் தடையை ஆதரிக்காமல் விடவும் கூடும். இது இலங்கை அரசிற்கு முகத்தில் அறைவதற்கு ஒப்பான தொன்றாகும்.

முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகளைக் குறித்த தத்துவம் பேச்சுவார்த்தைகள் இன்றி முரண்பாடுகளை நீடிப்பதற்கான காரணங்களை தெரிவிக்கின்றது. அதாவது பலவீனமான அணி எப்போதும் பேச்சுவார்த்தையின் போதான பேரம்பேசலில் தான் சமத்துவத்தையும், சம அந்தஸ்துடைய பங்காளி என்ற அங்கீகாரத்தினையும் கோருகின்றது. பலமுள்ள அணியோ சமத்துவத்தை நிராகரிப்பதுடன் பலவீனமான அணியை அழிக்கவும் முயல்கின்றது. இதன் முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் இழுபடுகின்றன. இது முரண்பாடு தீர்வு குறித்த தத்துவார்த்த (Conflict resolution theory) முடிவாகும். கடந்த மூன்று பேச்சுவார்த்தைகளின் போதும் புலிகள் தன்னிச்சையாக பேச்சுவார்த்தையில் இருந்து முறித்துக்கொண்டதற்குரிய காரணங்களை ஆராய்ந்தால், புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் நிலவிய சமத்துவம் இன்மையை தம்மால் தீர்க்க முடியவில்லை என்று உணர்ந்ததும் ஒரு காரணமாக இருப்பது தெரியக்கூடும்.

புலிகளைத்தடை செய்வதன் மூலம் அரசாங்கம் இன்னொரு தடவை புலிகளுக்கு அவர்கள் விரும்பும் சமத்துவத்தை மறுப்பதுடன் அவர்களை மேலும் மோசமானவர்களாக மாற்றவுமே முடியும், முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான தத்துவம் ஆனது, பதிலாக, அவர்களை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதன் மூலமாகவும், குடிமக்கள் மீதான தாக்குதலை நிறுத்தம் பட்சத்தில் அவர்கள் மதிப்பிற்குரிய ஒரு ஸ்தானத்தில் இருந்து பேசலாம் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமாகவும் பிரச்சினையை அணுக வேண்டும் என்றே குறிப்பிடுகின்றது. ●

# மன்னார் உப்பளமும் மலிந்து போன ஊழல்களும்!

—மார்க்கண்டு

மன்னார்த்தீவில் ஒரு பெரிய உப்பளம் இருக்கின்றது. கழுதை தேய்ந்து கட்டெரும்பு ஆனதைவிட எறும்பு ஊர்ந்து பண்டகசாலையை அழித்த கதையாக இந்த உப்பளம் ஆகிவிட்டது. இந்த உப்பளத்தில் இப்போது கறிக்குப் போடக்கூட உப்புக்கிடைக்காது. இந்தத்திறமையான நிர்வாகத்துக்கு அங்கு இருக்கும் ஓ.ஐ.சியும், கச்சேரி நிர்வாகமும், மேலாக உப்புக்கூட்டுத்தாபனமும் பிரதான காரணிகளாக அமைகின்றன.

### உப்புத் தேவையான காரணம்:

மன்னார்த்தீவில் வங்காலை, வங்காலைப்பாடு, பேசாலை, தலைமன்னார் என்பன பிரதான மீன்பிடி இடங்களாகும். இங்கு பிடிக்கப்படும் மீன்களைக் கருவாடு ஆக்க வருடம் 500 மூடை உப்புத்தேவை. இந்த மீனவர்கள் தமது கருவாட்டுத்தேவைக்கு கற்பிட்டியில் இருந்து உப்பை வரவழைக்கிறார்கள்.

### பதுக்கல் பேர்வழிகள்:

இந்த மன்னார் உப்பளத்தில் வருடாந்தம் சுமார் 15,000 மூடைகள் உப்பினை எடுக்க முடியும். இங்குள்ள பணம் உள்ள முதலாளிகள் அனுமதிப்பத்திரம் மூலமாக உப்பினை வாங்கி ஓகஸ்ட் வரை பதுக்கி வைக்கின்றார்கள். ஓகஸ்ட் மாதம் பெரும்பாலும் உப்பளத்தில் உப்பு முடிந்து போகும்.

அப்போது பதுக்கி வைக்கப்பட்ட 1 கிலோ உப்பின் விலை ரூபா 8/= ஆக மாற்றம் அடையும். இதன் மூலம் கணிசமான பணத்தை இவர்கள் மன்னார்த்தீவில் உழைத்து வருகின்றார்கள்.

### ஏமாற்றும் மீன்பிடிச் சங்கங்கள்:

தாழ்வுபாடு பேசாலை போன்ற இடங்களில் மீனவச் சங்கங்கள் இருக்கின்றன. அவர்கட்கு மாதாந்தம் மூடை மூடையாக உப்புக் கொடுக்கப்படும். இவர்கள் இந்த உப்பினை அரைத்து அரச அதிபர் சொல்லும் விலைக்கு மீனவர்கட்குக் கொடுக்கவேண்டும். இதுவே விதி. ஆனால் இச்சங்கங்கள் அந்த விலைக்கு விற்பது இல்லை. யாருக்கு விற்கிறோம் என்பதையிட்டு கணக்குக் காட்டுவதும் இல்லை.

கருவாடு போடுவதற்கு உப்பு இல்லாத இடத்தும் அரைக்கும் ஆலைகட்கு உப்பு வழங்கப்படுகின்றது. அரைத்த உப்பு கள்ளச் சந்தைக்கே சென்றடைகின்றது. உப்பு அரைக்கும் ஆலைகள் கொடுத்த உப்பை அரைத்துக் கொடுக்கவே பயன்படவேண்டும். அவர்கட்குத் தனிப்பட்ட முறையில் ஏன் கோட்டா வழங்க வேண்டும்?

### பேசாலை மோசடிகள்:

பேசாலையில் உப்பு அரைக்கும் ஆலைகள் உள்ளன. இங்கு கோப்டவுண் இன்டஸ்றிஸ், சந்தியோகு பீரிஸ், போன்றவர்கள் நன்கு உப்பு அரைக்கிறார்கள். இதில் சந்தியோகு என்பவர் 35 கிலோ உப்பினை மூடையில் கட்டி 50 கிலோ என மீனவருக்கு விற்கிறாராம். இது பற்றி விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கட்கு விளங்கப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சமீபத்தில் 12 கிலோ உப்புப்பதுக்கி வைத்த கூட்டுறவுத் தலைவி ஒருத்திக்கு இங்குள்ள பரிசோதகர் ஒருவர் வழக்குத் தொடர்ந்து வெற்றிகரமாக வழக்கையும் நடாத்தினார். 12 கிலோ இருக்கும் இடம் இவர்கட்குத் தெரியும். ஆயிரக்கணக்கில் பதுக்கல் வியாபாரம் செய்யும் ஒருவரைப் பிடிக்க அரச அதிபராலும் முடியவில்லை; விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தாலும் முடியவில்லை, சொன்னால் வெட்கக் கேடு!

### பிடி ஐயா பிடி:

மன்னார் நகரில் இலட்சக்கணக்காக உப்பு வியாபரத்தில் உழைப்பவர்கள் வி.கே. அன்னலிங்கம், பிரான்சிஸ் எண்டர்பிறைஸ், கரீம் ஸ்ரோஸ், கே டலிமா (வங்காலை) திருவள்ளுவர் ஸ்டோர்ஸ் எனப் பொது மக்கள் கதைக்கிறார்கள். ஆனால் மிகப்பெரிய பதுக்கல் வியாபாரியாக அயன் தியேட்டருக்கு அருகில் உள்ள மெசியா ரவி என்பவர் காணப்படுகிறார். இவர்கள்ள விலையில் வெளிப்படையாக உப்பு வியாபாரம் செய்கின்றார். கச்சேரி உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அல்லது வேறொரு மேலதிகாரிக்கு மிகவும் தேவையானவராம். இதனால் தான் இவர் துணிந்து கள்ளச் சந்தை வியாபாரம் செய்ய முடிகின்றது. உப்பு இல்லாத இந்தக்காலத்தில் இவருக்கு எப்படி வியாபாரத்துக்கு உப்புக் கிடைத்தது? உப்பளத்தில் பெருந்தொகை உப்பு வாங்க யார் அனுமதி கொடுத்தார்கள்? இது வேலியே பயிரை மேய்ந்த கதை அல்லவா?

### உப்பளத்தை விலை பேசும் ஓ.ஐ.சி.

இவ்வாறு உப்பு விடயத்தில் பல்வேறு மோசடிகள் இருப்பது ஒரு புறம் இருக்க மன்னார் உப்பளத்தில் இருக்கும் உப்பினை முறைகேடான முறையில் வெட்டி ஏத்தும் முகவராக ஓ.ஐ.சி. செயல்படுகிறாராம். 50 மூடை கொடுக்க அனுமதிப்பத்திரம் கச்சேரியில் இருந்து கொடுக்கப்பட்டால் 75 மூடைகள் விற்கப்படுமாம். மிகுதியை ஓ.ஐ.சி. தனது சட்டைப்பைக்குள் போட்டு விடுவதாகவும் கேள்வி. சன்மானம் வழங்கும் வர்த்தகர்கட்கு மூடையில் மேலதிகமாக ஒரு கிலோ மேலும் போட்டுக்கொடுக்கப்படுகிறதாம். இது சம்பந்தமாகவும் இவர் பெண் ஊழியர்களை நடாத்தும் விதம் குறித்தும் அரச அதிபர் மட்டத்தில் தொழிலாளர்களால் மனு ஒன்று கொடுக்கப்பட்டும் ஏதும் நடக்கவில்லையாம். அது மாத்திரம் அன்றி மன்னார் நகரத்துக்கு இந்த உப்பளம் மூலமாகவே இரவில் கசிப்பு கடத்தப்படுவதாகவும் தகவல்கள் கூறின. இப்படியான ஓ.ஐ.சீக்கள் நாட்டுக்குக்

→16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உள்நாட்டுப் போரும் அதன் அரசியல் கோட்பாடுகளும்

-அஜித் ரூபசிங்க

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்து வந்த உள்நாட்டுப் போரின் மூன்றாம் கட்டப்போர் தொடங்கி இற்றைக்கு ஒரு வருடமும், நான்கு மாதங்களுமாகி விட்டன.

இராணுவ பலத்தைக் கொண்டு விடுதலைப்புலியினரைத் துரிதமாக, தீர்க்கமாக வெற்றிக் கொள்ளப் போவதாக அரசாங்கம் அளித்திருந்த வாக்குறுதியைத் தொடர்ந்து நடைபெற்று வந்த சம்பவங்கள் பொய்யாகியுள்ளன. இந்த யுத்தம் முன்னெப்பொழுதுமில்லாத அளவுக்குப் பேரழிவை ஏற்படுத்தி இருப்பதோடு அதன் நிகழ்வுகள் இன்னொரு கட்டத்துக்கு இப்போரை இழுத்துச்சென்றுள்ளன. முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஐயத்துக்கிடமின்றி இதை நிரூபித்துள்ளது. அதன் விளைவாக தெஹிவளையில் நடந்த குண்டுவெடிப்பு - இந்த அரக்கத்தனமான செயலுக்கு யார் பொறுப்பாக இருந்தாலும் அதற்கு நியாயம் கற்பித்துவிட முடியாது. முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பிரதேசங்களில் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் குண்டுத் தாக்குதல்களையும் ''ஷெல்'' வீச்சுக்களையும் மேற்கொண்டு அப்பாவி மக்களை அச்சம் கொள்ளச் செய்து சரணடையச் செய்யவும், படைத்துறைத் தலைவர்களின் குன்றிப் போன அகங்கார முனைப்புக்கு ஆதரவு, சலுகை காட்டவும், முற்றுகையிடப்பட்டிருக்கின்ற அரசாங்கத்தின் நொறுங்கிப்போன தன்மதிப்பை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ளவும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையே ''சத்ஜய'' இராணுவ நடவடிக்கை. இது நேர்மையான இராணுவக் குறிக்கோளை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையல்ல.

யுத்தத்திற்கு பலியாகும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையும், மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிப்பதையும், இராணுவத் தாக்குதல் தொடர்வதையும் பார்க்கும் போது இராணுவ நடவடிக்கையூடாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காகத்தான் அரசாங்கம் முனைகின்றதென்பதைக் காணக் கூடியதாக இல்லை. இராணுவத்தின் உயர்ந்த நிறைவேற்றதிகாரங்களை பலவந்தமாக உரித்தாக்கிக் கொண்டிருக்கிற திமிர்பிடித்த படைத்துறைத் தலைவர்களின் வெட்கம் கெட்ட பகட்டாரவாரக் கூச்சலுக்குள் கடந்தகாலம் கற்றுத் தந்த பாடங்களெல்லாம் அடங்கிப் போய்விட்டன.

பேச்சுவார்த்தையின் மூலமே அரசியல் தீர்வொன்றைக்கொண்டு வரவேண்டும் என்ற ஆணித்தரமான தெளிவான கொள்கையை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமும், ஜனாதிபதி அவர்களும் கொண்டிருந்தாலும் தேர்தலின் பின் அதற்கான வழி திறபடக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும் அரசாங்கம் ஆரம்பத்திலேயே அதைக் குழப்பிக் கொண்டது. இந்திய இராணுவத்தை நிலைகொள்ளச் செய்து, சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்க அது நாசகார வேலைகளை செய்த போது பாராமுகமாக இருந்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களிடமிருந்த அலட்சியப் போக்கும், திறமையின்மையும் இப்படைகளின் நிலைப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் உரமிட்டன. இறுதிச் சுற்று சமாதான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததற்கு இவைதான் பிரதான காரணிகளாகும்.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்ட இராணுவ ஆட்சியைப் பொறுத்தவரையில் இதுதான் இதுநாள் வரை நடைபெற்றிராத அர்த்த சூனியமான இராணுவத் தீர்மானமாகும். காலஞ் சென்ற ஜெனரல் கொப்பேகடுவ இத்தகைய வீரதீரச் செயல்களைத் தவிர்த்திருந்தார். ஆனால், புதிய இராணுவத் தளபதிகள் போர்க்களத்திலே தமது ஆண்மையை நிரூபிப்பதில் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சியை நிலைகொள்ளச்செய்திருப்பதனால் தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான இடைவெளி அகலித்துள்ளது. அது

*அஜித் ரூபசிங்க அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்சின் கலிபோனிய பல்கலைக்கழகத்தில் அரசியல் முதுமாணிப் பட்டம் பெற்றவர். இவர் தேசிய சிறுபான்மையினரின் உரிமைக்காகப் பரிந்துபேசும் சட்டத்தரணி; ஒரு சமூகவியலாளர். தற்போது தேசிய சமாதானப் பேரவையின் தேசிய அமைப்பாளராகப் பணி புரிகிறார்.*



மாத்திரமல்ல முன்னெப்போதுமில்லாத வகையில் தனியீழக் கோரிக்கையில் பேரார்வத்தை ஏற்படுத்தி அக்கோரிக்கை நியாயமானது என்ற கருத்துக்கு உரம் போட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை புதிய இராணுவத்தளபதிகள் முரட்டுத்தனமாகப் பிளவுபடுத்த மேற்கொண்ட தீரச்செயல்களின் விளைவுதான் தனியாட்சிக் கோரிக்கை வலுப்பெற்றதற்கான காரணமாகும்.

அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டமானது அவ்வாறான முன்னைய வெளியீடுகளைப் போலவே நூதனசாலையில் காட்சிக்கு வைக்கும் பொருளாகி விட்டது. அதில் தொக்கி நின்ற உட்பொருளை ஐ.தே.க. நிராகரித்தும் கூட இனவாதிகளுக்கு இரை போடும் விதத்தில் ஓகஸ்ட் மாதத் தீர்வுத்திட்டம் விரைவாகவே கைவிடப்பட்டது. விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்துவதற்கு ஒரு ஆயுதமாகத்தான் இது பகிரங்கமாக வெளியிடப்பட்டது. ஆனால் அதுவே யுத்தத்தைத் தொடர ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட்டது.

பொ.ஐ.மு. அரசாங்கத்தின் செயல்களை மூடி மறைக்க சர்வதேச சமூகங்கள் வகித்த பங்குகள் சட்ட விரோதமானவையாகும். நாடு முழுவதற்கும் அவசர காலச்சட்டத்தை பிரகடனப்படுத்தியது பற்றியும் பத்திரிகைச் செய்திகள் தணிக்கை பண்ணப்படுவது பற்றியும் அவை குற்றம் சாட்டவில்லை. மனித உரிமைகள் மீறப்படுவதையும், அரக்கத்தனமான குண்டுவீச்சுக்களையும், அப்பாவிப் பொது மக்கள் தொந்தரவு செய்யப்படுவதையும் அவை கண்டிக்கவில்லை. இந்நாடுகளில் சில, பொ.ஐ.மு. அரசாங்கத்துக்கு, பேரழிவுகளை ஏற்படுத்தும் மிக நவீனரக ஆயுதங்களை தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் சித்திரவதை உபகரணங்களும் கூட அடங்குகின்றன. நவீன யுத்த ஆயுதங்களைக் கையாள்வதற்காக யுத்த தந்திரத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சியளிப்பதற்காக அமெரிக்கா அதன் மிகச்சிறந்த இராணுவ நிபுணர்களை அனுப்பியிருக்கிறது. விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு எனவும் அதை இராணுவ ரீதியாகவே அணுக வேண்டுமெனவும் அமெரிக்கா குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்புத் திணைக்களம் விடுதலைப்புலிகளின் மீது பாலியல் வல்லுறவுக் குற்றங்களைக்கூட சுமத்தியிருந்தது. இது பொறாமையில் விளைந்த மூடத்தனமான பொய்க் குற்றச்சாட்டாகும். அமெரிக்கா உலகம் முழுவதிலும் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமெனக் குரல் கொடுத்துக் கொண்டே உலகின் பெரும்பான்மையான பயங்கரவாத ஆட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

இந்தியா அதன் அண்மை நாடான இலங்கையில் தன் நிலைப்பாட்டைப் பலப்படுத்திக் கொள்ள வடக்கு கிழக்கில் நடைபெறுகின்ற தமிழர்களின் தேசிய போராட்டத்தை ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்த் தலைமைத்துவத்தை நிலைபெறச் செய்வதன் மூலம் திருகோணமலையில் காலூன்றக் கூடிய வகையில் தனது வியூகத்தை பலப்படுத்திக்கொள்வது அதன் நோக்கமாகும். அது மாத்திரமல்ல, இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட மக்கள் தேசிய ஜனநாயகத்தில் காட்டுகின்ற பேரார்வத்தைப் பயன்படுத்தி அதில் பங்கெடுத்துக் கொள்வதும் அதன் நோக்கமாகும். விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் நிதியுதவியளிப்பதும், ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதன் மூலம் அதைவிட்டால் வேறுவழியில்லை என்றளவுக்கு அடிமைத்தளையை உருவாக்கி அதன் மூலம் பிராந்தியங்களில் தனது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதாகும்.

இந்த சர்வதேச ஆட்டக்காரர்களின் மரணவிளையாட்டில் இலங்கை மக்கள் நூலாட்ட பொம்மைகளாக மாறியிருப்பதோடு நிராதரவான முறையில் அவ்விளையாட்டுக்குப் பலியாகியிருக்கின்றனர். மீண்டும் ஒரு முறை வடக்கு கிழக்கு வாழ் மக்கள் முன்னொருபோதுமில்லாத வகையில் சொல்லொண்ணா துயரங்களையும், பேரழிவுகளையும் அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். அதன் விளைவாக அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான பகை முன்னைவிட தீவிரமாகியுள்ளது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வேலையில்லாப் பிரச்சினையும், பணவீக்கமும் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இலட்சக்கணக்கான ஏழை விவசாயிகளும், மீனவர்களும், தனியார் துறை/ திறந்த சந்தைப் பொருளாதாரச் செயற்பாடுகளினால் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். தன்னிச்சையான தணிக்கையினாலும் நாடு முழுவதிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசர காலச்சட்டத்தினாலும் ஜனநாயக விழுமியங்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றோடு அரசியல் யாப்புக்குப் புறம்பாக இராணுவ மல்லாத பாதுகாப்புப் படை போன்ற இராணுவ இணைப்படையொன்றை அமைத்து அதற்கு அளப்பரிய அதிகாரங்களையும் கொடுத்துள்ளது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகள் இரகசியமாக ஒழிக்கப்பட்டன. பொலிஸ் அதிரடிப்படையினரால் மேதின ஊர்வலம் தாக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் காலவரையறையன்றி ஒத்திவைக்கப்பட்டன. முன்னெப்போதுமில்லாதவாறு வெளிநாட்டுக் கொள்ளையர்களால் நமது தொழிலாளர்கள் சுரண்டப்படுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மேலும் பாதுகாக்கப்பட்டு அதுவே ஒரு அரணாக அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக நடைபெறுகின்ற யுத்தம் இந்த நாட்டுப் பொருளாதாரத்திலும், தார்மீகப்பாதையிலும் இரத்தம் பெருகச் செய்துள்ளது. அது மாத்திரமல்ல முன்னொருபோதுமில்லாத வகையில் பிராந்திய சர்வதேச அதிகாரங்கள் நம்நாட்டு சமுதாய வாழ்க்கையிலும் அரசியல் பொருளாதார கலாசார துறைகளிலும் தனது கோரப்பற்களைப் பதித்துள்ளது. இலங்கை காலனித்துவ அரசாங்கத்தின் நூலாட்ட பொம்மையாக மாறியிருக்கின்றது. அதனால் பிராந்திய சர்வதேச அதிகாரங்கள் நம்நாட்டு தேசிய பாதுகாப்பு நடவடிக்கைகள் கூட ஆளப்படுகின்றன.

முன்பு இந்த நாட்டை ஆண்ட ஐக்கிய தேசியக்கட்சியை விட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மோசமான குற்றவாளியென்பது நிரூபிக்கப்படும் வரை ஐ.தே.க. காத்திருக்கின்றது. ஐம்பது வருடங்களாக இருந்த ஐந்து நட்சத்திர ஜனநாயகத்தில் மக்களின் தெரிவுக்காக அளிக்கப்பட்ட சந்தர்ப்பம் இதுதான். விடுதலைப் புலிகளைத்தடைசெய்ய வேண்டும்என்று சொன்ன பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் கட்சி அரசியல் என்ற அதளபாதாளத்தில் விழுந்து வங்குரோத்தடைந்த அதே வேளை விடுதலைப்புலிகளை இராணுவ பலத்தால் மாத்திரமே அழிக்க முடியும் என்ற நிலைப்பாட்டைத் தாம் மாத்திரம் கொண்டிருப்பதாக ஜே.வி.பி. நிரூபிக்க முயல்கிறது. யுத்தத்திற்காக வளைந்து கொடுக்கின்ற குறுகிய அரசியல் சக்திகள் அனைத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும், சர்வதேச சக்திகளினதும் கைப்பாவைகளாக ஆகியிருக்கின்றன. அவர்கள் இலங்கை மக்களின் ஜனநாயக ரீதியிலான தேசாபிமான ஆர்வத்திற் கெதிராகவே தம்மை வைத்துக் கொண்டுள்ளனர்.

பொ.ஐ.மு. கூட்டரசாங்கத்தின் பாராளுமன்றக்கட்சியான ''இடது''சாரிக் கட்சிகள் இந்த யுத்தத்தின் நிமித்தம் உலக வங்கி ஆட்டுவிக்கின்ற ஆடுகின்ற அரசாங்கத்திற்கு இரகசியமாக ஆதரவளித்து மக்களைப் பரிதாபகரமாக ஏமாற்றியிருப்பதை வெளிப்படையாகக் காட்டியுள்ளன. அவர்கள் ஆரம்பகாலத்தில் இருந்தே பாராளுமன்றத்தில் வரப்பிரசாதங்களைப் பெறுவதற்காகவே இந்த நம்பிக்கைத் துரோக வழியில் சென்றுள்ளனர்.

தென்பகுதி தமிழ் அரசியல் கட்சிகள் குழுக்கள் அனைத்தும் அரசாங்கம் விடுதலைப்புலிகளைத் தடை செய்வதைத் தடுத்து வந்துள்ளன. அதற்கு காரணமுண்டு. விடுதலைப்புலிகள் ஒரு பலமுள்ள அமைப்பாக இருப்பதனால், அதை இணக்கமான முறையிலேயே அணுகவேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் கொண்டிருந்தனர். இந்தியாவும், இலங்கையும் கூட்டாக நிபந்தனை விதித்து அவர்களைச் சரணடையச்செய்ய வேண்டுமென்பது அவர்களின் காலம் கடந்த அனுபவங்களாகும். இந்த யுத்தத்தின் பயங்கர விளைவினால் பெருந்தொகையான மக்கள் வறியவர்களாக ஆகியிருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் இந்த யுத்தம் தேவையற்ற தொன்றாகும்.

அரசியல்வாதிகளுக்கும், சலுகையுள்ளவர்களுக்கும், தீயவழியில் இலாபம் சம்பாதிப்பவர்களுக்கும், இராணுவ பலத்தில் மூடத்தனமாக நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கும், இராணுவவாதிகளுக்கும், பாஸிசவாதிகளுக்கும் மாத்திரமே இந்த யுத்தம் தேவையாக இருக்கின்றது.

இதைவிடுத்து மற்றெந்த மக்களுக்கும் அன்றாட ஆக்கிரமிப்பும், அவமதிப்பும் அழிவும் தேவையேயில்லை. மேலும் திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கையும் ஐந்து நட்சத்திர பொருளாதார மோசடியும் மீள வேண்டும் என்ற அவசியமும் அவர்களுக்கில்லை. அந்த மக்களுக்குத் தேவையாக இருப்பதெல்லாம் தங்கள் எதிர்காலத்தை உறுதிப் படுத்தக் கூடிய ஒற்றுமையான, சுதந்திரமான சௌபாக்கியம் கொண்ட நாடொன்றில் கௌரமாக வாழ வேண்டும் என்ற தேவைதான். தற்பொழுது நடைமுறையிலிருக்கும் அரசியல் முறை உண்மையிலேயே மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அரசியல் கட்சிகள் அனைத்தும் இத்தகைய நடைமுறையில் வறிய மக்களை மேலும் மேலும் வறுமைக்குள்ளாக்கியிருப்பதோடு அவர்களின் நிலையைத் தாழ்த்தி துன்பத்திற்கு ஆட்படுத்தியுள்ளன. அதே வேளை இந்த விளையாட்டின் மூலம் ஒரு சிறு தொகை பிரபுக்களும், பெரும் முதலாளிகளும், ஊழலில் ஈடுபடும் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரம் கொண்டவர்களுமே இலாபம் அடைந்துள்ளனர். இந்த அரசாங்கத்திலும், சமூகத்திலும் ஒரு அடிப்படை மீள் கட்டமைப்பும், ஜனநாயக முறைமைகளும் தேவையென்பதை மக்கள் வலியுறுத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தை இழந்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் தந்திரமாகப் பின்வாங்கினர். இன்னும் அவர்கள் சமாளித்துக்கொண்டிருக்கவும், ஏன் அவர்கள் போராடும் சக்தியைப் பெருக்கிக்கொள்ளக்கூடியதாகவும் கூட இருக்கின்றனர். அவர்கள் தமது இராணுவ நடவடிக்கைகளை வலிகாமம் பிரதேசம் முழுவதிலும், முல்லைத்தீவிலும், கிழக்கிலும், வடமேற்கிலும், கொழும்பிலும் விஸ்தரித்துள்ளனர். விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளையும் ஜனநாயக விரோத செயல்களையும் தமிழ் மக்கள் கடுமையாக எதிர்த்தாலும் கூட விடுதலைப் புலிகள் மாத்திரம் தான் இந்திய அமைதி காக்கும் படைக்கும் இலங்கை இராணுவத்திற்கும் எதிராக நின்ற ஒரேயொரு படையென்று மதிப்பளிக்கின்றனர். விடுதலைப்புலிகள் தொடர்ச்சியான வன்முறைகளைக் கைவிட்டு சமாதானத்தையும் சமத்துவத்தையும் நிலைநாட்ட பேச்சுவார்த்தைக்கு வரும்படி மத்தியஸ்தம் வகிக்கக்கூடியவர்களால் அழைக்கப்பட்டனர்.

இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தும் வழிமுறைகளைக் கையாளப் போகின்றோமா? அல்லது அந்நிய ஆதிக்கங்கள் விதிக்கின்ற நிபந்தனைகளுக்கு தொடர்ந்தும் அடிபணிந்து ஒரு நவீன நாடாக பாலியல் வல்லுறவுகளையும் தொடர்ச்சியான அழிவுகளையும் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கப் போகின்றோமா?

ஜனநாயக ரீதியிலான, அனைத்து தேசாபிமான படைகளும் இதை நன்றாக ஆராய்ந்து இவ்வினாக்களை ஆழமாக சிந்திக்க வேண்டும். அத்தோடு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக் காணவும் அதன் மூலம் ஒற்றுமையான சுதந்திரமான ஜனநாயக ரீதியிலான ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேணவா கொண்டுள்ள மக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே-13

# 'வாயை மூடு நான் சொல்வதைக் கேள்..'

மூலம்:டொக்டர் ஜெயிம் ஜி ஜினோட் தமிழில்:அருண்

**யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு**

நாளாந்த வேலைகள் தொடர்பாக பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்படாத 'யுத்தத்தி'ல் ஈடுபட்டிருக்கும் பெற்றோர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது என்பது. குழந்தைகளைக் கண்டிப்பதற்கு எமக்கு இருப்பதைவிட அதிகளவு நேரமும் சக்தியும் அவர்களுக்கு இருக்கிறது. ஏதாவது ஒரு கட்டத்தில்நாம் வெற்றி பெற்றிருந்தாலும் கூட, அவர்கள் உயிர்ப்பற்றவர்களாக உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவர்களாக தம்மை மாற்றிக்கொள்வதன் மூலமாகவோ, அல்லது வேண்டுமென்றே தவறிழைத்தல். பிற எரிச்சலூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடல்போன்றவற்றின் மூலமாகவோ தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவே செய்வர். நாம் வெல்வதற்கு ஒரேயொரு வழி மட்டுமே உண்டு. அதாவது குழந்தைகளை வென்றெடுத்தல் மூலமாக. இந்த முயற்சி சாத்தியமற்ற ஒன்று போலத் தோன்றினாலும் சாத்தியமான ஒன்று தான். இது கடினமான ஒன்று மட்டுமே அன்றி சாத்தியமற்றதல்ல. இதைச் செய்யும் ஆற்றலும் கூட எமக்கு இருக்கிறது. குழந்தையுடன் இப்போது எமக்கு ஒரு சினேகபூர்வ உறவு இல்லாவிட்டாலும் கூட, அப்படி ஒரு உறவைக் கட்டியெழுப்புவதும் அதன் மூலமாக அவர்களை வென்றெடுப்பதும் சாத்தியமானவைதான்.

பெற்றோர்கள்இப்படிச்செய்வதன்மூலம் குழந்தைகளிடம் நல்ல மாற்றங்களை உருவாக்கலாம்.

*1. அக்கறையுடன் கவனித்தல்:* குழந்தைகள் தமது உணர்வுகளிலும் சிந்தனைகளிலும் பெற்றோர்கள் அக்கறையில்லாதிருப்பதாக உணரும் போது விரக்தியும் கோபமும் அடைகிறார்கள். அவர்கள் தமது கருத்துக்களும், உணர்வுகளும் மற்றவர்கள் அக்கறைப்படும் அளவுக்குப் பெறுமதிவாய்ந்தவை அல்ல என்ற முடிவுக்கு வருகின்றார்கள். அதனால் தாம் விரும்பப்படக் கூடியவர்கள் அல்ல என்றும் தம்மை யாரும் விரும்பவில்லையென்றும் முடிவுகட்டுகிறார்கள்.

குழந்தையின் உணர்வுகட்கு அக்கறையுடன்கவனிப்பை செலுத்துவதன்மூலமாக ஒரு பெற்றோர் அக்குழந்தையின் கருத்துக்கள் பெறுமதிவாய்ந்தவை; அக்குழந்தை கௌரவிக்கப்பட வேண்டியது என்ற செய்தியை தெரியப்படுத்துகிறார்கள். இந்தச் செய்தி, குழந்தை தன்னைத்தானே பெறுமதி வாய்ந்த ஒன்றாகக் கருதும் நிலையை உருவாக்குகின்றது. தன்னைத்தானே பெறுமதிவாய்ந்ததாக உணரும் போது ஒரு குழந்தை உலகின் பிறவிடயங்களுடனும் மக்களுடனும் மிகவும் சிறப்பான முறையில் ஈடுபாடு காட்டுகிறது.

*2. கோபத்தினை தவிர்த்தல்:* பெற்றோர் மிகவும் கவனமாக எரிச்சலையோ கோபத்தையோ உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளை அல்லது அபிப்பிராயங்களைத் தவிர்க்க வேண்டும்.

*அவமதிப்பு:* உனது பாடசாலைக்கு உன்னாலே கெட்டபேர். எங்களுக்கு உன்னால் ஒரு பிரயோசனமும் இல்லை...

*வசைபாடல்:* மொக்கு, கிழடு, முட்டாள், ஊர்சுற்றி, கெட்டவன்.... போன்றவை.

*எதிர்கூறல்:* கடைசியா நீ சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்கோ சிறைச்சாலைக்கோதான் போய் சேருவாய்....

*மிரட்டல்:* இப்ப நீ பேசாமல் இருக்காட்டில் உனக்கு ஒண்டுமே கிடைக்காது. உனக்குத் தாற சிலவுக் காசும் கிடைக்காமல் போய்விடும்.

*குற்றம் சுமத்தல்:* ''எப்பவும் இப்படித்தான் நீதான் முதலில் பிரச்சினையைத் துவக்கி வைக்கிற ஆள்....''

*அதிகாரம் செய்தல்:* ''வாயை மூடு. இப்ப நான் சொல்லிறதைக் கேள்....''

*3. உணர்வுகளையும் சிந்தனைகளையும் எந்த விதமான தாக்குதல் நோக்கமும் இன்றி வெளிப்படுத்தல்*

குழந்தையின்மீதோ அதன்கௌரவத்தின் மீதோ எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாத விதத்தில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் பெற்றோர்கள் நெருக்கடியான சூழல்களை வெற்றிகரமாகக் கையாளக் கூடியவர்களாக உள்ளனர்.

பெற்றோர்கள், குழந்தைகளை அக்கறையுடன் கவனிப்பவர்களாகவும், அவர்களைத் தாக்கக்கூடிய அபிப்பிராயங்களையும் தேவைகளையும் எத்தகைய அவமதிப்பும் இல்லாமல் தெரிவிப்பவர்களாகவும் இருந்தால் குழந்தைகளிடம் மாற்றம் உருவாகத் தொடங்கி விடும். ஆதரவான சூழல் குழந்தையைப் பெற்றோரை நோக்கிக் கவருகிறது. பெற்றோரது அணுகுமுறை, நியாயமான தன்மை, அக்கறை, பண்பு என்பன மிகவும் கவனிக்கப்படுவதுடன் மாறுதலுக்காக குழந்தை ஊக்குவிக்கப்படுகிறது. இவை ஒரு நாளில் நடக்கும் மாற்றங்கள் அல்ல. ஆனால், இந்த முயற்சிகள் நிச்சயமான பலனை இறுதியில் தரவே செய்யும்.

இந்த விடயங்களை அதாவது இந்த அணுகுமுறையையும், நடைமுறையையும் செயற்படுத்தும் போது ஒரு பெற்றோர் குழந்தைக்கு பொறுப்புணர்ச்சியைப் போதிப்பதில் பெரும்பகுதியை நிறைவேற்றி விடுகின்றனர். ஆயினதும் பெற்றோரது மாற்றம் மட்டும்போதுமானதல்ல. ஏனென்றால், பொறுப்புணர்ச்சி பற்றிய உணர்வு ஒவ்வொரு குழந்தையினதும் சொந்த முயற்சிகளினூடாகவும் அனுபவங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே பெற்றோரின் மாற்றம் குழந்தை பொறுப்புணர்ச்சியை புரிந்து கொள்வதற்கான சாதக சூழலை உருவாக்கும் அதேவேளை, குழந்தை கற்றுக் கொள்வதற்கு சில குறிப்பான அனுபவங்களும் தேவைப்படுகின்றன. ஆகவே குழந்தையின் எந்த வயதில் எந்த விடயங்கள் பொறுப்புணர்ச்சிக்குரியவை என்பதை தீர்மானித்துக்கொள்வது முக்கியமானதாகும்.

(வரும்)

# நீரும் நிலமும்



சேரன்

இந்த ஆறு
எங்கு பிறந்தது என்று எனக்குத் தெரியாது.
மூன்று சமவெளிகளுக்கும்
முப்பதாயிரம் வயல்வெளிகளுக்கும்
மூந்நூறு கிராமங்களுக்கும் அப்பால்
சூரியனையும் மறைத்து விடுகிற மாதிரி
எழுந்து நின்றும்
விழுந்து கிடந்தும்
தொடர்ந்து விரிந்தும்
தன்னுடைய பிரமாண்டத்தை அறிவிக்கிற மலைகளின்
கண்ணுக்கு எட்டாத சிகரங்களுள் ஒன்றில்
மழை நெருங்காத வெளியில்
ஆகாயத்தினதும் காற்றினதும் நிலத்தினதும்
முதலாவது கூடலின் ஒரு குருதித் துளியாய்ப்
பிறந்தது இந்த ஆறு என்று சொல்கிறார்கள்

தெரியாது

இந்த ஆறு எங்கு பிறந்த தெனக்
கண்டடையச் சென்றவர்களில்
சிலர் தேவதைகளாகவும்
சிலர் பிசாசுகளாகவும் மாறிவிட்டனர்
என்று பெரியத்தை சொல்கிறாள்
தொல் கதைகளிலும் மாய ஐதீகங்களிலும்
வாழ்க்கையைத் தோய்த் தெடுத்து வைத்திருக்கிற
அவளது வார்த்தைகளில்
இப்போது எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும்
வாழ்க்கை பற்றிய விசாரணைகளை
வசீகரமாக வைத்திருப்பது எப்படி என்பதை
அவள் கற்றுத் தந்தாள்
என்று இப்போது தெரிகிறது.

சிறு வயதிலோ
எங்கள் கற்பனைப் புலத்தை வடிவமைத்தவை
கடலும் வயலும் உப்பு நீர் ஏரிகளும்தான்
எங்களிடம் மலை இல்லை
ஆறுகளையும் தெரிந்திருக்கவில்லை
வருடம் ஒரு முறை மாரிக்காலத்தில்
வெள்ள வாய்க்கால்கள் சிற்றாறுகள் எனப்
பாவனை தந்தாலும்
நம்ப முடிந்த தில்லை.

எங்களுடைய கற்பனைகள், உருவகங்கள்
சிந்தனைகளின் மையச் சுழலாக இருந்தது
கடல்,
நிலத்துடன் இடையறாத போராட்டத்தில்
ஈடுபட்டுள்ள கடல்.
அதற்கு ஒரு கரை இருந்தது,
எப்போதும்
கோபமான போது சீறி எழ;
காதலான போது கிறங்கி விழ.

உப்பு நீர் ஏரிகளுக்கும் எப்போதும்
ஒரு கரை இருந்தது
அவற்றின் மௌன உரையாடல் இன்று வரை
ஒரே மாதிரியாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.
மழை கால மிதப்பில் சிலவேளைகளில்
கரையை மீறினாலும்
மத்தியான வெய்யிலில் ஒடுங்கிக் கிடப்பதே
உப்பு நீர் ஏரிகளின் வாழ்வாயிற்று.

ஆனால், இந்த ஆறு
வண்ணங்கள் மாறும் திணைகளைக்
கடந்து செல்கிறது;
காடுகளைப் பார்த்திருக்கிறது
பாலை வெளிகள், நகரங்களுடாகப் பாய்கிறது
போகிற வழியெல்லாம் நிலத்தை மலர வைக்கிறது
மூங்கில் மரங்களுக்கு உயிர் தருகிறது
கரையிலிருந்தாலும்
நீர் எறியக் கிளை தாழ்த்திய மருத மரங்களை
வருடிச் செல்கிறது
அதனுடைய வளைவு நெளிவுகளில்
கலைஞர்களின் தூரிகைக்கு அகப்படாத
ஒரு நளினம்,
அதனுடைய குரல்களில் கணத்துக்குக் கணம்
மாறும் ஒரு இன்னிசை.

எப்போதுமே இந்த ஆற்றின் குரலைக்
கேட்க முடிகிறதா?

அது சல்லாபிக்கிறது

கரைகளுடன், கரையின் காடுகளுடன்
காட்டு மரங்களுடன், மரங்களில் தூங்கும்
கொடிகளுடன் கொடிகளில் ஆடும் பறவைகளுடன்,
பறவைகளுடன் சேர்ந்து நீரில் மூழ்கி எழும்
மனிதர்களுடன், மனிதர்களின் எண்ணங்களுடன்,
எண்ணங்களின் அலைகளுடன்

எல்லோருடனும் எல்லாவற்றுடனும்
ஒரே நேரத்தில்
வேறு வேறு மொழிகளில் பேசுகிறது
ஆறு
இந்த ஆறு ஒரு போதுமே உறைவதில்லை
அதனுடைய உலர்ந்த தடங்களுக்கும்
உயிர் இருக்கிறது.
நாணல் தன்னுடைய உடலை வளைத்து
ஆறு பிரவாகமெடுத்துச் சென்ற திசையைக்
காட்டுகிறது
புதர் மண்டிய சதுப்பு நிலங்களில்
நீர்க் கோடுகளாக நகர்கிறது ஆறு

ஒரு முறை தொடுகையில் சிலிர்த்தெழும்
கரைகள் அனைத்தையும்
இந்த ஆறு ஞாபகம் வைத்திருக்கிறதா
என்று தெரியாது.
கரைகளுக்கும்,
இக்கணம், இக்கணம் கடந்து செல்கிற
ஆற்றை ஞாபகமிருக்குமா தெரியாது.


என்றாலும்
ஓடிக் கொண்டிருக்கிறது ஆறு

சிலவேளைகளில் ஒரு புன்னகை போல
சிலவேளைகளில் ஒரு தாலாட்டைப் போல
சிலவேளைகளில் மோகவசப்பட்ட ஒரு பூவைப் போல....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சம்பள உயர்வு என்கிற பம்மாத்து!

- விசுவலிங்கம்

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளத்துடன் எட்டுரூபாவை கூட்டித் தரும்படி கேட்டு கடந்த ஏப்ரல் மாதம் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

பெருந்தோட்டத்துறை அமைச்சு 14 அம் சத்திட்டம் என்ற ஒன்றை முன்மொழிந்து மலையக மக்கள் முன்னணியை பயன்படுத்தி வேலை நிறுத்தத்தை முறியடிக்க நடவடிக்கை எடுத்தது. எனினும், வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிகரமாக நிறைவெய்தியது. தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவும் யூ.என்.பியின் தொழிற்சங்கமான இ.தே.தோ.தொ.சங்கம் மற்றும் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியிலுள்ள சங்கங்களும் இடதுசாரி தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டன. மலையக மக்கள் முன்னணி தொழிலாளர்களும் வேலை நிறுத்ததில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வேலை நிறுத்தத்தை அடுத்து ஜனாதிபதியால் விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. முன்னாள் தொழில் ஆணையாளர் வீரக்கோன் தலைமையில் கூடி ஆராய்ந்து அக்குழு பின்வருமாறு சிபாரிசு தெரிவித்தது.

1992 ஆம் ஆண்டு எல்லோருக்கும் வழங்கப்பட்ட 20ரூபா சம்பள உயர்வில் 12 ரூபா ஏற்கெனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டரீதியாகவும், நியாய ரீதியாகவும் பார்க்கின்ற போது எட்டு ரூபா சம்பள உயர்வை கேட்பதில் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை என்று அக்குழு சிபாரிசு செய்துள்ளது.

எனினும், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் திரட்டிய சம்பளமாக 83ரூபாவை வழங்குவதெனவும் அவர்களுக்கு வாழ்க்கைச் செலவு அலவன்ஸை இரத்துச் செய்வதெனவும் அத்துடன் 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித சம்பள உயர்வும் கிடையாது எனவும், முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒரு கூட்டு ஒப்பந்தமொன்றை செய்வதென தொண்டமானின் இ.தொ.காவும் யு.என்.பியின் இ.தே.தோ.தொ.சங்கமும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த இணக்கத்தை எதிர்த்தும் அந்த இணக்கம் கூட்டு ஒப்பந்தமாக கையெழுத்திடப்படக்கூடாது என்றும் இ.தொ.கா, இ.தே.தோ.தொ. சங்கம் தவிர்ந்த ஏனைய தொழிற்சங்கங்கள் அனைத்தும் (மலையக மக்கள் முன்னணியும் கூட) கடந்த ஒகஸ்ட் மாதம் 9ம் திகதி வேலை நிறுத்தம் செய்தன. இ.தொ.கா.வின் கணிசமான அங்கத்தினர்களும் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

அவ்வேலைநிறுத்தத்தில் 60 சதவீதமான தொழிலாளர்கள் கலந்துகொண்டதாக பத்திரிகை அறிக்கைகளும் சுதந்திரமான அறிக்கைகளும் தெரிவிக்கின்றன.

உத்தேச இணக்கத்தை எதிர்த்து கொழும்பு தொழில் அமைச்சுக்கு முன்னால் கடந்த ஒகஸ்ட் 29ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர் என பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 1000க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டதாக சுதந்திரமான அவதானிப்புக்கள் தெரிவிக்கின்றன.

உத்தேச இணக்கப்பாட்டில் குறிப்பிடப்படுகின்ற திரட்டு சம்பளமான 83ரூபாவில் எட்டு ரூபாய் சம்பள உயர்வு உள்ளடங்கவில்லை. அத்துடன் விலைவாசி கூடிக்கொண்டே போகும் போது இனிமேல் வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இல்லையென்று கூறுவது நியாயமற்றது. மேலும் எதிர்வரும் ஒன்றரை வருடங்களுக்கு சம்பள உயர்வைக் கோரமாட்டோம் என்று வாக்குறுதி அளிப்பது இன்னும் பயங்கரமானது. அதனால் அவ்வொப்பந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரானது. இதுவே தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் விளக்கமாகும்.

''சம்பள உயர்வு கோரிப் போராட்டம் நடத்தப்பட்ட ஏப்ரல் மாதம் தோட்டத் தொழிலாளியின் நாட்சம்பளம் 72ரூபா ஆகும். உத்தேச இணக்கப்பாட்டின் படி 11ரூபா அதிகரிக்கப்பட்டு 83ரூபா கிடைக்கும். எனவே கோரிக்கை விடுக்கப்பட்டதை விட அதிகமான சம்பள உயர்வே கிடைக்கிறது'' - இது இ.தொ.கா.வின் சமாதானம்.

இதில் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தின் விளக்கத்தையும் அவதானிப்பது அவசியமாகும். விளக்கம் பின்வருமாறு;-

சாதாரண அடிப்படைச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அதாவது கொழும்பு நுகர்வோர் சுட்டெண் ஒன்றிற்கு 4 சதமாக அதிகரித்து சம்பளமாக கொடுப்பதை சம்பள நிர்ணய சபை எல்லாத் தொழிற்துறையினருக்கும் நடைமுறைப்படுத்தி வந்தது. 1980களில் வெகு வேகமாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தாராள பொருளாதார கொள்கைத்திட்டங்களில் வாழ்க்கைச் செலவு வெகு வேகமாக அதிகரித்து வந்தது. அதனால் அடிப்படைச் சம்பளத்துடன் விஷேட வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் 1980களின் இறுதியில் எல்லாத் தொழிற்துறைகளிலும் நிறுத்தப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் 1992 வரை தொடர்ந்து வழங்கப்பட்டது.

எனினும், தொழில் திணைக்களத்தின் ம்டிவின்படி கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மீண்டும் வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் வழங்கப்பட்டது. அதன்படி ஜூலை மாதச் சம்பளம் ஒரு நாளுக்கு 80ரூபா 50 சதமாகும்.

அரசாங்க சபைகளின் கீழும், கூட்டுத்தாபனங்களின் கீழும் தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்ட காலத்தில் எல்லோருக்கும் வழங்கப்படும் சம்பள உயர்வுகளும் அலவன்ஸ்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுவது தவிர்க்க முடியாதிருந்தது. அதனால் ஏற்படும் நட்டங்களை அரசாங்கம் பொறுத்துக் கொண்டது. அதனாலேயே தோட்டங்கள் நட்டமடைந்தன.

ஆயினும், தனியார் நிர்வாகத்தின் கீழ் தோட்டங்கள் கொண்டு வரப்பட்ட பின்னர் மேற்படி நட்டங்களைத் தனியார் கம்பெனிகள் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளன. நிலையான லாபமில்லாத அதாவது தளம்பலான வருமானமுள்ள பெருந்தோட்டத்துறையில் எல்லாச் சம்பள உயர்வுகளையும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு அலவன்ஸ்களையும் வழங்குவது கடினமானது. வழங்கினால் கம்பெனிகள் நட்டத்திலேயே இயங்க வேண்டிவரும்.

பெருந்தோட்டப் பொருட்களுக்கு விலை உயர்வு கிடைக்கும் போது சம்பள உயர்வு வழங்கப்படுவது போன்று விலை குறையும் போது, சம்பளத்தை குறைப்பது சாத்தியமில்லை. அதேபோன்று வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் போது சம்பளம் அதிகரிக்கப்படுவது போன்று குறையும் போது சம்பளம் குறைக்கப்படுவது நடைமுறைச் சாத்தியமில்லை. அதனால் எல்லா நிலைகளையும் கணக்கில் எடுத்து ஏனைய தனியார் துறைகளில் போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு திரட்டிய சம்பளத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்று இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கோரி வந்தது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏனைய நலன்புரி சேவைகளுக்காகவும் தோட்ட நிர்வாகங்கள் செலவழிக்க வேண்டியிருப்பதாக மேற்படி சம்மேளனம் தெரிவித்தது.

இந்த அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு திரட்டிய சம்பளமொன்றைத் தீர்மானிக்க சம்பள நிர்ணய சபையை முதலாளிமார் சம்மேளனம் கேட்டிருந்தது. 1995ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து தொடர்ந்து அதற்கென சம்பள நிர்ணய சபை கூட்டப்பட்ட போதும் அது கூடுவதற்கான (நிறைவெண்) கோரம் (Quorum) இல்லாததால் 1996 ஜூலை வரை கூடவில்லை.

1996 ஜூலையில் கூடியபோது முடிவெடுக்கப்படாத போதும் தோட்டத் தொழிலாளர்களுக்கு திரட்டிய சம்பளத்தை தீர்மானிப்பதில் கொள்கையளவில் இ.தொ.கா.வும், இ.தே.தோ.தொ. சங்கமும் இணக்கம் தெரிவித்தன.

அதன்படி ஜூலை மாதம் வரை பழைய 72 ரூபா சம்பளத்துடன் வழங்கப்பட வேண்டிய வாழ்க்கைச் செலவு அலவன்ஸையும் சேர்த்து 80 ரூபா 50 சதத்துடன் 2.50சத அதிகரிப்பையும் சேர்த்து திரட்டிய நாட்சம்பளமாக 83ரூபா வழங்க முடிவு செய்யப்பட்டது. எனவே இதில் 1992ம் ஆண்டு வழங்கப்பட்ட 20 ரூபா உயர்வில் மீதியுள்ள 8 ரூபா உயர்வு என்பதற்கே இடமில்லை.

இவ்வாறு சம்பளம் திரட்டி வழங்கப்படுவதால் இனிமேல் வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் என்பதற்கே இடமில்லை.

அத்துடன் அடிக்கடி சம்பள உயர்வு வழங்கப்பட முடியாததால் அடுத்த வருடம் டிசம்பர் மாதம் வரை எவ்வித சம்பள உயர்வும் வழங்கப்பட மாட்டாது.

மேற்படி அம்சங்களைக் கொண்ட கூட்டு ஒப்பந்தமொன்றை செய்ய பெருந்தோட்டத்துறையில் பெரிய தொழிற்சங்கங்களான இ.தொ.கா., இ.தே.தோ.தொ. சங்கம் என்பன இணக்கம் தெரிவித்துள்ளன.

மேற்படி விளக்கத்தை இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திடமிருந்து பெற முடிந்தது.

இந்த விளக்கத்திலிருந்து பார்க்கின்ற போது மூன்று விஷயங்கள் தெளிவாகின்றன.

1. குறிப்பிட்ட 8 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது.

2. இனிமேல் வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் வழங்கப்பட மாட்டாது.

3. எதிர்வரும் ஒன்றரை வருடங்களுக்கு சம்பள உயர்வே கிடையாது. இந்த முடிவுகளுக்குத்தான் இ.தொ.காவும் இ.தே.தோ.தொ. சங்கமும் ஆமாம் போட்டுள்ளன. அவற்றை உள்ளடக்கிய ஒப்பந்தத்தையே ஏற்றுக் கைச்சாத்திட இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதே தோட்டத் தொழிலாளர்கள் முன்னுள்ள பிரதான கேள்வி ஆகும்.

பெரிய சங்கங்கள் ஏற்றுக் கொள்கின்ற உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றோ அரசாங்கத்தை ஆதரிக்கும் இடதுசாரி தொழிற்சங்கங்களே எதிர்க்கின்ற உடன்படிக்கையை எப்படி ஏற்றுக்கொள்வது என்றோ முடிவெடுக்கக் கூடாது. தற்போது ஏற்பட்டுள்ள மாவிலை உயர்ச்சி, எதிர்காலத்தில் ஏற்படவுள்ள விலை உயர்ச்சிகள் என்பன கணக்கில் எடுக்கப்பட வேண்டும்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள 50 சதவீத சம்பள உயர்வு பற்றியும் கவனிக்காமல் இருக்க இயலாது. தாராளமயத்தின் தீவிர நடைமுறைப்படுத்தலின் கீழ் அடிக்கடி உயரும் வாழ்க்கைச்செலவுக்கு ஏற்ப அலவன்ஸை சம்பளத்துடன் கூட்டி வழங்கியே ஆக வேண்டும் என்று கோரிக்கை விடுத்து போராட மலையக தோட்டத் தொழிலாளர்கள் திராணியற்றவர்களாக இல்லை. எனவே வாழக்கைச் செலவை தியாகம் செய்ய வேண்டியதில்லை.

அப்படித்தியாகம் செய்து ஒன்று திரட்டிய சம்பளமொன்றை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், ஒரு நாளுக்கான திரட்டிய சம்பளம் மட்டும் தீர்மானிக்கப்படுவதில் பயனில்லை. ஒரு மாதத்துக்கு நிச்சயமாக இத்தனை நாள் சம்பளம் கிடைக்கும் என்று திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது திரட்டிய சம்பளம் என்பது மாதச்சம்பளமாகவே இருப்பது வழமை. அல்லது மாதத்திற்கு குறைந்தது 26 நாட்களுக்கு வேலை கிடைக்கும் ஒரு தொழிலுக்கே திரட்டிய நாட்சம்பளம் என்பது பொருந்தும். அதுவே நடைமுறையாக இருக்கிறது. அவ்வாறில்லாவிடின் மிகவும் கவர்ச்சிகரமாக திரட்டிய நாட்சம்பளத்தை வழங்கிவிட்டு வேலைநாள் குறைக்கப்படுமாயின் திரட்டிய சம்பளத்தால் எந்தவித பிரயோசனமும் இல்லை.

திரட்டிய சம்பளமொன்று தீர்மானிப்பதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய எல்லாச்சம்பள உயர்வுகளும், சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். எதிர்காலத்தில் அடிக்கடி சம்பள உயர்வுகளை வழங்க முடியாது என்பதற்காகவே திரட்டிய சம்பளம் தீர்மானிக்கப்படுகிறதேயன்றி கடந்த கால சம்பள உயர்வுகளை மறுப்பதற்காகவல்ல.

திரட்டிய சம்பளத்திட்டம் வருடாந்த சம்பள அதிகரிப்பை உள்ளடக்கியதாகவே இருக்கும். திரட்டிய சம்பளமொன்றை வழங்குவதாகக் கூறிக் கொண்டு குறிப்பிட்ட காலத்துக்கு சம்பள உயர்வினை மறுப்பதாக திரட்டிய சம்பளத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. திரட்டிய சம்பளம் என்பது அடிக்கடி ஒரு வருடத்திற்குள் பல சம்பள உயர்வினை மறுப்பதற்காகவன்றி குறிப்பிட்ட காலத்திற்கு சம்பள உயர்வினை மறுப்பதாக அமைய முடியாது.

ஆக, திரட்டிய சம்பளம் என்ற திட்டத்திற்கே அடிப்படையிலேயே முரண்படுகின்ற உத்தேச கூட்டு உடன்படிக்கையை தோட்டத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.


எனவே உத்தேச கூட்டு உடன்படிக்கையில் தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் எந்தவொரு தொழிற்சங்கமும் கையெழுத்திடுவதானது தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகும்.

மாறாக திரட்டிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் பின்வருவனவற்றை வலியுறுத்தலாம்.

1. இதுவரையும் வழங்கப்பட வேண்டிய சகல சம்பள உயர்வுகளுடன் (எட்டு ரூபா உட்பட) மேலும் குறிப்பிட்டளவு சம்பள உயர்வினை வழங்க வேண்டும்.

2. திரட்டிய மாதச் சம்பளத்தை வழங்க வேண்டும். அல்லது ஒரு மாதத்தில் 28 நாட்களுக்கு குறையாமல் திரட்டிய நாட்சம்பளம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

3. எவ்விதப் பாகுபாடுமின்றி வருடாந்த சம்பள உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரம் பனி மூடிய மலைத்தொடர்கள்.
குளிர்ந்த தூய்மையான மெல்லிய பூங்காற்று.
செழுமையான மரம் செடி கொடிகள்.
அமைதி தவழும் சுற்றுச்சூழல்.
மனமகிழ்ச்சி தரும் இன்பலோகம்.
இதுதான் அந்தக் குயிலின் இருப்பிடம்.

பல இடர்பாடுகளை எல்லாம் தாண்டி நீண்ட பிரயாணம் செய்து ஒரு காகம் இங்கு வந்து சேர்ந்தது. காகத்தை வரவேற்று குயில் உபசாரம் செய்தது.

உனது நாடு தனித்து ஒதுங்கி ஒரு மூலையில் இருக்கிறது. இது மிகுந்த சோகமயமானது. இந்த இடம் வளர்ச்சியே காணாமல் இருக்கிறது'' என்றது காக்கை.

அதெல்லாம் கிடையாது. ஆறு சலசலவென்று பேசிக் கொண்டே ஓடுகிறது. மேகங்கள் வருகின்றன. எவ்வளவோ புதிர்களைப் போட்டுக்கொண்டு வெகுதூரம் செல்கின்றன. மரங்களும் செடிகளும் தங்களுக் கிடையில் பேசிக்கொள்கின்றன. பறவைகள் தங்களுக்குள் எவ்வளவோ செய்திகளைப் பரிமாறிக்கொள்கின்றன. குயில் சொல்லிற்று.

அப்படி எதுவும் என் காதில் விழவில்லையே. அப்படியானால் உங்கள் நாட்டு மொழியும் எங்கள் தேசமொழியும் வெவ்வேறானதாக இருக்கலாம்.

''உனது நாடு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?''

''சூரியன் உதிக்கும் திசை நோக்கி பறந்து சென்றால் எங்கே சூடான காற்று வீசுகிறதோ அந்த இடத்திலிருந்து எனது தேசம் ஆரம்பமாகிறது.''

''சூரியன் உதிக்கும் கிழக்குத் திசையில் உள்ள நதிகள் நீரின்றி வறண்டு கிடப்பதாகவும் மேகங்கள் முழங்கிக்கொண்டே திரும்பி வருவதாகவும் மலரும் பொழுதே பூக்கள் உதிர்ந்து விடுவதாகவும் சொல்கிறார்களே அதுதான் உன் தேசமா?''

''அப்படி இல்லை. என் தேசத்திலும் லேசாகப் பனி மூட்டம் இருக்கும். தின்பதற்கு நிறையப் பழங்கள் கிடைக்கும். குடி இருக்க பெரிய பெரிய மாளிகைகள் உண்டு. அங்கு இரவு நேரம் போன்று இருண்டிருக்காது. இரவு முழுதும் மின்விளக்குகள் ஒளி பரப்பிக் கொண்டிருக்கும்.''

''அப்படி இருந்தால் அங்கு ஜனங்கள் எப்படித் தூங்குவார்கள்?''

''அப்படி பலருக்கு இரவு வந்ததும் தான் பகல் ஆரம்பமாகிறது?''

இவற்றில் பல விஷயங்களைக் குயிலால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் காக்கையின் பேச்சைக் கேட்டு அது சமவெளிக்கு வந்தது.

வெப்பக்காற்று வீசிக்கொண்டிருந்தது. எங்கும் ஒரே இரைச்சல். மக்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போல் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக இடித்து பிடித்துக்கொண்டு விரைந்து கொண்டிருந்தனர். பிரயாணிகள் நிரம்பி வழிய பஸ்கள் எறும்புகள் போன்று சாரிசாரியாக ஊர்ந்து கொண்டிருந்தன.

இதுதான் டெல்லி மாநகரம்.

''இங்கே நீ பேசுவது உன்காதில் கூட விழாது போல் இருக்கிறதே'' என்றது குயில்.

''இங்கு யாருக்கும் தான் சொல்வது தனக்குப் புரிய வேண்டுமென்ற அவசியமில்லை'' என்றது காகம்.

''சுட்டெரிக்கும் இந்த வெயில் என்னை திக்குமுக்காடச்செய்கிறதே!'' நிம்மதியின்றி தவித்தது குயில்.

''நீ குளிர் தேசத்திலிருந்து வந்திருக்கிறாய். அதனால் தான் இங்கு வெப்பமாக இருப்பதாக உனக்குத் தெரிகிறது. சில நாட்கள் நீ இங்கு தங்கியிருந்தால் எல்லாம் உனக்குப் பழகிப் போய் விடும்.''

குயில் சோர்ந்து உட்கார்ந்து விட்டது.

''களைப்பாக இருக்கிறதா?''

''இல்லை, எனது தேசத்தின் ஞாபகம் வந்துவிட்டது. இந் நேரம் அங்கு மேகங்கள் மழையைப் பொழிந்து கொண்டிருக்கும்.''

''இங்கேயும் கூட சில சமயங்களில் மழை பெய்யும், அதனால் தரை எல்லாம் சேறாகி விடும்.''

''அங்கு குளங்களில் நீராடத் தேவதைகள் வந்த வண்ணமாக இருக்கும்.''

''சந்தர்ப்பம் வாய்த்தால் உன்னை சினிமாவுக்கு அழைத்துப் போகிறேன்.''

''எனக்குப் பசிக்கிறது.''

''அதோ அந்த தோட்டத்துக்குப் போவோம்.''

மாமரத்தில் பழங்கள் தொங்குவதைக் கண்ட குயிலுக்கு ரொம்ப சந்தோஷம். தனது அலகால் ஒரு மாம்பழத்தைக் கொத்தியது. மாம்பழம் கீழே விழுந்து விட்டது. தோட்டக்காரனின் மகன் ஓடி வந்து அதை எடுத்துக் கொண்டான்.

அவன் மாம்பழத்தை வாயில் வைக்கும் சமயம் தோட்டக்காரன் வந்து அதை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டான். பையன் தேம்பியபடி அழுது கொண்டிருந்தான்.

''ஏன் அந்த ஆள் குழந்தையின் கையிலிருந்து பழத்தைப் பிடுங்கிக் கொண்டான்?'' ஆச்சரியத்துடன் குயில் கேட்டது.

''உண்மையில் இந்த தோட்டத்தின் சொந்தக்காரன் வேறு எவனோ ஒருவன். பழுத்த மாம்பழங்கள் சந்தையில் விற்கப்பட்டு அந்தப் பணம் தோட்டத்துச்



சொந்தக்காரனிடம் போய்ச்சேர வேண்டும். இந்த ஆள் தோட்டத்தைப் பராமரிக்கும் காவல்காரன்.''

''உங்கள் நாட்டில் தோட்டங்கள் எல்லாம் கடவுளுடையது இல்லையா? மனிதர்களுடையதா?''

''நாளைக்கு நாம் பிர்லா மந்திருக்குச் செல்வோம்'' என்று காக்கை பேச்சைத் திசை திருப்பியது.

''என் தேசத்திலும் கூட சிவபெருமானுக்கு ஒரு ஆலயம் உள்ளது. அதில் ஒரு துறவி வசிக்கிறார். ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் அவர் சாப்பிடுவார். மூலிகைகளையும் வேர்களையும் கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கிறார். சரி பிர்லா உங்கள் நாட்டின் கடவுளா அல்லது பெண் தெய்வமா?''

''இல்லை அவர் ஒரு சேட். கோடீஸ்வரன்.''

''சேட்டினுடைய கோவிலில் நாம் போய் செய்வதற்கு என்ன இருக்கிறது?''

நாம் அங்கு சென்று திருமணம் செய்துகொள்வோம். இல்லை என்றால் நாம் இப்படித் திரிந்து கொண்டிருப்பதைப் பார்த்து ஜனங்கள் நம்மைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள்.''

குயில் நகைத்தது.

''என்ன விஷயம்? ஏன் சிரிக்கிறாய்?''

''திருமணம் என்றால் என்ன?''

''கடவுளின் சந்நிதானத்தில் என்றென்றும் இருவரும் சேர்ந்து வாழ்வதென்று உறுதி மொழி எடுத்துக் கொள்வது.''

''இருவரும் சேர்ந்து வாழ விரும்பாவிட்டாலும் கூடவா?''

''ஆம், அதுதான் இங்கு வழக்கம். விரும்பாவிட்டாலும் சேர்ந்து வாழத்தான் வேண்டும். இதுதான் கற்புநெறி என்பது. மனம்போன போக்கில் திரியக் கூடாது.''

''இங்கு இரவு நேரத்தில் கூட இருள் இருக்காது என்று நீ சொன்னாயே.''

''அதையெல்லாம் விட்டுத்தள்ளு. காதல் பாசம் பற்றி நாம் பேசுவோம்.''

எங்கள் நாட்டில் வசந்தகாலம் வரும்போது மரங்கள் துளிர்விடுகின்றன. பூச்செடிகளில் மொட்டுக்கள் தோன்றுகின்றன. யாரும் எதுவும் செய்யாமல் இவ்வளவும் நடைபெறுகின்றன. அது சரி நீ ஏதோ காதல், பாசம் என்று சொன்னாயே, அப்படி என்றால் என்ன?'' என்று நீண்ட பிரயாணத்தில் தனது சிறகுகளில் படிந்திருந்த தூசியை அலகால் கொத்திக் கொண்டே குயில் கேட்டது.

''இந்தப் பூங்காவில் ஒரு வாலிபனும் இளம் பெண்ணும் முதன் முதலாக சந்திக்கும் போது பரஸ்பரம் புன்னகை செய்து கொள்கின்றனர். இரண்டாவது தடவை அந்த வாலிபன் அப்பெண்ணைப் பார்த்து நீ மிக அழகாக இருக்கிறாய் என்கிறான். அடுத்த தடவை நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று அவளிடம் சொல்கிறான். அதன் பிறகு... முன்பெல்லாம் அவர்கள் எங்காவது ஓடி விடுவது வழக்கமாக இருந்தது. ஆனால், இப்பொழுதெல்லாம் எங்காவது ஓடிப்போய் இருந்து விட்டு சில நாட்கள் கழித்து திரும்பி வந்து விடுகிறார்கள். மறுபடியும் ஆளுக்கொரு இடமாக பிரிந்து போய்விடுகின்றனர். மீண்டும் யாரையாவது பார்த்து புன்னகை .... அப்புறம் அழகாக இருக்கிறாய்....

''நீ எத்தனை தடவை இப்படிச் செய்திருக்கிறாய்?''

சத்தியமாகச் சொல்கிறேன். இதுவரை யாரும் உன்னைத் தவிர என் வாழ்க்கையில் குறுக்கிட்டது கிடையாது'' என்றது காகம்.

''ஒவ்வொரு தடவையும் அந்தப் பையன் அப்படித் தான் சொல்கிறானா?'' குயில் கேட்டது.

''அதோ பார் அங்கே ஒரு பெரிய ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறது'' என்று பேச்சை மாற்ற காகம் சாலையை காட்டியது.

''ஏன் அவர்களுக்கு என்ன நேர்ந்தது? என்று வெறித்தனமாக கோஷமிட்டுச் செல்லும் கூட்டத்தைப் பார்த்து வியப்புடன் கேட்டது குயில்.

யுத்தகாலத்தில் எதிரிகளின் விடுதியில் அதுவும் அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்த சமயம் எங்கள் விமானப்படைத் தளபதி அவர்கள் மீது குண்டு வீசி இருநூறுக்கு மேற்பட்ட எதிரிகளைக் கொன்றார். உடனே எதிரிகள் இவரது விமானத்தை சுட்டு வீழ்த்தியதில் எங்கள் தளபதி மரணமடைந்து வீரத்தியாகியானார். அந்த வீரத்தியாகியைக் கௌரவித்து அவருக்காகக் கொடுக்கும் வீரப் பதக்கத்தை அவரது சார்பில் அவரது தந்தை பெற்றுக் கொண்டார். இந்தச் சம்பவத்தைத் தான் ஊர்வலம் நடத்தி மக்கள் கொண்டாடுகிறார்கள்.'' என்று கர்வத்தோடு காகம் சொல்லிற்று.

''தியாகியானார் என்றால் என்ன?'' என்று அப்பாவித்தனமாக குயில் கேட்டது.

''அதுவும் ஒரு வகையில் மரணம் அடைவதுதான் இறந்து போன மகனுக்கு ஒரு பதக்கம்.''

''உங்கள் நாட்டில் இறந்து போவது கூட கொண்டாடுவதற்கான ஒரு நிகழ்ச்சியா?''

''இரு நூறுக்கு மேற்பட்ட எதிரிச் சிப்பாய்களை கொன்ற ஒரு தளபதியின் தந்தை இவர்.''

''அதிக பட்சமான மனிதர்களைக் கொன்று குவிக்கும் ஒரு மனிதருக்கு நீங்கள் பதக்கம் பரிசளிப்பது பழக்கமா?''

''நீ மகா மண்டு. அவர்கள் மனிதர்கள் அல்ல. எதிரிகள். எங்கள் நாட்டைப் பறித்துக் கொள்ள எங்கள் மீது போர் தொடுத்தவர்கள்.''

''அது எப்படி இந்த பூமி அவர்களுக்கு என்றும் உங்களுக்கு என்றும் சொல்லிக் கொள்ள முடிகிறது? எல்லா நிலமும் கடவுளுடையது தானே.''

இதற்கு சரியான பதில் காக்கைக்கு தெரியவில்லை.

''இங்கு எப்படி மக்கள் வாழ்கிறார்கள்? ஒரே புழுக்கமாக இருக்கிறதே'' என்று ஆழ்ந்து பெருமூச்சு விட்டது. சுட்டெரிக்கும் வெய்யிலுக்குப் பயந்து கொண்டு வெப்பக் காற்றுக் கூட விசவில்லை.

காகம் பதில் சொல்லவில்லை.

''உங்கள் நாட்டில் ஒன்றுமே இல்லை. வெறும் சூன்யம்'' என்று பறவைகளை விரட்டிக்கொண்டிருந்த தோட்டக்காரனைப் பார்த்துக் கொண்டே குயில் சொல்லியது.

''எனது நாட்டுக்கு எதிராக எதுவும் சொல்லாதே. அப்படிப் பேசினால் நான் உன்னைவிட்டுப் பிரிந்து விடுவேன். நான் இன்னும் உன்னைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆகவே நீ என்னிடம் ஜீவனாம்சம் கோர முடியாது.''

குயில் உரக்கச் சிரித்தது.

''வாயை மூடிக் கொண்டிரு. தோட்டக்காரன் காதில் விழுந்தால் அவன் உன் மீது கல்லெறிவான்.''

''இப்படிப் பேசும் மக்களுக்கு உங்கள் நாட்டில் கிடைப்பது மரண தண்டனை தானா?'' கேட்டது குயில்.

இந்தக் கேள்வியைக் குயில் கேட்டு முடிப்பதற்குள் இலைகளுக்கிடையில் விர்ரென்று ஒரு கல் பறந்து வந்து குயிலின் தலையில் தாக்கியது.

குயில் கீழே விழுந்து பூமியில் உருண்டது. ''வாயை மூடிக்கொண்டு இரு என்று நான் உன்னிடம் சொல்லவில்லையா?'' என்று கேட்பது போல் காகம் தனது கழுத்தைச் சாய்த்து தரையில் இறந்து கிடக்கும் குயிலைப் பார்த்தது.

பஞ்சாபியில் : தலிப் கௌர் திவானா
ஆங்கிலத்தில்: மஞ்சித் கௌர் திவானா
தமிழில்: கோ. பிள்ளை
நன்றி: செப்பு மொழி பதினெட்டுடையாள்

துயரம் தாங்கிய என்னுயிர்
மக்கள்
உம்மிடை எழுந்த
நம்பிக்கை ஒளிகள், அடிபட அழிபட
எல்லைகள் தாண்டி பெரும் கடல்
- தாண்டி
அந்நியமண்ணில் புதைகுழிதோண்ட
வெள்ளிபார்த்த அநியாய மனிதராய்
நாம்
மௌனித்த கதை
என் சந்ததி அறியும்.

எங்கள் மண்ணில் எதிரியின்
படைகள்
துயர் கதை படைக்க
எங்கள் இரத்தம்
பலவழி சென்று பழிதனை
படைக்கும்
நாங்கள்
நெட்டை மரங்களென - கட்டிய
கரங்களுடன்.

என் பேரன் என்னுணர்வை
நாளை மெய்த்துணர்ந்து
மனிதத்தை பயிர்செய்ய
நிலமில்லா நிலையில்
என்னை நோக்கி பெருமூச்சு விட
வெட்கித்தான் என் தலை குனியும்?
நடுங்கும் நிலையிலும்
உயர எழும் என் கரங்கள்
நாளைய என் மகனை
உறுதி கொள்ளச் செய்யும்.
மாய மலையாக அமையும் என்
பொய்யாகி விடாது.
கனவுகள்
ஆசிய மனிதனென்ன அந்நிய
மனிதனையும்
மனித நேயம் பற்றிக் கொள்ளும்
என் கனவு மெய்க்கும்.

என் கனவு மெய்க்க
என் மகன் துணிவுடன்
உயரும் தன்கரங்களை
மௌனமான வாழ்வுடன் போராடி
முடிவில்லா கதையை
முடிவாக்கிக் கொள்வான்.




- தரங்கிணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்களின் சூழலும் மாறும் இந்தியச் சினிமா

இந்திய சினிமா பொழுது போக்கையும், சந்தோஷப்படுத்துவதையும் முக்கிய குறிக்கோளாகக்கொண்டு வளர்ச்சியடைந்த பாரிய தொழிலாகும். உலகத்தில் அதிக மொழிகளில் அதிக படங்களைத் தயாரிப்பவர்களும் இவர்களே. இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற இத்திரைப் படங்களில் பெரும்பான்மையானவை மரபார்ந்த இந்திய கலாசாரத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

சாதாரண பொதுமக்களின் பிரதான பொழுதுபோக்குச் சாதனமாக திரைப் படங்கள் இருப்பதனால், இந்தியாவில் பாரிய வியாபாரமாகவும் இது அமைந்துள்ளது. அதேபோல் ஹிந்தி, தமிழ், திரைப்படங்களுக்கென வெளிநாட்டு சந்தைத்திறக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச ரீதியில் அவற்றுக்கு கேள்வியும் அதிகமா உள்ளது.

இத்திரைப்படங்கள் பலவற்றில் பெண்களின் பாத்திரமாக அமைவது நல்ல மகள், மகனுக்காக தனது வாழ்வைதியாகம் செய்யும்தாய், பதிபக்தி நிறைந்த மனைவி என்பனவே. இத்திரைப்படங்களில் இந்திய நிலை என அர்த்தப்படுத்தப்படுவதும் இந்திய பெண்கள் என அறிமுகப் படுத்தப்படுவதும் இனத்தினதும் மதத்தினதும் பேரில் தனது கணவனுக்காக வேசை செய்து வாழ்வைக் கழிக்கும் பெண்களையே.

எனினும், நவீன இந்திய சமூகம் இற்றைக்குப் 10 வருடங்களுக்கு முற்பட்ட சமூகத்திலிருந்து அதிகம் வேறுபட்டதாக இருப்பதுடன் நவீன பெண்களின் நிலையும் அவ்வாறு வேறுபட்டுள்ளது. எனினும் இந்தியச் சினிமா இம்மாற்றத்தை யதார்த்த ரீதியாக உள்வாங்காதது மட்டுமன்றி பெண்கள் தொடர்பாக தாய் மனைவி, சகோதரி, அல்லது விலைமகள் போன்ற ஒரு தலைப்பட்ச பாத்திரங்களையே மீண்டும் மீண்டும் உருவாக்குகின்றது.

தொன்மையான இந்தியக் கருத்தியலான ''ஸ்திரீ'' எனும் கருத்தியல் சினிமா மூலம் வெகுசனமயப்படுத்தப்பட்டது. கணவன் மீது பக்திகொண்ட, பொறுமைமிக்க, தன்னுடைய கணவனுக்காக தன்வாழ்வையே தியாகம் செய்யும் பெண் என்பன கருத்தோட்டங்களை அமைத்து வெவ்வேறு பாத்திரங்களை உருவாக்கி நவீன நடை, உடை, பாவனைகள் மூலம் வெளிப்படுத்துகிறது. ஆனாலும், சக்திவாய்ந்த பால்ரீதியாக சுயாதீனத்துவமுள்ள அல்லது தொழிலுக்காக வீட்டை விட்டு வெளியேறும் பெண் பாத்திரங்கள் சமீப கால இந்தியத் திரைப்படங்கள் மூலம் உருவாக்கப்பட்டன. பழைய இந்துக் கருத்தியலின்படி ஆண்களை பீதிக்குள்ளாக்கும், அவர்களைப் பயமுறுத்தும் அவர்கள் மீது அதிகாரம் செலுத்தும் ஒரு 'சக்தி' அவள். பொருளாதாரரீதியாகவும், பால் ரீதியாகவும் சுயாதீன பெண்களை கேந்திரமாகக்கொண்ட 'திரைப்படங்கள் தயாராவதும்' இதன் மூலம் காத்திரமான விவாதங்கள் எழுப்புவதும் பெண்ணிலைவாத திரைப்பட விமர்சனம் கலை வளர்ச்சி அடைவதும் இப் பின்புலத்தின் கீழ் அதிகளவு பெண்கள் திரைப்படத் துறைக்குள் பிரவேசிப்பதும் நவீன இந்தியத் திரைப்படத்துறையினுள் காணக்கிடைக்கும் மாற்று நிகழ்வுகளாகும்.

இந்தியத்திரைப்படத்துறையை பார்க்கும் போது, நிகழ்கால பெண்ணியல் அலைகளுக்கு பின்புலமாகவிருக்கும் வரலாற்று நிலைகளை, கண்டுகொள்ள முடியும். இந்தியத் திரைப்படத்துறையில் பெண்களின் பங்களிப்பு திரைப்படத்துறையின் ஆரம்ப காலங்களிலேயே காணப்படுகிறது.

பல தொடர்பு சாதனங்கள் குறிப்பிடாவிட்டாலும், 1913ல் தயாரிக்கப்பட்ட முதல் நீண்ட திரைப்படத்தின் பின்னணியில் பெண்களின் பங்களிப்பு இருந்தது என்பதற்கு சாட்சியங்கள் உண்டு.

இந்திய சினிமாவின் தந்தையென போற்றப்படும், கோவிந்த் பால்கேயின் மனைவியான சரஸ்வதிபாய் தன் நகைகளை விற்றபணத்தைக்கொண்டே முதல் திரைப்படமான ராஜா ஹரிஸ்சந்திர (1913) தயாரிப்புக்குப் பக்கபலமாக இருந்ததுடன் அவரின் சமையலறைக்குள் பின்புலத்தில் அமைக்கப்பட்ட இரசாயன கூடத்தில்தான் சினிமா கெமராவுக்கான Loading un Loading என்பன மேற்கொள்ளப்பட்டன.

அப்பேசாப்பட யுகத்தின் நடிகையான பாத்திமா பேகம் திரைப்படத் தயாரிப்புக்கு தமது பங்களிப்பைச் செய்ததுடன் அவர்களைப் படத் தயாரிப்பு நிறுவனம் (Victoria Fatma Film Corporation) ஒன்றையும் ஸ்தாபித்தார். 1920களின் நடுப்பகுதியில் அவர் ஓரிரண்டு படங்களைத்தயாரித்தார்.

அதேபோல் ரவீந்திரநாத் தாகூரின் பேத்தியான தேவிகாராணி திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க பெண்மணியாகத்திகழ்ந்தார். கட்டிடவியலில்பட்டம் பெற்ற அவர் ஹிமங்சு ராயின் ''பிரபஞ்ச பாஷ்'' (1929) திரைப்படத்தில் கலை இயக்குநராகவிருந்தார். ஜெர்மனியில் இப்படத்தின்தொகுப்புக்கு உதவிய இவர் பின்னர் 1934ல் ஹிமங்சு ராய்யுடன் இணைந்து ''பொம்பே டோகீஸ்'' எனும் திரைப்பட நிறுவனத்தை ஸ்தாபித்து பல திரைப்படங்களைத்தயாரித்தார்.

இந்தியத் திரைப்படத்துறையின் தேக்க காலம் முடிவுற, பெண்களின் ஈடுபாடு அதிகரிக்கலாயிற்று. புனே திரைப்படக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட பின் திரைப் படத்துறையை ஆழமாக கற்கவிரும்பும் பெண்களின் எண்ணிக்கை கிரமம் கிரமமாக அதிகரித்தது. திரைப்படத்துறையில் ஈடுபட்டுள்ள ஆண்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெண்களின் விகிதம் குறைவாக இருந்தாலும் ஆசிய நாடுகளிலே இந்தியாவிலேயே அதிகப் பெண்கள் திரைப்படத்துறையில் ஈடுபட்டுள்ளனர்.

இது ஒரு வகையில் பெண்களுக்கே உரித்தான பிரச்சினைகள் பெண்களின் கோணத்தில் திரைப்படமாக உருவாகுவதற்கு காரணமாகவும், அமைந்தது. இவ்வாறு இடைக்கிடையே பெண்களின் பிரச்சினைகளை மையமாகக்கொண்ட திரைப்படங்கள் பல இந்தியப் பெண் திரைப்படவியலாளர்களால் தயாரிக்கப் பட்டதுடன் உலகத்திரைப்படவிழாக்களில் இவை விருது பெற்றவையாகவும் விமர்சகர்களின் அவதானிப்புக்கு உட்பட்டவையாகவும் அமைந்தன.

இந்தியா நமக்கு சமீப நாடாயினும் இத்திரைப்படங்களும் பெண் தயாரிப்பாளர்களும் நமக்குப் புதியவர்களே.

அபர்ணா சென்னின், ''36 சௌரன்கி லேன்'' (1981), பிரேமா கரந்த்னின் ''பனியம்மா'' (1982), பெமலா ரூக்ஸ்சின் ''மிஸ்பீட்ஸ்

→ 7

# 90களில் ஈழத்துக் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டதா?

சேரமான்கணைக்கால் இரும்பொறை என்பவர் சு.வி.யின் ''காலத்துயர்' தொடர்பாக 'சரிநிகரில்' (ஜூன் 13 - 26) எழுதியவற்றில் எமக்கெழுந்த சந்தேகங்கள் சிலவற்றை அடுத்து வந்த சரிநிகரில் முன்வத்தோம். அச்சந்தேகங்களைத்தீர்க்கும் பணியை எடுத்துக் கொண்ட கந்தையா ஸ்ரீகணேசன், ''80களின் இறுதியில் வெளித்தெரிந்து 90களின் புதிய போக்கை இயம்பிநின்ற சோலைக்கிளியின் வரவுடன் ஆத்மா, றஷ்மி, அன்சார், நட்சத்திரன் செவ்விந்தியன் ஆகியோர் கவிதை மொழி முழுவதையும் படிமக்குவியலாக்கி ஆனால், கருத்துநிலைப்பட்டு கவித்துவ வீச்சை இறுக்கிய ஒருசட்டகமாக நவீன தமிழ்க் கவிதையை ஆக்கியுள்ளனர்.....

இவை கொண்டுள்ள (பின் நவீனத்துவகாலம் எனலாமோ) புதிய பரிமாணத்தினை மு. பொ. போன்றவர்கள் விளக்கம் கோராமலேயே விளங்கிக்கொள்ள முடியும். இல்லையெனில், நாமும் மேத்தாக்களை வைரமுத்துக்களைத்தான் ரசிக்கவும் உருவாக்கவும் வளர்க்கவும் முடியும்'' (சரிநிகர் ஜூலை 11-24) என்று நீட்டி முழக்கி எமது சந்தேகங்களைத் தீர்க்க முயன்றுள்ளார். நன்றி. ஆனால், வேடிக்கை என்னவெனில், நாம் எதைச் சந்தேகம் தீர்க்க வருபவர் நமது சந்தேக நிவர்த்திக்காகக்காட்டக் கூடாதெனப் பிரார்த்தித்தோமோ அதையே அவர் காட்டியதன் மூலம் இன்றைய கவிதையின் - விமர்சனங்களின் கவிதைபற்றிய பார்வையின் கவலைக்குரிய நிலையைத்தான் காட்டியுள்ளார் போல் படுகிறது.

60 - 70களில் மஹாகவி நீலவாணன் போன்றோர் மரபுச் சட்டகங்களுக்குள் புதுமை செய்து, கொண்டிருந்தபோதே 60களின் நடுப்பகுதியிலிருந்து எழுதுபவர்கள் வரை தமிழ் நாட்டில் வெளிவந்த 'எழுத்து'வில் பலர் புதுமரபுச்சட்டகங்களுக்குள் புதுமை செய்தனர். அவர்களில் முக்கியமானவர்களாக தர்மு சிவராமு, எஸ். வைத்தீஸ்வரன், வேணுகோபாலன், பிச்சை மூர்த்தி, கா.நா.சு. போன்றவர்களைக் கொள்ளலாம். இவர்கள் இப்புதுமரபுச்சட்டகத்துள் நிகழ்த்திய புதுமையின் நீட்சிதான் ஈழத்தில் 70களிலும் அதன் பின்னர் 80களிலும் சண்முகலிங்கம் சிவலிங்கம், மு. பொன்னம்பலம், யேசுராசா, மு. புஷ்பராஜன் போன்றவர்களையும் (எம்.ஏ.நுஃமான் புதுமரபுசட்டகங்களை ஏற்றுக்கொள்ளாது மிக அண்மைக்காலம்வரை மரபுவழியையே புதுமை செய்யப்பாவித்தவர்) அதன்பின் சேரன், ஜெயபாலன், சு.வி.சிவசேகரம், சிவரமணி, ஜபார், மைதிலி, மைத்ரேயி, விஜயேந்திரன், ஔவை போன்றவர்களையும் தொற்றிக்கொண்டு எமது சூழலுக்குரிய பார்வையில் புதுக்கவிதைகளைப் பிரசவிக்கச் செய்தன.

ஆனால், பிரச்சினை இதுவல்ல.

90களில் இவர்களில் இருந்து ''வேறு'' படுபவர்கள் பற்றியே எமது ஆய்வு குவிகிறது எனலாம்.

90களில்வேறுபடுபவர்கள் இருக்கின்றார்களா?

''ஆம்'' என்று ஸ்ரீகணேசன் கூறியதாக ஏலவே மேற்கோள் காட்டினேன். அத்தகைய 90களின் புதுமைக்காரர்களாக சோலைக்கிளியின்தலைமையில் ஆத்மா, றஷ்மி, அன்ஸார், நட்சத்திரன் செவ்விந்தியன் போன்றோர் இயங்குவதையும் இவர்கள் ''கவிதை மொழிமுழுவதையும் படிமக்குவியலாக்கி.... கவித்துவ வீச்சை இறுக்கிய ஒரு சட்டகமாக நவீன தமிழ்க் கவிதையை ஆக்கியுள்ள''தாகவும் கூறுகிறார். (பாவம் நட்சத்திரன்செவ்விந்தியன், றஷ்மி! இவர்களது கவிதை எந்தவித 'படிமக்குவியல்', குறியீடு என்று அதிகம் அலட்டிக்கொள்ளாமல் தெளிந்த நீரோடைபோல் ஓடிவருவது. இவர்களேன் இந்தப்படிமக் குவியலுக்குள் புதைக்கப் படுகின்றனர் படிமம் எது? குறியீடு எது உருவகம் எது என்பவைப்பற்றிய விளக்கமின்மையே இதன் காரணமோ? சோலைக்கிளியையும் விட ஆழமாக வேர்விடும் அஸ்வகோஸ் ஏன் இவர்களோடு இனங்காணப்படாது விடுவிட்டார்?)

சோலைக்கிளியின் ''கவித்துவவீச்சை இறுக்கிய நவீனகவிதைக்கு'' உதாரணமாக ''நான் பாடப்பாடத்தான் வானம் நிலாச்செய்யும்'', ''என்பாட்டைக்குடித்து மழைமுகிலும் கொழுத்து கொட்டும் மழைக்குள்ளே என்சினை யிருக்கக் கண்டாயா?'' என்னும் சோலைக்கிளியின் வரிகளை ஸ்ரீகணேசன் காட்டுகிறார்.

இவ்வரிகள் ஒருவேளை ஸ்ரீகணேசன் ''இரும்பொறை'', ஆத்மா போன்றவர்களுக்கு புதிதாக, கவித்துவத்தை இறுக்கிய ஒரு சட்டகமாக, நவீன கவிதையாக இருக்கலாம். ஆனால், இன்றைய கவிதை பற்றிய தரமான அறிவுள்ளவர்கள் எவருக்கும் இது உடன்பாடான கருத்தல்ல. காரணம் இதுபோன்றவையும் இதையும் விட ஆழமானவையும் ஏற்கெனவே 80களில் வந்துள்ளன என்பதே. அப்படியானால், சோலைக்கிளி தமிழ்க்கவிதை உலகில் புதுமை செய்வதாக ஸ்ரீகணேசன், ஆத்மா போன்றவர்களைக் கூறவைப்பது எது? இவைபற்றி நாம் தெளிவுப்படுத்துவது அவசியம். இது தவிர்க்க முடியாத வகையில் சோலைக்கிளியின் கவிதைப் போக்கை சிறிது ஆழமாக விமர்சிக்க நிர்ப்பந்திக்கிறது.

சோலைக்கிளியின் கடைசியாக வெளிவந்த ''பனியில் மொழி எழுதி'' என்றகவிதைத் தொகுதிக்கு என்மதிப்புக்குரிய அன்பர் எஸ்.வி.ஆர் - கீதா இணையாக எழுதிய முன்னுரையை உள்வாங்கிய பின்னரே இதை எழுதுகிறேன். ''முழுஉலகமுமே ஓர் உயிருள்ள பண்டமாக... அவன் வேறு பிறவேறு என்று அவனால் பிரித்துப்பார்க்க முடியாததாகிவிடுகிறது'' என்று சோலைக்கிளி தன்னுரையில் கூறுவதையும் ''புல்லாகி பூண்டாகி புழுவாகி மரமாகி பல்மிருகமாய்ப்பறவையாய் பாம்பாகி'' எல்லாவற்றுள்ளும் 'நானே' இருப்பாகின்ற இன்பத்தைப் புரிந்து கொண்டும் என் நான். எனக்குச் சிறிதென்று நான் உணர்கின்றேன்'' என்று கூறும்மாயாக்கோவ்ஸ்கியின் (இது ஏற்கெனவே 'போர்ப்பறை'யில் இத்தகைய ஒரு நிலையை விளக்க மு.த.பாவித்துள்ளார்) கருத்தை விளங்கிக்கொண்ட பின்னணியிலுமே இதை எழுதுகிறேன்.

கவிஞன் ஒருவன் தரித்திருக்கும் தத்துவம் அல்லது அவனுக்கு தரிசனமுறும் கருத்து எதுவாகவும் இருக்கலாம். ஆனால், அதை அவன் எவ்வளவு தூரம் வெற்றிகரமாகத் தன் கவிதையில் நுழைய விடுகிறான் என்பதிலேயே அவன் கவிதை நிமிர்கிறது. அது கவிதையாகிறது.

சோலைக்கிளி தனது நோக்கை கவிதையாக வடிக்கவில்லையா? வடிக்க முடியாது தனது நோக்கை துஷ்பிரயோகம் செய்யும் வரட்டுக்கவிதையா அவர் எழுதுகிறார்? இல்லை. மாறாக அஃறிணைப் பொருட்கள்பற்றி அதிகளவு எழுதி அவற்றின் உயிர்ப்பை அழித்து தேவையறிந்து பாவிக்கப்படும் போது அவற்றிலிருந்து சிலிர்த்தெழும் சக்தி அனைத்தையும் 'நலம்' எடுத்துவிட்டார்! அதனால், அவரது கவிதைகள் ஆழமான பார்வையில், போதைவஸ்து பாவிக்கும் இன்றைய இளைஞர்கள் மாதிரியாகிவிட்டன. தேவையறிந்து ராஜமூலிகை (கஞ்சா) பாவித்த பாரதியும் அவரது நண்பர்கள் மாதிரியும் ஞான விகசிப்பில் சிலிர்த்தெழவில்லை. மேலும் இப்படி அஃறிணைப் பொருட்களைப் பாவிப்பதன் மூலம் கவிதைக்குப் புதுப்பரிமாணம் கொடுக்கிறேன் என்ற மாயையில் மயங்கி தன் கவிதையை திருவிழாக்களில் சோடிக்கப்படும் சிலுசிலுப்பை சோடனைக்கடதாசிகளாகவே மாற்றியுள்ளார். மழை வந்தால் சாயம் போய் சூம்பிப்போகும் நனைந்த கோழியின்நிலைக்கே தன்கவிதைகளைக் கொண்டுவந்து விட்டுள்ளார். மாறாக மழைபெய்யும் போது கோழிபோல் குறாவிப்போகாது சிலிர்த்தெழுந்தாடும் மயிலாக காலைச்சூரியனைக் காணும் போது குகை வாயிலில் வந்து காலை நீட்டி நமஸ்கரிப்பதுபோல்தினவெடுக்கும் புலி, சிங்கங்களின் ஆண்மையாக அவர் கவிதைகள் இல்லை. இவை இனி விளக்கப்படவேண்டும்.

மு.பொ

மீதி அடுத்த இதழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி...

எரித்திரியா, தென்சூடான், கிழக்குத்தீமோர் பற்றிய கட்டுரைகளில் மற்றையவற்றை விட விரிவான முறையிற் தகவல்கள் தரப்பட்டுள்ளன. ஆயினும் சோவியத் யூனியன் எரித்தியாவைக் கைவிட்டு மெங்கிற்ஸுவின் 'சிவப்பு' ஆட்சிக்கு ஆதரவாகத் திரும்பிய எரித்திய எழுச்சியைநசுக்க உதவியதற்கு ஆசிரியர்தரும் விளக்கங்கள் ஆழமற்றவை. சூடானில் இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய வாசகங்கள் (சூடான் பற்றிய கட்டுரை) இஸ்லாமிய அடிப்படைவாதம் எழுவதற்கு காரணமானவர்களது செயல்களைப் புறக்கணிக்கின்றன. அல்ஜீரியாவில் ஜனநாயக முறையிற் தெரியப்பட்ட இஸ்லாமியக் கட்சிக்கு அரசாங்கம் அமைக்கும் உரிமை மறுக்கப்பட்ட பின்னர் அங்கு வன்முறை மிகவும் வளர்ந்துள்ளது. ஈரானில் இறுதிவரை சர்வதிகாரியான ஷா ரேஸா பஹ்லெவியை அமெரிக்காவும், அதன் சகாக்களும் ஆதரித்ததாலேயே இஸ்லாமிய் அடிப்படைவாதிகளது கை ஓங்கியது. இதையெல்லாம் மறந்து எகிப்திய, அடக்குமுறை அரசு 'இஸ்லாமிய அடிப்படைவாதிகளை' அடக்க எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டுகிற தொனியில் அவர் எழுதுகிறார். வெள்ளிக்கிழமையே மத்தியகிழக்கின் பரவலாக விடுமுறை நாளாக உள்ளது. இஸ்ரேலில் சனி விடுமுறை. கட்டுரையாளர் சூடானில் வெள்ளிவிடுமுறையானதைக் கண்டித்து அதைப் போயா விடுமுறையுடன் ஒப்பிடும்போது, போயாவிடுமுறையுடன் சம்பந்தப்பட்ட குழப்பங்களே (7நாள் வாரங்களும்8நாள் வாரங்களும்) போயா விடுமுறையின் பிரதான பிரச்சினை என்பதை அவர் மறந்து விடுகிறார். இங்கெல்லாம் இஸ்லாமிய விரோத ஏகாதிபத்தியப் பிரசாரத்தை ஆசிரியர் கேள்வியின்றி ஏற்பதாகவே தோன்றுகிறது.

ஸ்பானிய நாட்டில் பாஸ்க் மக்களது சுய அடையாளச்சிதைப்பு, ஐரிஷ்மக்களதுசுய அடையாளத்தைச்சிதைக்க ஆங்கிலேயர் எடுத்த முயற்சிகளை ஒத்தது. முதலாளித்துவம்ஏகபோக முதலாளித்துவமாகித்தேசிய எல்லைகளைத்தாண்டுவதன் விளைவாகத் தேசியச்சுய் அடையாளச் சிதைவு நிகழ்கிறது. பாஸ்க் மக்கள்முப்பது வருடகால ஸ்பானிய ஃபாஸிஸ ஆட்சியின் கீழ் அனுபவித்த இன்னல்கள் அவர்களது தேசிய உணர்வைச் சிதைக்கவில்லை. ஆயினும், இன்று அத்தேசியவாத இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு தேசிய சுய அடையாளச் சிதைவுடன் தொடர்புடையது. அதையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் நிலையையும் ஒப்பிடுவதில் மிகுந்த எச்சரிக்கைக்கு அவசியமுண்டு.


திபெத் பற்றிய கட்டுரையில், அந்தத் தேசிய இனத்தின் அடிமைச் சமுதாயம் பற்றிய வரலாற்றுத் தகவல்களையும் இன்று பிரிவினை கோரும் எந்தத்தேசிய இனத்தையும் விட மிக நீண்ட காலமாக ஒரு பெரிய நாட்டின் பகுதியாக அது இருந்தது என்பதையும் கட்டுரையாளர் கவனிக்கவில்லை. தலாய்லாமாவும் அவரது ஆதரவாளர்களும் 1959ல் கிளர்ச்சியொன்றைத் தூண்டியது நிலவுடைமையாளர்களது நலன்களைப் பேணுவதற்காக என்பதையோ தலாய் லாமா பல அடிமைகளைத் தன்கீழ் வைத்திருந்த ஒரு நிலவுடைமையாளர் என்பதையோ மனித உரிமையின்பேரில் தலாய்லாமாவை ஆதரிப்போர் கூறுவதில்லை. திபெத் 1959 முதல் சீனாவின் சுயாட்சிப் பிரதேசங்களில் ஒன்றாக உள்ளது. கலாசாரப் புரட்சிக்காலத்தின் போது சகல மதத்தினரும் அனுபவித்த மத உரிமை மறுப்பை விட்டால், சீனாவில்வழிபாட்டு உரிமை பிறநாடுகளை விட நன்றாகவே பேணப்பட்டுள்ளது. மேலைநாடுகள் திபெத் பற்றி அண்மைக் காலமாகக் காட்டும் அக்கறை பற்றிய காரணங்களையும் கட்டுரையாளர்கள் தொட்டிருக்கலாம். திபெத் பற்றிச் சீன அரசாங்க விளக்கங்களையெல்லாம் அவர் ஏற்கவேண்டியதில்லை. ஆயினும், படித்தாவது பார்த்திருக்கலாம்.

சர்வதேச விவகாரங்கள் பற்றிய கட்டுரைகள் போதியளவிற் தமிழில் வருவது இல்லை என்பதைக் கருத்திற் கொள்ளும் போது, இது போன்ற முயற்சிகள் வரவேற்கத் தக்கனவே. தகவல்களை ஒப்பிட்டு ஆராய்ந்து எழுதும் தேவை புறக்கணிக்கப்படும் போது, யார் கைகளிற் செய்தி நிறுவனங்கள் உள்ளனவோ அவர்கள் தீட்டுஞ் சித்திரத்தையே தமிழ் • மட்டுமே வாசிக்கிறவர்கட்கு முன் வைக்கிறோம்.

## தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்

### சில குறிப்புகள்

மோதல்களும் தீர்வுகளும்



ஆங்கிலத்தில் மாற்றுக் கருத்துக்கான ஏடுகள் பல சிற்றேடுகளாகவேனும் வருகின்றன. தமிழ் வாசகர்கள் மாற்றுக் கருத்துக்களைப் பெறுவதற்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை பெற்ற ஆய்வாளர்கள்உதவ வேண்டும். விமர்சன நோக்கற்ற தகவற் தமிழாக்கங்கள் ஏகாதிபத்திய விரோத நோக்கை மழுங்கடித்து, விடுதலைப் போராட்டத்தினையும் பலவீனப்படுத்துவன.

கட்டுரைகளில் ஒன்றிலேனும் வர்க்கம் பற்றிய பார்வையே காணப்படவில்லை. அங்கு தேசியத்திற்கு தன்னளவிலேயே ஒரு இருப்பு உள்ளது. ஆயினும் பியாஃப்ரா, தீமோர், எரித்திரியா, திபெத், காஷ்மீர் போன்ற இடங்களில் பிரிவினைக்குச் சாதகமாக எழும் வாதங்களை நூலின் ஆசிரியராற் தென்னாபிரிக்காவின் ஸுலூ, ஆபிரிக்கானர்கள் சார்பாக வைக்க இயலவில்லை. பாஸ்குகளின் போராட்டம் சோர்வடைவதிலும் ஆசிரியருக்கு ஆட்சேபனையில்லை. இங்கே தான் தேசம் என்றால் என்ன தேசியம் என்றால் என்ன, எப்போது தேசிய இனவிடுதலை பிரிவினையாக அமையவேண்டியுள்ளது என்ற வாறான கேள்விகள் எழுகின்றன. ''இனத்துவக் கட்சிகளும் சிறுபான்மையினர் வாக்குகளும்'' என்ற கட்டுரையிற் தவறான தகவல்கள் நிறையவே உள்ளன. இந்தியாவில் காங்கிரஸ், பாரதிய ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சிகள் மூன்றும் இனவாரி அணுகுமுறையை உடையன எனும் போது, (ப.117) அத்தகைய கருத்துக் குழப்பம் ஏற்படுகிறது என நான் விவரிக்க அவசியமில்லை. மலேசியாவில் சீனர்களே இடதுசாரி வேட்பாளர்களாக நிறுத்தப் பட்டனர் எனவும் இது மலேசியரை வலதுசாரிகள் என்று காட்டும் முயற்சி எனவும் கட்டுரையாளரால் கூறப்பட்டுள்ளது. (ப.121). இதைவிட அபத்தமான அரசியற் கூற்று இந்த நூலில் வேறெதுவும் இல்லை. மலாயாவில் 1940களில் யப்பானி எதிர்ப்புப் போரில் முன்னின்றவர்கள் கம்யூனிஸ்ட்டுக்களே. இதனாலேயே சீன - மலாய இனப்பகை நஞ்சைப் பரப்பிக் கம்யூனிஸ ஒழிப்புக் கொடுமையை பிரித்தானிய ஆலோசகர்கள் முன்னின்று நடத்தினர். மலேசியாவில் இன்றும் ஆசிரியர் கூறும் ஒரு கட்சி ஆட்சிமுறை இல்லை. அங்கு உள்ளது பல கட்சி வலதுசாரி அரசியல் தான். சிங்கப்பூரில் உள்ளதை வேண்டுமாயின் ஒருகட்சி அரசியல் எனலாம். இலங்கையின் இடதுசாரிகள் பற்றிய கூற்றிலும் வலிந்து இடதுசாரிகள் மீது தாக்குதல் தொடுக்கும் முனைப்பு மிகுதியாகத் தெரிகிறது. தமிழ் நாட்டுத் திராவிட முன்னேற்றக்கழகம் கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தியது முற்றிலும் தமிழ் வாக்காளரது ஆதரவை நம்பியே. அல்லது திராவிட இயக்கத்திற்குத் தமிழரல்லாதோரின் ஆதரவை நம்பியல்ல. திராவிட இயக்கத் தந்தையாகக் கருதப்பட்ட ஈ.வெ.ராமசாமி ''திராவிட நாடாவது வெங்காயமாவது'' என்று எப்போதோ வெகு தெளிவாகச் சொல்லிவிட்டார்.

இறுதிக்கட்டுரை, நுஃமானுக்கு மறுமொழியாக எழுதப்பட்டது. நுஃமானின் கட்டுரையையும் சேர்த்தே பிரசுரித்திருந்தால், நன்றாயிருந்திருக்கும். தமிழ்த் தேசியவாதம், முஸ்லிம்கள் மீது தொடுத்த தாக்குதலில் முஸ்லிம் விரோத இனவாத அரசியலே இல்லை என்பது தான் தமிழ்மாறனின் நிலைப்பாடாயிருக்கையில், முஸ்லிம்களின் தேசிய சுய அடையாளப் பிரச்சினையை அவர் தட்டிக்கழிப்பதில் வியப்பில்லை. தேசியவாதம் இனவிடுதலை என்ற நோக்கிற்கு அப்பால் அடியெடுக்கும் போது, தனது பிற்போக்கு முகத்தைத் தெளிவாகவே காட்டத்தொடங்கி விடுவதைக்கட்டுரையாளர் காணமறுக்கிறார்.

கட்டுரைகளைக் கவனமாக வாசித்து விட்டுத்தான் சிவத்தம்பி மதிப்புரையை எழுதியிருப்பார் என நம்புகிறேன். ஆயினும் இந்த நூல் கூறும் 'உண்மைகள்' யாருடைய உண்மைகள் என்பதைக்கூட அவர் சுட்டிக் காட்டவில்லை. சிவத்தம்பியின் எழுத்தில் ஏகாதிபத்தியம் பற்றிய கண்ணோட்டத்தையே காண முயலாமை ஏமாற்றமளிக்கிறது.

இறுதியாக ஆங்கிலத் தகவல்களைப் பெற்று தமிழில் வழங்கும் பலரது பலவீனங்கள் நூல் முழுவதிலும் உள்ளன. தமிழில் வழங்கும் ஊர்ப்பேர்களும் தமிழ் மொழி வழக்குக்குரிய அயற்பேர் கூறும் முறைகளும், தமிழ்க் கலைச்சொற்களும் கணிசமான அளவிற் புறமொதுக்கப் பட்டுள்ளன. இதற்கு அச்சாரமாகச் சிவத்தம்பியே ''கொலோனியலிச'' என்று ஒன்றைப் போட்டுள்ளார். தமிழின் கலைச்சொற் புனைவில் அவரது அக்கறை காரணமாகவே இது எனக்கு வியப்பளிக்கிறது. இதை விட முக்கியமாக ஆங்கிலமல்லாத அயற்சொற்களை ஆங்கில மொழி பேசுவோர் உச்சரிக்கும் விதமாகவே தமிழிற் தருவது அடிக்கடி இந்நூலிற் காணப்படுகிறது. (உதாரணமாக 66அசாட் காஷ்மீர்' அஸாத் என்றால், சுதந்திர என்று பொருள், 'கௌசா'', ''இபோஸ்'' என்ற சொல்லாக்கங்களில் 'ஹ' மீது ஈழத் தமிழரது 'பகைமையும்' 'இபோ' என்பதை அறிவதில் அக்கறையின்மையும் தெரிகின்றன. இவ்வாறே சுகாட்டோ பற்றியும் 'அரபிக்' மொழி பற்றியும் பேசப்படுகிறது.' தமிழ் மொழி பற்றிய அக்கறையும் பிறமொழிச் சொற்களைச் சரிவர அறிந்து எழுதும் அக்கறையும் தமிழர்கட்கு நன்மை தருவன என்பது என் தாழ்மையான எண்ணம்.

-சி.சிவசேகரம்-



நூல்:சனநாயகமும் மனித உரிமைகளும்
ஆசிரியர்: கலாநிதி நீலன் திருச்செல்வம்
வெளியீடு: இன ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம்,
2, கின்சி ரெறஸ்
கொழும்பு - 8
மென் அட்டை: 200/=
வன் அட்டை: 300/=

தமிழில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மனித உரிமைகள், சனநாயகம் போன்ற தலைப்புக்களில் புலமை சார் அறிவுத் தொகுப்புகள் காணப்படுகின்றன. அதிலும் இலங்கையைப் பொறுத்த வரையில் இத்தகைய நூல்கள் மிகவும் குறைவு. மனித உரிமை, சனநாயகம் போன்ற கருத்துக்கள் தமிழ் மக்கள் மட்டத்தில் அன்றாட விடயங்களாக இருந்த போதும் அவை காலின் கீழ் போட்டு நசுக்கப்பட்டு வரும் விடயங்களாக இருந்தாலும், இவை பற்றிய தத்துவார்த்த ரீதியான புலமைகள், ஆய்வுகள் குறிப்பாக வடகிழக்கிலிருந்து மிகவும் குறைந்த அளவிலேயே வெளிவந்துள்ளன. இந்த வகையில் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் எழுதி பல்வேறு மாநாடுகளிலும் சர்வதேச கருத்தரங்குகளிலும் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளும், பல்வேறு உலக நடப்புக்கள் பற்றிய கண்ணோட்டங்களும் உள்ள ஒரு நூற்றொகுப்பு வெளிவந்துள்ளது. இந்நூல் கலாநிதி திருச்செல்வம் நிர்வாகியுள் ஒருவராக உள்ள இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டவையாக இருந்தாலும் கட்டுரைகள் சனநாயகமும் மனித உரிமைகளும் என்ற கருத்துக்களை நோக்கி ஆற்றுப்படுத்துபவையாக ஒழுங்கமைக்கப் பட்டமைக்கு ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியவர். முதலாவதாக மனித உரிமைகள், சனநாயகம் போன்றவற்றின் அடிப்படையான குடியியல் சமூகம் பற்றிய அடிப்படை அம்சங்களைத் தருவதாக அமைந்துள்ளன. குடியியல் சமூகம் (Civil Society) கட்டியெழுப்பப் பட்டு பிற்பட்ட காலத்திலேயே மனித உரிமைகள் என்ற விடயம் தோன்றினாலும் குடியியல் சமூகம் அதன் தனித்துவத்தைப் பேணவும் அதன் அடிப்படையான தனி மனிதனின் உரிமைகளே அடிப்படையானவை என விளக்குவதாகவும் முதலாவது தொகுதிக் கட்டுரைகள் அமைந்துள்ளன.

இதன் பின்னணியிலேயே இரண்டாவது தொகுதியிலுள்ள கட்டுரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. குடியியல் சமூகம் எந்த அளவுக்கு உரிமைகளுக்கு உரித்துடயவை என்பதை மிகவும் கசப்பான அரசியல், வன்முறை அனுபவங்களூடாகத் தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர். அரசியல் நீரோட்டத்தையும் தனி மனித சமூக எதிர்பார்ப்புக்களையும் கண்டி குடியியல் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட தன்மையும் இராணுவ அணுகுமுறையின் மதியீனம் என்பன பற்றி கடந்தகால விளைவுகளினூடாகவும் அதனால் குடியியல் சமூகத்திற்கு ஏற்பட்ட தாக்கத்தினையும் தர இரண்டாம் பகுதி நூற்படுகிறது, இந்தப்பகுதி யில் உள்ள கட்டுரைகளின் தொகுப்பு அரசியல் தீர்வின்தவிர்க்க முடியாத தன்மை நோக்கி அமைந்துள்ளமை ஆசிரியருக்கு அரசியல் தீர்வின் பாலுள்ள ஆர்வத்தைக் காட்டுவதாகவுள்ளது. மேலும் தத்துவார்த்த ரீதியான சிந்தனைகள், தமிழ் மக்களின் தற்போதைய இருப்பினூடாக வகுத்தியம்பப்பட்டிருப்பது இக்கட்டுரைகளின் சிறப்பு.

சர்வதேச மட்டத்தில் நிலவும் சட்டம், தொடர்புச் சாதனம், பொருளாதாரம் போன்றவற்றின் செல்நெறிகள் இலங்கை போன்ற நாடுகளில் உடனடியாகப் பிரதிபலிப்பதில்லை. இதன் காரண்மாகத் தமிழ்மொழியில் இவை பற்றிய ஆய்வுகள், எண்ணக்கருத்துக்கள் என்பன பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கில அறிவு இல்லையேல் தமிழ் மாணவர்களுக்கு, ஏன் விரிவுரையாளர்களுக்கும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றன. இந்த வகையில் சர்வதேச நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி இலங்கையின் நடப்புக்களை விவரணப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டிருப்பது ஒரு பயன்தரும் நல்முயற்சியாகும். குறிப்பாக ஆசிரியரது விதந்துரைகள் அவர் தமிழில் எதிர்காலத்தில் செய்ய வேண்டி இது போன்ற முயற்சிகளை வேண்டிய நிற்பதாயுள்ளன. இதை ஆசிரியர் கவனிப்பாரென எதிர் பார்ப்போம்.

இறுதிப் பகுதியில் இலங்கையின், தென், தென் கிழக்காசியாவின் சனநாயக ஒட்டங்களில் முக்கியஸ்தர்கள் பற்றிய ஆய்வுக்கருத்துக்கள். அதில் இலங்கையைப் பொறுத்த வரையில் குறிப்பாக தற்போதைய விரக்தியுற்ற அரசியல் சூழ்நிலையில் கடந்தகாலத் தலைவர்கள் பற்றிய கருத்துக்கள். இலங்கையின் எதிர்காலம் பற்றி ஓரளவு நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது. குறிப்பாக நடேசன் அவர்கள் இலங்கையில் சனநாயகத்துக்கும் மனித உரிமைக்கும் ஆற்றியுள்ள பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. சிறைப்படுத்தப்பட்ட குடியியல் சமூகத்தின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு எங்கோ இருந்த கிராம மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோதெல்லாம் அவர்களுக்காக உயர் நீதிமன்றங்களில் போராடியவர். இத்தகைய மாமனிதர் பற்றி அந்தத் தமிழ் மக்களோ ஒன்றுமே அறிகிலர். இந்த ஒருகட்டுரையே இத்தொகுதியின் சிகரமாயுள்ளது.

இந்தக் கட்டுரையில் நூலாசிரியருக்கு இணையாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள் மொழிபெயர்ப்பாளர்களான ஆ. தேவராஜா, அன்ரனி நோபேர்ட் ஆகிய இருவருமாகும். புதிய விடயங்களைத் தமிழில் அறிமுகமாக்கும் பொழுது வரும் எண்ணக்கருக்களை விபரிக்கும் கலைச் சொற்கள் இல்லாத குறையை மொழி பெயர்ப்பாளர்கள் சிறப்பாகக் கையாண்டுள்ளமை மெச்சத்தக்கது. அருவிபோல் தெளிந்த நடை இல்லாவிடினும் கருத்துக்களைச் சிறப்பாக வெளிப்படுத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது. தமிழ் மொழி மூலத்தில் இத்தகைய நூல்கள் வரவேண்டிய அவசரத்தேவையை இந்த மொழிபெயர்ப்பு உணர்த்தி நிற்பதாயுள்ளது. தமிழ் மூல ஆய்வாளர்களும், விரிவுரையாளர்களும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய தேவை இது.

இறுதியாக நூலின் அமைப்புப் பற்றி: முன்னேறி வரும் அச்சுத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையிலும் உயர்ந்த தரத்துடன் அச்சிட்டு, எழிலுடன் வடிவமைக்கப்பட்டு வரும் நூல்களில் ஒன்றாக இந்நூல் அமைகிறது. தரமான பிரதிகள் மென், கடின அட்டைகளில் வெளிவந்துள்ளன. விலை ஒரு சுமையாக இல்லாமல் பரவலாக வாங்கப்படக் கூடியதாக வெளியீட்டாளர்கள் முயலவேண்டும். இல்லையேல் வெளியீட்டாளர்களிடமிருந்து நூலகங்களுக்கு அனுப்பப்பட்டு நூலகத்தட்டுக்களில் பயனற்றுத் தூங்கிக் கொண்டிருக்கும் ''அறிவுப் பெட்டகத்தின்'' இன்னொரு செருகலாக மாறலாம்.

யுவி தங்கராஜா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இனவாதம்: அறிவின்மையால் வரும் மனநோய்!

தங்களின் ''இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்கும்'' என்ற கொள்கை நியாயமானதும் நடு நிலைமை வாய்ந்ததுமாகவே எண்ணத் தோன்றுகிறது. ஆனால் ''சரிநிகர்'' இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதில் எந்த அளவிற்கும் உதவவில்லை என்பதே என்வாதம்.

இப்பத்திரிகையில் வரும் சொற்பிரயோகங்கள் மிகவும் கடுமையானவை; இவை மேலும் எரிச்சலையும் மன அழுத்தத்தையுமே உண்டு பண்ணும். மாறாக அது மன ஆறுதலையோ உள்ளப்பூரிப்பையோ தரமாட்டாது.

தங்களின் பத்திரிகை ஒடுக்கப்பட்ட இனத்திற்கான குரலாகவும், அநியாயத்திற்கு எதிரான குரலாகவும் நீங்கள் கருதக்கூடும், ஆனால், உண்மையிலேயே நீங்கள் உங்கள் இனத்திற்காகவும், உங்கள் உரிமைக்காகவுமே குரல் எழுப்புகிறீர்கள். அத்துடன் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் எதிர்த்துப் போரிட வேண்டும் எனவும் விரும்புகிறீர்கள். இவ்வாறு கூறி மற்ற இனத்தவரை எரிச்சல் அடைய வைக்காதீர்கள்.

இரண்டு இனங்களுக்கிடையே பிணக்குகள் எழும்பொழுது, குறித்த ஒரு இனத்திற்காக மட்டும் குரல் எழுப்புவது அறிவார்ந்த செயலா? நிச்சயமாக அவ்வாறு இருக்க முடியாது. ஏனெனில், பெரும்பாலான பிரச்சினைகள் புரிந்துணர்வின்மையால் எழுபவையே. இனவாதம் புரிந்துணர்வின்மையாலும் பரந்து பட்ட மனப்பான்மை இன்மையாலுமே எழுவது. தாங்கள் நிபந்தனைக்கு உட்படுகிறீர்கள் எனில், உங்கள் மனப்பான்மையை இட்டு நான் மிகவும் வருத்தம் அடைகிறேன்.

இன்றைய உலகில் தெளிவான பரந்துபட்ட விஞ்ஞான ரீதியிலான நடைமுறை வாழ்க்கையுடன் நேரடியாக தொடர்புடைய, பாடசாலைக் கல்வி முறை இல்லை. சகல கல்வி முறைகளும் பாடசாலைகளும் தோல்வியிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனால், சிறுவர்கள் மற்றும் தெளிவான உயர் கல்வி கிட்டாத மத்திய தரப்பட்டவர்கள் ஏன், சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் தங்கள் தங்கள் சமூக ஊடகங்களில் இருந்து தாமாகவே தகவலைப் பெற்று, அதன் உண்மை, பொய் மற்றும் அதனால் உண்டாகும் மனநிலை எண்ணம் என்பவற்றை தாமாக இயல்பாக பெறுகின்றனர். எனவே ஊடகங்கள் தெளிவின்மையாலும் குறுகிய கருத்துக்களாலும் பாதிக்கப்பட்டிருந்தால் இதில் இருந்து தகவலைப் பெறும் சாதாரண மக்கள் எவ்வாறு உயர் மனநிலையைக் கொண்டிருப்பார்கள். மனிதனின் பரிமாணத்தில் உள்ள இயற்கையான மிகப்பெரிய குறைபாடு இது என்கிறேன். எதுவெனில், சகல மனிதர்களும் நல்லவர்கள்; தங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். மற்றவர்களைத் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் கூட்டுறவாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால், அவர்களால் மற்றவர்களை புரிந்து கொள்ள முடியாமல் அவர்கள் எதிரிகளாக, பகைவர்களாகத் தோன்ற, மற்றவர்களுக்கு அவர்கள் எதிரிகளாக பகைவர்களாக தோன்றுகிறார்கள். இதற்கு உண்மையான காரணம் பாடசாலைக் கல்வி முறையின் தோல்வி; விஞ்ஞானக் கல்வி முறையின் தோல்வி, ஏன் இன்னும் விரிவாகப் போனால், வரலாறு, சமூகம், இன்னும் புதிய நாகரீகப் பாதையினுள் சென்று அடையாததன் விளைவு. ஆகவே தவறுகள் செய்வதற்கு அந்நபர்கள் காரணமல்ல, தெளிவாக மனிதர்கள் இன்னும் நல்ல சமூக எண்ணங்களைப் பெறவில்லை எங்களுக்கு யார் மீதும் குற்றங்கூற வேண்டும் எனில் வரலாறின் மீதும், இயற்கையின் மீதும், அதன் ''மெதுவான இயக்கத்தின்'' மீதும் தான் குறை கூற வேண்டும்.

இன்றைய தெளிவான கல்விமுறை அற்ற காலத்தில் மக்கள் சூழலில் உள்ள ஏனைய ஊடகங்களில் இருந்து தான் தகவலைப் பெறுகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் இந்நிபந்தனைக்கு முற்றிலும் உடன்படுபவர்களே. ''முழுப்பத்திரிகைகளும் தொடர்புச்சாதனங்களும் பொறுப்புடன் நடந்து கொண்டிருந்தால் இலங்கையில் இனப் பிணக்குகள் தோன்றியிருக்காது' என்று நீங்கள் எப்போதாவது யோசித்துப் பார்த்திருப்பீர்கள்.


இன்னமும் காலம் கடந்து விடவில்லை. இப்போது கூடச் செய்யலாம். ஆனால் பல்வேறு முரண்பாடுகள் சம்பிரதாயங்கள் தடைகளாக உள்ளன.

நான் உங்களை வேண்டுவது என்னவெனில், இனவாதக் கருத்துக்களை எழுதாதீர்கள். அது சிங்கள நபர் அல்லது தமிழ் நபர் யார் கூறினாலும் பரவாயில்லை. நீங்கள் எழுதாதீர்கள்.

உங்கள் மொழிவர்க்கத்திற்காக எழுதாதீர்கள், உங்கள் சம்பிரதாயங்களுக்காக எழுதாதீர்கள். மாறாக முழுமனித இனத்திற்குமாக எழுதுங்கள். ஆதரவு இழந்து உளவியல் ரீதியாகப் புண்பட்டுள்ள மனிதர்களுக்காக எழுதுங்கள். அவர்களை நீங்கள் புரிந்துகொண்டு எழுதுங்கள். மற்றவர்களை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி எழுதுங்கள். இனவாதம் அறிவின்மையால் வரும் மனநோய் என வாதிடுங்கள். மனித சிறார்களை நல்வழிப்படுத்துங்கள். பல்வேறு சம்பிரதாயங்களால் பிளவுபட்டுள்ள மனிதர்களை மனிதத்துவத்தால் ஒன்றிணையுங்கள். இன்று வரைக்கும் ஆராய்ந்து பகுத்தெடுத்த விஞ்ஞான உண்மைகளை உங்கள் பத்திரிகையில் எளிமையாகப் பிரசுரியுங்கள்.

பத்திரிகைகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். பத்திரிகைகள் இனவாதத்தை வளர்க்கக்கூடாது. தங்களின் பத்திரிகையில் குழந்தை உளவியல் பற்றிய தொடக்கம் நல்ல தொடக்கம். பெண் உரிமை தொடர்பாக கடுமையான சொற்பிரயோகங்களைத் தவிர்த்து புரிந்து கொண்டு எழுதும்படி கூறுங்கள், அல்லது ஒரு பெண் தான் இவ்வாறு உணருகிறாள். ஆண்கள் இவ்வாறு நடக்க வேண்டும் என வேண்டி எழுதும்படி கூறுங்கள். நிச்சயமாக ஒரு சில ஆண்களாவது முரண்பாடுகளில் இருந்து விடுபடுவர். மற்றும் தங்களின் ''இனங்களுக்கிடையேயான சமத்துவம்'' பற்றிய குறிக்கோளுடன் பொருத்தமற்ற தகவல்களே பத்திரிகையில் அதிகம் காணப்படுகிறது.

*ரி.ராஜன்*
*கல்கிஸ்ஸை.*



## சிறுபான்மையினர் பலிக்கடாக்கள்!

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில்கொண்டு அரசாங்க விடுமுறை தினங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்விடுமுறை குறைப்பானது சிறுபான்மையினரை ஏமாற்றமடையச் செய்துள்ளது. தமிழ், முஸ்லிம்களின் சிவராத்திரி, ஹஜ்ஜுப் பெருநாள் விடுமுறைகள் நீக்கப்பட்டுள்ளன. அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எத்தனை வீதப் பங்குகளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு விற்றுள்ளது? ஜும் ஆ நேரத்தில் பாராளுமன்றம் கூடுவதை ஒத்திவைத்தவர்களும், நபி பிறந்த மீலாத் விழா கொண்டாட ஏற்பாடு செய்தவர்களாலும் ஏன் ஹஜ்ஜுப் பெருநாள் விடுமுறையில் கைவைத்ததைத் தடுக்க முடியவில்லை ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று இரண்டு ரக்காஅத் சுன்னது தொழுகையும் அதன் பிறகு கொத்பா பிரசங்கமும் இருப்பதை மறந்து விட்டார்களா? பங்காளிகளே, உரிமைகள் பெறச்சென்ற நாம் விட்டுக்கொடுக்கலாமா? பௌத்தர்களின் போயாதினம் ஒன்றையேனும் குறைக்க அரசுக்கு துணிவு இல்லை. ஏனென்றால், புத்த பிக்குகள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம், பாதயாத்திரை என்று பெரும்பிரளயத்தை ஏற்படுத்தி விடுவார்கள். அதற்குப் பதிலாக சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்கள் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார்கள். அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கவுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகள் சிறுபான்மையினரை நசுக்கும் பெருந்தோட்டமும் பொது நிர்வாகமும். இவர் சாதித்துள்ளார்; நாங்கள் சதிக்கு உள்ளாகி உள்ளோம்.

*எம்.கே.எம். கபீர்*
*அக்கரைப்பற்று -1*

## கமநல சிற்றூழியர்களின் கதி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கமநல கேந்திர நிலையங்களில் கடமை புரியும் சிற்றூழியர்களின் வேதனம் மிக மிக குறைவாகவே உள்ளது. அவர்களுக்கு அரசால் எவ்வித சலுகைகளும் வழங்கப்படுவதில்லை.

நாட்டில் இன்று யுத்தம் என்ற போர்வையில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை அசுர வேகத்தில் ஏறிக்கொண்டே செல்கிறது.

தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என அரசு அறிவிக்கின்றது. ஆனால், கமநல கேந்திர நிலையங்களில் கடமை புரியும் காவலாளி, சிற்றூழியர்களின் மாதாந்த வேதனம் ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்டதாகவே இருக்கிறது. ஏன் இந்த பாரபட்சம்? ஒரு சில கமநல கேந்திர நிலையங்களில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவையும் சம்பளமாக பெறுகின்றனர். எங்கள் சம்பளத்தை அதிகரித்து தாருங்கள் என கமநல கேந்திர நிலைய இயக்குநர் சபையிடம் கேட்டால் எங்களால் முடியாது. அதனை மாவட்ட கமநல சேவை ஆணையாளர் அங்கீகரிக்க மாட்டார் எனக் கூறுவதாக இச்சிற்றூழியர்கள் கூறுகின்றர்.

பல சிற்றூழியர்கள் பல வருடமாக சேவை செய்தும் சம்பள உயர்வு இன்றி இருக்கிறார்கள். தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் உரிமைக்காகவும் சலுகைக்காகவும் குரல் கொடுக்கும் போது இச்சிற்றூழியர்களின் நிலைமையை ஏன் மறந்து விடுகின்றனர்? இவ்விடயத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட தலையிட்டால் நியாயபூர்வமான வேதனத்தைப் பெற முடியும் ஆனால், அவர்களும் பாராமுகமாகவே செயற்படுகின்றனர்.

கடந்த ஐ.தே.க. ஆட்சியின் போது கமநல சேவை நிலையங்களில் லிகிதர்களாகக் கடமை புரிந்த ஊழியர்களுக்கு கமநல சேவை நிலையமும் மாவட்ட கமநல திணைக்களமும் இணைந்து ஒரு அரசாங்க ஊழியர் பெறும் சம்பளத்தையே வழங்கி வந்தது. அதன்பின் பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்ததும் முதல் விடயமாக இவ்விலிகிதர்களை அரசாங்கம் பொறுப்பேற்று நிரந்தர நியமனம் வழங்கியது.

ஆனால், இச்சிற்றூழியர்களுக்காக குரல் கொடுக்க எவரும் இல்லை. எவ்வித அமைப்புகளும் இல்லை. எனவே அரசு இவ்விடயத்தில் கவனம் செலுத்தல் வேண்டும்.

மேலும் இவ்வூழியர்களை அரசு பொறுப்பேற்று நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். அதுவரை மனிதாபிமான அடிப்படையில் ஒரு தொழிலாளிக்கான அடிப்படைச் சம்பளத்தை வழங்குதல் வேண்டும். அரச ஊழியர்கள் பெறும் சலுகைகள் விஷேட கொடுப்பனவுகள் என்பன உள்ளடக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

*கே. ரவிக்குமார்*
*மட்டுநகர்.*

## பூதம் வெட்டிய கிணறு!

1990 ஜூலைக் கலவரத்திற்கு பிற்பட்ட காலங்களில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல்வாதிகளின் கபட நாடகத்தினால் சீர்குலைந்து வந்த தமிழ், முஸ்லிம் ஒற்றுமை அண்மைக்காலத்தில் ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலைக்கு திரும்பிக் கொண்டு வருகிறது. இரு பகுதியினரும் இறந்த காலங்களை நினைத்து வெட்கித் தலைகுனிந்து கொண்டிருக்கின்றனர். இன்னுமொரு இருள் சூழ்ந்த காலம் வரவேண்டவே வேண்டாம் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றனர். அப்பிரார்த்தனைகளை தவிடு பொடியாக்கும் நிகழ்வுகள் மிக அண்மைக் காலத்தில் அரங்கேற்றமாகி விஸ்வரூபம் எடுத்து வருகிறது. அபிவிருத்தி என்ற போர்வையில் காத்தான்குடி நகரில் இருந்து புறப்பட்ட பூதம் தமது அண்மைக் கிராமமான ஆரையம்பதியில் அத்துமீறி பல குழாய்க்கிணறுகளைத் தோண்டியது. இவ்வதிகார துஷ்பிரயோகம் மீண்டும் ஒரு சமூக முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கு ஊக்கியாகப் பயன்படுகிறது.

தமிழர்கள் அரசியல் அநாதைகளாக இருக்கலாம். அதற்காக அத்துமீறல் ஆக்கிரமிப்பை நடாத்துவது நியாயமானதல்ல. மட்டக்களப்பு வாழ் தமிழர்கள் அரசியல் அநாதை என்று ஏன் கூறுகின்றேன் என்றால் பூதம் வெட்டிய கிணறு சம்பந்தமாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளரினால் அரசாங்க அதிபருக்கும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்டது. அவர்கள் எந்தவிமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்நிகழ்வு தெரிந்ததாக காட்டிக்கொள்ளவுமில்லை.

கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து விட்டனர். அசல் பச்சோந்திகள், பாராளுமன்றத்தில் ஒரு கதை, மட்டக்களப்பில் ஒரு கதை, திருகோணமலையில் ஒரு கதை, கொழும்பில் ஒரு கதை, வெளிநாட்டில் ஒரு கதை.

கிணறு வெட்டக் கிளம்பிய பூதத்தின் தற்போதைய செயற்பாடு என்னவென்றால் ஆரையம்பதி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முஸ்லிம் கிராமமான பாலமுனை காங்கேயனோடை மக்களுக்கு புதிய முஸ்லிம் பிரதேச செயலகம் உருவாக்குவது, இவ்விடயம் பற்றிய 22.05.1996ந்திகதி வீரகேசரி பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது அனைவரும் அறிந்திருப்பார்கள். இதன் பின்னணி என்னவென்றால் கிணறு தோண்டிய பூதம் அதை அனுபவிக்கமுடியாமல் ஆரையம்பதி பிரதேச சபைத்தலைவர் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றிபெறும் நிலையில் இருக்கிறார். அவரை 'ஹவாலா' ஊழல்போன்று சரிக்கட்டப் பார்த்தனர், முடியவில்லை. புதிய செயலகம் உருவாக்கும் போர்வையில் கிணறு தோண்டிய பகுதியான ஆரைப்பற்றை கிழக்கு கிராம சேவகர் பிரிவை ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் இருந்து பிரித்து முஸ்லிம் பிரிவுடன் சேர்ப்பது. இந்த புத்தியைத்தான் பூதம் தற்போது கையாளுகின்றது. பூதம் ஜாடிக்குள் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

'வாழ்க தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை'

*இரா. எழில்வேந்தன்.*
*ஆரையம்பதி*

## முடங்கிப் போன கடிதம்!

சமத்துவம், சமாதானம், நீதி, நியாயம், மனித உரிமை, பத்திரிகா தர்மம், கருத்துச் சுதந்திரம் இப்படிப் பல விஷயங்களை நீங்கள் எழுதுகிறீர்கள். உங்களைப் பற்றிய மதிப்பீடுகளைக் கேட்டிருந்தீர்கள். ஆனால், அவற்றில் உடன் பாடான இரண்டொரு கடிதம் மட்டுமே பிரசுரமாகின. எதிர்மறையான கருத்துக்களுக்கு இடமளிக்க நீங்கள் இன்னமும் துணியவில்லையென்பதால் அவ்வாறான கடிதங்கள் உங்களுக்கு எழுதப்பட்டும் அவை மூலையில் முடங்கிப் போயின.

செய்தி வெளியிடுவதிலும் நீங்கள் கடைபிடிக்கும் நேர்மைபற்றி 100வது இதழிலிருந்து ஒரு உ-ம்: இலவன்குளம் படுகொலைபற்றிய செய்தியில் புலிகள் செய்திருக்கலாம் அல்லது செய்யவில்லை என்ற இரு கருத்துக்களும் கூறப்பட்டிருப்பினும் ''ஈழக்காளி.... என்ற தலைப்பு புலிகள்தான் செய்திருப்பார்கள் என நீங்கள் முடிவு செய்தாற்போல் தோன்றுகிறது. எனவே Practice what you preach.

எனினும் 100வது இதழில் பாலகிருஷ்ணன் எழுதிய கட்டுரை பாராட்டுக்குரியது. உங்களைப் போன்ற தகிடுதத்தம் செய்பவர்களுடன் பாலகிருஷ்ணன் எப்படி இணைந்து செயலாற்றுகிறாரோ தெரியவில்லை. உங்களது முரண்பாடுகள் பற்றிய ஏனைய விடயங்களைக் கோடிட்டுக்காட்டுவதற்கு அதற்குரிய சரிநிகர் கைவசம் என்னிடம் இல்லை. உங்களுடைய சில கருத்துக்களுடன் நான் முரண்படினும் பத்திரிகையை ஏனையோருக்கும் வாசிக்கக் கொடுக்கிறேன்.

*ஜே.எம்.*
*14, வீடமைப்புத்திட்டம்*
*ஓமந்தை.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

## மிண்டனாவோ:யுத்தத்திற்கு முடிவு!

செப்.மாதம் 2ம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் தனிநாடு கோரி கடந்த 25 வருடங்களாகப் போராடி வந்த முஸ்லிம்களின் மோரோ தேசிய விடுதலை முன்னணி (MNLF) யின் தலைவர் நூர்மிசுவாரியுடன் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையின் மூலம் கடந்த 25 வருடங்களாக நடைபெற்று வந்த ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். பொருளாதார ரீதியில் ஏற்படுத்தப்பட்ட பாகுபாடுகளும், கிறிஸ்தவர்களின் திட்டமிட்ட குடியேற்றத்தின் காரணமாகவும் தமது தனித்துவத்தையும், சுயநிர்ணய உரிமையையும் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு போராட்டமாக இப்போராட்டம் ஆரம்பமாகியது. 1969ம் ஆண்டு பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியைத் துறந்துவிட்டு மோரோ தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கியதன் மூலம் முஸ்லிம்களின் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய நூர்மிசுவாரி அவர்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இப்போராட்டத்தை நடத்தி வந்துள்ளார்.

இதுவரை 120,000க்கும் 200,000க்கும் இடையிலான உயிர்களைப் பலியெடுத்துள்ள இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர எவ்விதமான முறையான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அக்கினோ அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் போர்நிறுத்தத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது நீடித்து ஒரு நிலையான சமாதான உடன்பாட்டை ஏற்படுத்தக் கூடிய அரசியல் சூழ்நிலையை உருவாக்கக் கூடியதாக அமையவில்லை.

எனினும், கடந்த நான்கு வருடகாலமாக ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பிடல் ராமோஸ் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒரு சாதனையை அவர் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

முரண்பாட்டிற்குட்பட்டுள்ள இருதரப்பினருக்குமிடையில் நம்பிக்கையை ஏற்படுத்துவதில் தான் உடன்பாட்டிற்கான அடித்தளம் உருவாக்கப்படுமென்பது இதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட தென்- ஆபிரிக்க உடன்படிக்கை, பாலஸ்தீன - இஸ்ரேல் உடன்படிக்கை போன்றவற்றிலிருந்து விளங்கிக்கொள்ள முடியும். இத்தகைய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கோ அல்லது உத்தரவாதப்படுத்துவதற்கோ இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்ற மூன்றாம் தரப்பின் தலையீடு அல்லது மத்தியஸ்தம் பயன்பட்டிருக்கிறது.

தமது மக்களின் சுயாதிபத்தியம் இச்சமாதான உடன்படிக்கையின் மூலம் பேணப்படும் என்ற நம்பிக்கை MNLFக்கு ஏற்பட்டமையும், முஸ்லிம் மக்களின் சமத்துவத்தையும், சுயாட்சிக்கான உரிமையையும் அங்கீகரிப்பதற்குப் பதிலாக அரச இராணுவ அடக்குமுறைகளின் மூலம் அவர்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களை ஒரு போதும் அடக்கி அழித்துவிட முடியாது என்ற புரிந்துணர்வு பிலிப்பைன்ஸ் அரசுக்கு ஏற்பட்டமையுமே இச்சமாதான உடன்படிக்கைக்கு மிக முக்கிய காரணியாக அமைந்தன. தமது போராட்டத்தைக் கைவிடுவதன் மூலம் தமது மக்களின் அபிலாஷைகள் தோல்வியுறாது என்ற மனநிலையை MNLFக்கு அரசியல் ரீதியில் உத்தரவாதப்படுத்திய தன்மூலம் நாட்டின் திடகாத்திரமான பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகருவதற்குத் தேவையான சமாதானச் சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக் கொண்டது.

இந்த முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு மிகவும் ஆக்கபூர்வமான வழிகளில் இதுவரை உதவிவந்த லிபியா உட்பட இஸ்லாமிய நாடுகளையே இப் பேச்சுவார்த்தைகளுக்கான நடுவர்களாக ஆக்கியிருக்கிறார் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி. மிந்தனாவோ முஸ்லிம் மக்களின் பலம் வாய்ந்த போராட்ட அமைப்பான MNLF உடன் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு நடுவர்களாக இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு (Organization of Islamic Countries - OIC) ஈடுபட்டதோடு லிபியாவின் தலைவர் கடாபி உட்பட மிந்தனாவோ முஸ்லிம்களின் போராட்டத்திற்கு ஆதரவளித்து வந்த எல்லா சக்திகளினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நேர்மையுடன் நடந்துகொண்டதோடு MNLF இன் எதிர்காலம் பற்றிய நம்பகமான உத்தரவாதத்தை வழங்குவதில் பிலிப்பைன்ஸ் அரசும், அந்நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் வகித்த பங்கு மகத்தானதாகும்.

இச்சமாதான உடன்படிக்கையின் மூலம் கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 14 மாகாணங்களை உள்ளடக்கிய மிந்தனாவோ பிராந்திய சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமான பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இப்பிராந்தியத்தில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்பை முன்னெடுத்துச் செல்ல MNLF இன் தலைமையில் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமான தென் பிலிப்பைன்ஸ் பேரவை ஒன்றும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

81 அங்கத்தவர்களைக் கொண்ட இப்பேரவையில் 44 இடங்கள் MNLF இன் பிரதிநிதிகளுக்கும் 37 இடங்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. MNLF இன் தலைவர் நூர்மிசுவாரி இப் பேரவையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கப்பட்டுள்ளார். இதன் பிரதித்தலைவர் பதவி கிறிஸ்தவ சமூகத்தைச் சார்ந்தவருக்கும், மூன்று உபதலைவர் பதவிகள் அப்பிராந்தியத்தில் வாழ்கின்ற வெவ்வேறு கலாசாரத் தனித்துவங்களைக் கொண்ட இனக் குழுமங்களைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

70இலட்சம் கிறிஸ்தவர்களையும், 30இலட்சம் முஸ்லிம்களையும் கொண்ட இப்பிராந்தியத்தில் முஸ்லிம்கள் மிகவும் செறிவாக வாழ்கின்ற நான்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஒரு பிராந்திய அலகை ஏற்படுத்தி அதன் ஆளுநர் பதவி நூர்மிசுவாரி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மூன்று வருடங்களின் பின் இந்த சமாதானப் பிராந்தியத்திற்கு உட்பட்ட 14 மாகாணங்களிலும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு உருவாகவிருக்கின்ற மிந்தனாவோ பிராந்திய சுயாட்சி அலகுக்கு உட்படுவதா அல்லது வெளியேறுவதா என்பதை ஜனநாயக ரீதியில் முடிவு செய்யக்கூடிய வாய்ப்பு மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வுடன்படிக்கையைச் சிறிய தீவிரவாத அமைப்பான மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணியும், சில கிறிஸ்தவ அமைப்புகளும் நிராகரித்துள்ளன. இவ்வுடன்படிக்கையின் வெற்றியும், தோல்வியும் இதன் இருசாராரும் எவ்வகையில் நேர்மையாகவும், உறுதியுடனும் எதிர்காலத்தில் செயற்பட்டு அப்பிராந்தியத்திற்கு உட்பட்ட எல்லா மக்களினதும் தனித்துவங்களையும், அபிவிருத்தியையும் உத்தரவாதப்படுத்துவார்கள் என்பதில் தான் தங்கியுள்ளது.

இவ்வுடன்படிக்கை தொடர்பாக அறிக்கையொன்றைப் பிலிப்பைன்ஸ் நாட்டின் பாராளுமன்ற சபாநாயகர் ஜோஸ் டி வெனாசியா வெளியிட்டுள்ளார். இச்சமாதான முயற்சிகளுக்கு கடந்த நான்கு வருடங்களாக மிக ஆர்வமுடன் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர். இவரது அறிக்கையில் இலங்கையின் பெயரும் குறிப்பிடப்பட்டு ''இலங்கை போன்ற நாடுகள் பிலிப்பைன்ஸின் இச்சமாதான நடவடிக்கையை ஒரு முன்மாதிரியாகப் பயன்படுத்தி அங்கு நிலவும் பிரச்சினையைச் சமாதான நடைமுறைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும்'' எனக் கூறியுள்ளார்.

இதை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமாதான்மான ரீதியில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளத் தயாரா? அதற்கான ஜனநாயகக் கடமைப்பாடு அவர்களிடம் உண்டா? பிலிப்பைன்ஸ் அரசைப் போல் அவ்வாறான சமாதானச் சூழலை உருவாக்குவதற்கு உகந்த அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தும் தனது பொறுப்பை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு முன்வருமா? என்பவைதான் எமது கேள்விகள்.



## பொங்கல் பானைக்கும் உதை!

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பொலிஸ், அதிரடிப்படை, இராணுவம் ஆகிய மூன்றும் அங்குள்ள தமிழ்ப் பொதுமக்கள் மீது தொடர்ந்து வன்முறை யையும் அடக்குமுறையையும் கட்டவிழ்த்து வருகின்றன.

பெரிய கல்லாறு பொலிஸ் நிலையம் இந்த விடயத்தில் மிகச் சிறப்பாகச் செயல் படுகிறது. கோட்டைக்கல்லாறு, ஒத்தாச் சிமடம் ஆகிய கிராமங்களில் வெளிநாட்டிலிருந்து திரும்புபவர்கள் ரூபா 1500, 2000 என்று கப்பம் கட்ட வேண்டும். பலருடைய பெறுமதியான பொருட்கள் கப்பத்திற்காகப் பறிமுதல் செய்யப்படுகின்றன. பொலிஸ் நிலையத்திலுள்ளவர்கள் பொறுப்பதிகாரியின் சார்பில் கேட்கும் கப்பத்தைக் கொடுத்தே பொருட்களை மீட்க வேண்டிய பரிதாப நிலையிலுள்ளனர் இப்பகுதி மக்கள். இவ்வளவிற்கும் கோட்டைக் கல்லாறில் தான் மட்டக்களப்பு எம்.பி செல்வராஜாவின் வீடு உள்ளது. அவரது உறவினர் சிலர் இவ்வாறு கப்பம் கட்டியுள்ளனர். அவர் ஏனோ பெரிய கல்லாறு பொலிஸ் நிலையத்தின் அட்டூழியங்களைக் கண்டு கொள்வதில்லை.

அதேவேளை இப்பகுதியில் உள்ள கடைக்காரர் அனைவரும் ஆளுக்கு ஐந்து மூடை சீமெந்து உடனடியாகத் தர வேண்டும் எனக் கேட்டுள்ளனர் களுவாஞ்சிக்குடியிலுள்ள அதிரடிப்படையினர். கொடுத்தேயாக வேண்டும் கடைக்காரர்கள். மேல்மட்டத்தில் தட்டிக் கேட்க யாருமில்லை. குறுமண்வெளியிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமிற்கு அப்பகுதி வாவியில் மீன்பிடிக்கும் 34 தோணிச் சொந்தக்காரர்களும் நாளாந்தம் 100 பெரிய மீன்களும், முகாம் பொறுப்பதிகாரிக்கு 25 பெரிய இறாலும் கொடுக்க வேண்டும். மீன் அகப்படாத நாட்களில் சொந்தக் காசைப் போட்டு அவர்கள் வெளியில் இருந்து வாங்கிக் கொடுக்கிறார்கள்.

இத்துடன் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படையினருக்கு புலி எனச் சந்தேகத்தின் பேரில் கொண்டு செல்லப்படுகிறவர்களுக்கு மின்சாரக் கதிரையில் சித்திரவதை நடக்கிறது. எல்லா வகையான சித்திரவதைகளையும் விட இதுவே தாங்க முடியாத சித்திரவதை என பிடிபட்டு விடுதலையாகிய ஒரு இளைஞர் கூறினார். 13 நாள் சிறையில் இருந்த இவர் மடு தோண்ட வைத்து தன்னைக் கொன்று அதற்குள் போட்டு மூடிவிட இருந்த வேளையில் தன்னை ஒரு அதிகாரி காப்பாற்றியதாகக் கூறினார். திருக்கோணமலைக்கும், பொத்துவிலுக்கும் இடையில் அமைந்துள்ளது கோமாரி. இங்குள்ள அதிரடிப்படையினர் அடிக்கடி ஊரணிப்பகுதியில் அடிவாங்கும் காரணத்தினால் இப்போது இப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் (90க்குப் பின்) மீளக் குடியமர்ந்த மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தியே தம் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். கோமாரியிலிருந்து அதிரடிப்படை பொத்துவில் செல்வதானால் மக்கள் பாதையோரக்காடு துப்பரவு செய்யும் வேலையில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வேலை முடிய மக்கள் அதிரடிப்படையினர் போய் முடியும் வரை இருமருங்கும் நிற்க வேண்டும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு.

கோமாரி மக்கள் படும் இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல . சகல பயிர்ச் செய்கைக்கும் தடை தொடர்கிறது. ஊருக்குள் புலி வந்து சென்றதாகக் கதை அடிபட்டால் புலிகளுக்குச் சென்றவர்களுடைய பெற்றோர்களுக்குத்தான் அதிரடிப்படை உதைக்கிறது.

ஊர் தொடக்கத்திலுள்ள கோயிலில் சில மாதங்களுக்கு முன் பொங்கல் நடைபெற்றது. அதற்குப் புலி வந்து விட்டதாக பொங்கல் செய்த குடும்பத்துடன் சச்சரவுபட்டிருந்த சில நபர்கள் முகாமிற்குத் தகவல் அனுப்ப அவ்விடம் விரைந்த அதிரடிப்படை பொங்கிக் கொண்டிருந்த அனைவரையும் நையப்புடைத்தது. பொங்கல் பானையை பூட்ஸ் காலால் உதைத்து மண்ணில் பிரட்டிக் கொட்டினர் படையினர்.

- டி. எஸ்

## நூல் வெளியீடு

திருக்கோயில் கவியுவனின்

**"வாழ்தல் என்பது..."**

*சிறுகதைத் தொகுப்பு*

**தலைமை**

பேராசிரியர் கா. சிவத்தம்பி

**விமர்சன உரை**

எஸ். ரஞ்சகுமார், எம். பௌஸர்

கலாநிதி செல்வி திருச்சந்திரன்

**கருத்துரை**

எஸ். சிவநேசச் செல்வன்

வ.ஐ.ச. ஜெயபாலன்

**இடம்**

இராமகிருஷ்ணன் மிஷன்

(கருத்தரங்கு மண்டபம்)

**காலம்**

22-09-1996 (ஞாயிறு)

பி.ப.5.00மணிக்கு

"ஆலம் விழுதுகள்" கலை இலக்கிய வட்டத்தினரால் விரைவில் கவிதை மாத்திரம் அடங்கிய சஞ்சிகையொன்று வெளியிடப் படவிருக்கின்றது. ஆர்வமுள்ள கவிஞர்கள் பின்வரும் முகவரிக்கு தாமதியாது கவிதைகளை அனுப்பி வைக்கலாம். இன, மத பேதமற்று யாவருக்கும் இடம் கொடுக்கப்படும்.

முகவரி:

**"கவிதைகள்"**
**ஆலம் விழுதுகள் கலை**
**இலக்கிய வட்டம்,**
**சாகாம வீதி,**
**அக்கரைப்பற்று -08.**

பேராதனைப்பல்கலைக்கழக சங்கீத நாட்டியச்சங்கம் தமது ஆண்டுமலரான ''கீதம்'' வெளியீட்டு நிகழ்வையொட்டி கவிதைப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர்ந்த எழுத்தாளரும் இதில் கலந்து கொள்ளலாம். ஆக்கங்கள் சொந்த ஆக்கங்களாக இருக்க வேண்டும். விடய எல்லை வரையறுக்கப்படவில்லை. அனைத்துப் படைப்புகளும் தட்டச்சுக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதப்படவேண்டும்.

கவிஞரின் பெயர், முகவரி, என்பன வேறொரு தட்டச்சுக் கடதாசியில் எழுதப்பட்டு ஆக்கத்தோடு இணைத்து 30 - 11 - 1996க்கு முதல் அனுப்பப்பட வேண்டும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி.

**செயலாளர்,**
**சங்கீத நாட்டிய சங்கம்,**
**தமிழ்த் துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

## உப்பளமும்......

கிடைத்த ஐ.ஆர்.சிக்கள் என ஒரு தொழிலாளி கூறினார்.

### *கடத்தல் மன்னர்கள்:*

மன்னார்த்தீவில் சென்ற வருடம் குறிப்பிட்ட ஒரு மீன் வியாபாரி தனக்குக் கொடுக்கப்பட்ட உப்பினைக் கற்பிட்டிக்குக் கடத்தி உப்பு வியாபாரம் செய்தார். (அரச அதிபரால் மன்னார்த்தீவில் இருந்து உப்பு வேறிடங்களுக்குக் கொண்டு செல்லத்தடை உள்ளது) இவருக்கு அதிக அளவான உப்பு கொடுக்கப்பட்டது ஏன்? மர்மமான கதையில் இதுவும் ஒன்று.

### *உப்போ உப்பு:*

உப்பளத்து ஓ.ஐ.சி சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்துகிறாராம். ஈரஉப்பு எல்லாம் போட்டு மேலும் மண்ணுடனும் சேர்ந்து நிறுத்து வியாபாரத்தை நடாத்தி முடிக்கிறாராம். பாதிக்கப்படுவது மக்கள். சாதிக்கப்படுவது ஓ.ஐ.சியின் பொக்கட்டில் பணமாம்.

### *அரசியல் வாதிகள் வருவதில்லை*

மன்னார் உப்பளத்தில் வேலை செய்த உப்பு நீர் இறைக்கும் இயந்திரங்கள் இயங்காது உள்ளன. அரச அதிபர் அரசியல்வாதிகள் உப்புக்கூட்டுத்தாபனம் எவருமே இதில் அக்கறை எடுக்கவில்லையாம். அரசியல்வாதிகள் இவ்விடம் வருவதில்லை. வன்னிமாவட்ட எம்.பி.என ஒரு போர்ட்பலகை கச்சேரியில் தொங்குகின்றது. அந்த எம்.பி. இந்தப் பக்கம் ஒரு போதும் வந்தது கிடையாது.

### *இப்படியும் செய்யலாம்.*

மன்னார் மாவட்டத்தைப் போல் உப்பில் அபிவிருத்தி செய்யக்கூடிய வேறு பகுதிகள் இல்லை. 'உப்பில்லாப்பண்டம் குப்பையில்லே' என்பது முதுமொழி. எருக்கலம்பிட்டியில் தரிசு நிலத்தில் அதிகளவான உப்பு விளைகின்றது. இதனை எடுத்து அபிவிருத்தி செய்தால் மன்னார்த்தீவு பெருமளவு உப்பினை பிறமாவட்டத்துக்கும் ஏற்றுமதி செய்யலாம். அரசஅதிபர் அரசியல்வாதிகள் இந்த மண்ணில் அக்கறை வைத்தால் உப்பு விசயத்திலாவது மன்னாரில் அபிவிருத்தியைக் காணலாம்.

ஆனால், வெட்டி அள்ளும் ஓ.ஐ.சியும் முதலாளிகளைக் கவனிக்கும் நல்ல கச்சேரியும் இருக்கும் வரை இது சாத்தியம் ஆகுமோ? சந்தேகம்தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்